விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka


# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk



WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan05@gmail.com



சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2048 மார்கழி 09 ஞாயிற்றுக்கிழமை (24.12.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 005


## வரலாற்றில் பல பிழைகள் இடம்பெற்றிருக்கலாம்
# அவற்றை சிந்திப்பது அவசியமற்ற ஒன்று



### யாழில் வைத்து சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)வரலாற்றில் பல பிழைகள் இடம்பெற்றிருக் கலாம். ஆனால் கடந்த காலத்தில் இடம்பெற்ற தவறுகள் குறித்து சிந்திப்பது அவசியமற்ற விடயம். எனவே எதிர்காலத்தை கருத்தில் கொண்டு நாம் ஒன்றிணைந்து செயற்படுவோம் என யாழில் வைத்து தெரிவித்தார் சபாநாயகர் கரு ஜெயசூரிய. (15-ம் பக்.)

## நத்தாரை முன்னிட்டு 500 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

(கொழும்பு)

இயேசு பாலகன் பிறப்பான நத்தார் பண்டிகையை முன்னிட்டு சுமார் 500 சிறைக்கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

ஜனாதிபதியின் பொது 16☛

நாட்டின் அபிவிருத்திக்கு

## அனைத்து மக்களும் ஒன்றிணைக - கூரே

(யாழ்ப்பாணம்)

அழகான சிறிய நாட்டிலே நிலையான நீண்ட அபிவிருத்தியைக் கொண்டு வருவதற்கு எல்லோரும் ஒரு தாயின் பிள்ளைகளாக 15☛

## பிக்குவின் தகனம் சட்டத்திற்கு முரணானது

சீ.வீ.கே.சிவஞானம்

(யாழ்ப்பாணம்)

ஆரியகுளம் நாக விகாரையின் முன்னாள் விகாராதிபதியின் உடலை பொதுமக்கள் நடமாடும் பொது இடமான மற்றும் இந்து ஆலயம் அமைந்துள்ள 16☛

## வடக்கு மக்களின் தேவைக்காக போதனா வைத்தியசாலை அபிவிருத்தி

### சுகாதார பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சகல வளமும் பொருந்திய வைத்தியசாலையாக யாழ்.போதனா வைத்தியசாலையினை அபிவிருத்தி செய்து வடக்கு மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்த மத்திய சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்திருப்பதாக சுகாதார பணிப்பாளர் நாயகம் அனில் ஜெயசிங்க தெரிவித்துள்ளார். மேலும் திறந்த இருதய சத்திர சிகிச்சையினை மேற்கொண்ட மருத்துவ குழுவுக்கு பாராட்டும் தெரிவித்துள்ளார்.

வடக்கில் முதற்தடவையாக வெற்றிகரமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற் 15☛

100 கிலோ மாவா பாக்குடன்

## பருத்தித்துறை கடலில் மூவர் நேற்று கைது

(கரணவாய்)

படகு ஒன்றில் மாவா பாக்கினை எடுத்துச் சென்றதாக கூறப்படும் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் 100 கிலோகிராம் மாவா பாக்கும் மீட்கப்பட்டுள்ளது என பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று சனிக்கிழமை பிற்பகல் பருத்தித்துறை இன்பருட்டி கடற்கரையில் இடம்பெற்ற இவ் மாவா பாக்கு மீட்பு தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பருத்தித்துறை இன்ப 15☛

## ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்துக

பிரித்தானிய தூதுவர்

(கொழும்பு)

மனித உரிமைகள் தொடர்பாக ஐ.நாவில் உறுதியளித்த தீர்மானங்களை இலங்கை உடனடியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் ஜேம்ஸ் டோரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள 15☛

உரிமையை வென்றெடுக்க

## தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒன்றிணைய வேண்டும் - மாவை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் துன்பங்களை அனுபவித்துக் கொண்டும் உரிமைக்காக போராடிக் கொண்டும் இருக்கின்ற வேளையில் நாட்டில் சம உரிமையோடு வாழ்வதற்கு தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் தொடர்ந்தும் 15☛

உள்ளூராட்சி தேர்தலை எதிர்கொள்ள

## ஜனநாயக போராளிகள் கட்சி த.தே.கூட்டமைப்புடன் இணைவு

(யாழ்ப்பாணம்)

ஜனநாயக போராளிகள் கட்சி தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டே உள்ளூராட்சி தேர்தலை எதிர் கொள்ளவுள்ளதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

மாட்டின் வீதியில் அமைந்துள்ள தமிழரசு கட்சியின் அலுவலகத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் தமிழரசு கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானத்துடன் இணைந்து பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை 15☛

வவு. புதிய பேருந்து நிலையத்திலிருந்து

## சேவைகள் இடம்பெற்றால் போராட்டம் வெடிக்கும்!

(வவுனியா)

வவுனியாவில் புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து நிலையத்திலிருந்து அனைத்து சேவைகளும் இடம்பெற்றால் போராட்டம் வெடிக்குமென வவுனியா வர்த்தக சங்க காரியாலத்தில் நேற்று இடம்பெற்ற மத்திய குழு கூட்டத்தின் போது மேற்குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இ.போ.ச மற்றும் தனியார் பேருந்துச் சேவை ஆகியவற்றிக்கிடையில் கடந்த 04.02.2017 அன்று வவுனியாவில் புதிய பேருந்து தரிப்பிடம் தொடர்பாக ஏற்பட்ட முரண்பாடு தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது. 15☛

தேர்தல் வன்முறை 56 பதிவு

## முறைப்பாடுகளை பதிவதற்கு விசேட தொ.பே இல. அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சிமன்ற தேர்தல் குறித்து தேர்தல் ஆணைய காரியாலயத்திற்கு இதுவரை 56 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

மேலும் வேட்பாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினை குறித்த முறைப்பாடு செய்ய விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, தேர்தல் தொடர்பில் இதுவரை 16 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய, கடந்த 9 ஆம் திகதி தொடக்கம் இதுவரை, 16☛

## யாழில் கோலாகலமாக இடம்பெற்ற 2017-ம் ஆண்டுக்கான தேசிய மீலாத் விழா

### ஞாபகார்த்த முத்திரையும் வெளியீடு






15☛

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை புவனேந்திரன் (சின்ராசா)

(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர், நல்லூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்)



சைவப்பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கை சேர்ந்த சின்னத்துரை புவனேந்திரன் நேற்று (23.12.2017) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். 0212227837, 0773253831, 0777308354
(1934)

## சேதமடைந்த நாணயத் தாள்களை எதிர்வரும் 31க்கு முன் மாற்றவும்

### மத்திய வங்கி அறிவிப்பு

சேதமடைந்த மற்றும் பேனைகளால் கிறுக்கி மாற்றம் செய்யப்பட்ட நாணயத்தாள்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அருகிலுள்ள வங்கிக் கிளைகளில் மாற்றி கொள்ளுமாறு இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் இவ்வாறான நாணயத்தாள் களை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றம் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நாணயத்தாள்களை வேண்டுமென்றே சேதப்படுத்தல் 1949ஆம் ஆண்டு இலக்க 58 ஆம் நிதி சட்டத்திற்கு அமைவாக தண்டப் பணம் அல்லது சிறைத்தண்டனை வழங்கக்கூடிய குற்றமாகும். (ம)

## நாம் இனவாதியல்ல அமைச்சர் ரிஷாத்

நாம் இனவாதத்தினைத் தூண்டும் இனவாதிகளல்ல, மதவாதிகளாகவும் இன வாதிகளாகவும் சித்தரிக்கப்படுகின்றோம் என அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற தேசிய மீலாத் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது மீள் குடியேறியுள்ள முஸ்லிம் மக்களுக்கு 400 வீடுகளை அமைக்க இந்த மீலாத் விழாவில் திட்டமிட்டிருந்தோம். ஆனால் அதற்குப் பல்வேறு பட்ட தடைகள் ஏற்பட்டிருந்தமையால் அது கைகூடவில்லை.

அதனால் இவ் விழாவில் கலந்து கொண்டிருக்கின்ற பல தமிழ்த் தலைவர்களிடம் கோரிக்கைகளை முன் வைக்கின்றோம்.

மீண்டும் தமது சொந்த மண்ணில் வாழ்வதற்காக வந்து பல இடங்களில் இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு வீடுகளை அமைப்பதற்கு வடக்கு மாகாண சபை நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

எனவே நாம் தற்போது ஆட்சியில் இருக்கும் வட மாகாண சபையிடம் எமது கோரிக்கைகளை முன் வைக்கின்றோம். குறித்த வீடுகளை அமைப்பதற்கான காணிகளை ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக் கொள்கின்றோம். குறித்த வீடுகளை அமைப்பதற்கான நிதி ஒதுக்கீட்டினை எனது அமைச்சின் மூலமாக நான் ஒதுக்கித் தருவேன் என அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.(ம)

**காணி விற்பனைக்கு**
கிளிநொச்சி திருநகரில் வீட்டுடன் காணி விற்பனைக்கு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு:- 0724105043, 0772544733 (கி-872)

**வான் விற்பனைக்குண்டு**



கொழும்பு வத்தளையில் சொந்தப் பாவனையில் உள்ள நல்ல நிலையிலுள்ள வான் விற்பனைக்குண்டு
076 329 7618
(1927)

**தேவை**
பாதுகாப்பு/ பராமரிப்புப் பணியாளர்
எமது விடுதிக்கு மேற்குறித்த பணியாளர் தேவை. கிளிநொச்சி வதிவிட ஆட்கள் விரும்பத்தக்கது.
AKR HOTEL (PVT) LTD
கராடிப்போக்கு, கிளிநொச்சி.
தொலைபேசி இல:-0777899807 (கி-873)

**வாகனங்கள் வாடகைக்கு உண்டு**
கார்கள், வான்கள் நாள், மாத வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம்.
0770295211
RP Rent a Car
(1936)

**சிறுநீரகம் தேவை**
52 வயதுடைய ஆண் ஒருவருக்கு O+ வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
தொடர்புகளுக்கு:-
0212223310, 0779363051
(1928)

**நோயாளர் பராமரிப்பு சேவை**
- உங்கள் வீடுகளுக்கே வந்து நோயாளர்கள்/ முதியோர்கள் பராமரிக்கப்படுவர்
- எங்கள் இடத்திலேயே உங்கள் நோயாளர்கள்/ முதியோர்கள் வைத்தும் பராமரிக்கப்படுவர்.

அழையுங்கள்:-
0778730129

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி சிவலோஜினி சுரேஸ்குமார்

(செல்வா எலக்ரிக்கல்ஸ்-திருநெல்வேலி: உரிமையாளரின் அன்பு மனைவி)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 19 - 12 - 1975 | 24 - 12 - 2013 |



சிவலோஜினி என் சிந்தை நிறைந்தவளே
என்னோடு நீ இருந்த காலம் எல்லாம் என் எண்ணம் விட்டு அகலவில்லை
உள்ளக்கிடங்கினிலே உறைந்து இருக்கு உன் உருவம்
காலக்கொடுமை இது காலன் பறித்துவிட்டான் உன் உடலை
தித்திக்கும் தேனாக நீ உதிர்ந்து விட்ட முத்துக்கள் இரண்டும் என் வாழ்க்கை
பாதைதனை செப்பனிட்டு நிற்குதம்மா
வானத்தில் இருந்து எமை வழிநடத்தி சென்றிடம்மா
ஆண்டு நான்கு போனதம்மா ஆறாது ஆறாது எம் உள்ளம்
அம்பிகையே என் வாழ்வில் வந்தது என்று நான் இருந்தேன்
யார் கண் பட்டதுவோ பாதியிலே சென்றுவிட்டாய் எமை தவிக்கவிட்டு
காய்ச்சல் என்று நீ படுக்க காலன் உனை கவர்ந்து சென்றான்
உள்ளம் பொறுக்குதில்லை என் உத்தமியே
உன் பாச விழி இரண்டிற்காய் காத்து இருக்கும் பாவியானேன்
எம் அன்பு விழிகள் இரண்டிற்காய் எஞ்சி உள்ள காலம் அதை கழித்திடுவேன்
ஆண்டவனாய் நீ இருந்து எமை ஆசீர்வாதம் செய்திடம்மா

கலைவாணி வீதி, சித்தன்கேணி
என்றும் நினைவில் கணவன், பிள்ளைகள்
(1930)

சாதாரணப் பரீட்சையின் பின்னர்...
Diploma in Spoken English
Full / Part time
முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறியானது சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.
IELTS கற்பதுடன் எங்களது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்
கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற
Now prepare for your IELTS Academic / General
Full time / Part time
Next exam date in Jaffna. 20 Jan. 2018, 10 Feb. 2018
idp www. idp.com/srilanka
திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு
IELTS Life Skills A1 B1
ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்
சர்வதேச மொழிக் கற்கைநெறிகள்
ஜேர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி — Deutsch
நெதர்லாந்து மொழிப் பாடநெறி — Dutch
பிரான்ஸ் மொழிப் பாடநெறி — French
BRITISH COLLEGE of Education
More information 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
565, Peradeniya Rd, Kandy. 13, 1st Chapel Rd, Colombo -6
British College of Education - IELTS பரீட்சை நிலையம்
(1929)

# பிலிப்பைன்ஸ் நாட்டை தாக்கிய கோரப்புயலுக்கு 100 பேர் பலி!



(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் தென்பகுதியை சூறையாடிய கோரப் புயலால் ஏற்பட்ட பெருமழை, வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி 100 பேர் உயிரிழந்தனர்.

ஆண்டுதோறும் சுமார் 20 புயல்களை எதிர்கொண்டு வரும் பிலிப்பைன்ஸ் நாட்டின் தென்பகுதியை நேற்று முன்தினம் பிற்பகல் சக்தி வாய்ந்த வெப்பமண்டல புயல் தாக்கியது. டெம்பின் என பெயரிடப் பட்ட புயல் மிண்டானாவ் தீவை துவம்சம் செய்தது. மணிக்கு சுமார் 80 கிலோ மீற்றர் வேகத்தில் புயல் காற்றுடன் பெய்த பெருமழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் பல கிராமங்கள் நீரில் மூழ்கின. தாழ்வான பகுதி யில் குடியிருந்த சுமார் 12 ஆயிரம் மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஆறுகளில் நீர் மட்டம் உயர்ந்ததால் சில கிராமங்களில் கரைபுரண்டு ஓடிய வெள்ள நீரில் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன.

டெல் நார்ட்டே மாகாணத்தில் உள்ள சிபுகோ சலுக் நகரங்களில் முப்பதுக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். நேற்றுப் பிற்பகல் நிலவரப்படி சுமார் 100 சடலங்கள் மீட்கப்பட்டதாக பேரிடர் மீட்பு மற்றும் மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர். (இ-7)

## சு.கவின் தேர்தல் பிரசாரத்திற்கு மகிந்தவின் முகம் அவசியமற்றது



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முகம் அவசியமற்றது எனவும், மகிந்தவின் படத்தை வேட்பாள ர்களின் புகைப்படத்துடன் வெளியிடுவதற்கு கட்சி எந்த வித தீர்மானத்தையும் எடுக்க வில்லையெனவும், சுதந்திர க்கட்சியின் பொதுச் செயலா ளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்கள் மகிந்த ராஜபக்ஷவின் புகைப்படத்தையும் தமது படத்துடன் பிரசாரத் துக்கு பயன்படுத்தலாம் என மேல் மாகாண சபை முதல மைச்சர் இசுறு தேவப்பிரிய அறிவித்திருந்தார்.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது இசுறுவின் தனிப்பட்ட கருத்து. கட்சியின் கருத்தல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## முதலமைச்சர் விக்னேஸ்வரனின் மக்கள் செல்வாக்குக்கு அஞ்சும் அரசியல்வாதிகளே விமர்சிக்கின்றனர்

### ஐங்கரநேசன் காட்டம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஓர் அரசியல்வாதியாகத் தோற்றுவிட்டார் என்று கூறுபவர்கள் முதலமைச்சரின் மக்கள் செல்வாக்குக்கு அஞ்சியே அவ்வாறு விமர்சித்து வருகின்றனர் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக்கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா, முதலமைச்சர் விக்னேஸ்வரன் சிறந்த நீதியரசராக இருந்த போதும் அரசியல் வாதியாகத் தோற்றுவிட்டார் என்று அண்மையில் தெரிவித்திருக்கும் கருத்துக்குப் பதிலளிக்கும் விதமாக, பொ.ஐங்கரநேசன் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஓர் அரசியல்வாதியாகத் தோல்வியடைந்துவிட்டார் எனவும், மத்திய அரசு வழங்கும் நிதியையே சரியாகப் பயன்படுத்தத் தெரியாத முதலமைச்சர் மலேஷியா வழங்கும் நிதியை என்ன செய்வார் என்று புரியவில்லையெனவும் கேலியும் கிண்டலும் தொனிக்கச் சுதந்திரக்கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா பேசியிருக்கின்றார்.

அவர் மட்டுமல்ல, சிங்களத் தரப்பு அரசியல்வாதிகள் பலரும் தமிழ் அரசியல்வாதிகள் சிலரும் முதலமைச்சர் விக்னேஸ்வரனையும் வடக்கு மாகாணசபையையும் விமர்சிக்கும் போக்கு அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. முதலமைச்சரின் மக்கள் செல்வாக்குக்கு அஞ்சும் அரசியல்வாதிகளே மக்கள் மனங்களில் இருந்து அவரைக் கீழிறக்கும் உள்நோக்கில் இவ்வாறு தவறாக விமர்சித்து வருகின்றனர்.

விக்னேஸ்வரன் நீண்டகாலமாகத் தென்னிலங்கையில் வாழ்ந்தவர் என்பதாலும், சிங்களத்தரப்புடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்தமையாலும் அவரைத் தமது விருப்புகளுக்கு ஏற்ப கையாளலாம் என்பதே சிங்களத் தலைமைகளினதும் அவரை முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்கியவர்களினதும் எண்ணவோட்டமாக இருந்தது. ஆனால், இவர்களது எதிர்பார்ப்புகளுக்கு முற்றிலும் மாறாக முதலமைச்சரின் செயற்பாடுகள் அமைந்தன. தமிழ் மக்களின் அரசியல் வேணவாவையும் போரில் அவர்கள் பட்ட ஆற்றொணாத் துயரங்களையும் நேரில் கண்டுணர்ந்த முதலமைச்சர், அவற்றுக்கான நிரந்தரத்தீர்வு வேண்டி உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் குரல் எழுப்ப ஆரம்பித்தார்.

தங்களின் குரலாகவே முதலமைச்சர் இருப்பதை உணர்ந்த மக்களிடையே அவர் மீதான பற்றும் செல்வாக்கும் உயர்ந்தது. முதலமைச்சருக்கு ஏற்பட்டு வருகின்ற செல்வாக்கு, எங்கே மீண்டும் தமிழ்த்தேசியம் பலம்பெற்று விடுமோ என்ற அச்சத்தைப் பேரினவாதச் சிங்கள அரசியல் தலைமைகளிடையேயும், எங்கே தங்களுடைய இருப்பு பறி போய் விடுமோ என்ற அச்சத்தைச் சில தமிழ் அரசியல் வாதிகளிடையேயும் ஏற்படுத்தியுள்ளது.

முதலமைச்சரின் மக்கள் பேராதரவுப் பலத்துக்கு அஞ்சுகின்ற இவர்கள் கூட்டிணைந்து முதலமைச்சரைப் பதவி கவிழ்க்கும் திரைமறைவுச் சதியில் ஈடுபட்டனர். அமைச்சர்கள் மீதான உண்மைக்குப் புறம்பான ஊழல் குற்றச்சாட்டுகளும் அவர்களது பதவி விலகல்களும், அதைத் தொடர்ந்து ஆளுநரிடம் முதலமைச்சர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக் கையளிப்பும் இச்சதியின் சில கட்டங்களே.

முதலமைச்சரைப் பதவி கவிழ்க்க இயலாத நிலையில், இந்தத் தரப்பினரே தற்போது முதலமைச்சர் அரசியலில் தோற்று விட்டதாகப் பரப்புரை செய்ய ஆரம்பித்துள்ளனர்.

அதிகாரங்கள் எதுவும் இல்லாத சுயமாகச் செயற்பட முடியாத மாகாணசபை முறைமையில் உள்ள குறைபாடுகளை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் தனிப்பட்ட குறைபாடுகளாகச் சித்திரித்துக் காட்டி மக்கள் மனங்களிலிருந்து அவரை கவிழ்க்கும் முயற்சியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய பரப்புரைகளின் பின்னால் உள்ள தமிழ்த்தேசிய எதிர்ப்பு அரசியலைத் தமிழ்மக்கள் நன்றாகவே புரிந்து கொள்வார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## ஜனாதிபதி பழைய போத்தல், பத்திரிகை சேகரிக்கும் முதலாளியாக மாறியுள்ளார்

### ஜே.வி.பி தலைவர் கடும் விசனம்

(கொழும்பு)

கடந்த 2011ஆம் ஆண்டுக்கு பின்னர் மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாட்டு ரீதியான அரசியலுடன் தொடர்புடைய எவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணையவில்லை என அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கட்சியில் இருந்து விலகிய மற்றும் விலக்கப்பட்டு வங்குரோத்தான சிலரே அண்மையில் சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பழைய பொருட்களை சேரிக்கும் போத்தல், பத்திரிகை முதலாளியாக மாறியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியை சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 31 பேர் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க இணைந்து கொண்டதாகவும் அவர்களில் சிலர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்துவத்தை பெற்றுக்கொண்டதாக ஜனாதிபதி செயலகம் அண்மையில் வெளியிட்டிருந்த அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலேயே அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

கடந்த 21ஆம் திகதி ஜனாதிபதி செயலகம் வெளியிட்டிருந்த அறிக்கைக்கு அமைய மக்கள் விடுதலை முன்னணியை சேர்ந்த பலர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டனர் என்பது பொய்யானது.

வேறு கட்சிகளில் தேர்தலில் போட்டியிட்டவர்களும், ஜனாதிபதி செயலகத்தில் பணிபுரிவோருமே இவ்வாறு சுதந்திரக் கட்சியில் இணைந்துள்ளதாக அநுரகுமார சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

## மொட்டுக்காக பரப்புரை வேண்டாம் மகிந்தவுக்கு சு.க.மீண்டும் எச்சரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக- ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பரப்புரைகளை மேற்கொண்டால், அவர் கட்சியில் இருந்து நீக்கப்படுவார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் துமிந்த திஸாநாயக்க எச்சரித்துள்ளார்.

"மகிந்த ராஜபக்ஷ இன்னமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராகவே இருக்கிறார். எனவே, உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெறுவதற்கு அவர் பணியாற்ற வேண்டும். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் சார்பில் மகிந்த ராஜபக்ஷ பரப்புரைகளை மேற்கொண்டால், அவர் கட்சியில் இருந்து நீக்கப்படுவார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு ஆதரவளிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை அடையாளம் காணும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவர்கள் கட்சி யாப்பை மீறியமை, ஆதாரங்களுடன் அடையாளம் காணப்படுவர். இந்த திட்டம் ஏற்கனவே வெற்றிகரமாக முன்னெடுக்கப்படு கிறது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## ட்ரம்பின் தீர்மானத்திற்கு எதிராக கொழும்பில் அமைச்சர்கள் கையொப்பம்

### மகஜர் அடுத்த மாதம் அமெரிக்காவிடம்



(கொழும்பு)

ஜெருசலேமை, இஸ்ரேலின் தலைநகரமாக அங்கீகரித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தீர்மானத்துக்கு எதிரான மகஜரில் அமைச்சர்கள் உட்பட மேலும் சில அரசியல் கட்சிகளின் தலைவர்களும், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் கையொப்பமிட்டுள்ளனர்.

இந்தக் கையொப்பமிடும் செயற்பாடு கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது மகஜரில் அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, ரவூப் ஹக்கீம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் உட்பட மேலும் சிலர் கையொப்பமிட்டுள்ளனர்.

இந்த மகஜர், கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் அடுத்த மாதம் கையளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மரண அறிவித்தல்



## திருமதி மகேஸ்வரி சர்வேஸ்வரசெல்வேள்

(ஆசிரியை - சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலை,
(முன்னாள் ஆசிரியை - மயிலணி மகா வித்தியாலயம், சுன்னாகம்)

மாவடி வீதி, சுதுமலை தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சர்வேஸ்வரசெல்வேள் 22.12.2017 அன்று காலமானார்.

அன்னார் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலைகளின் ஆசிரியையும் மயிலணி மகா வித்தியாலயம் (சுன்னாகம்) பாடசாலையின் முன்னாள் ஆசிரியையும் சர்வவேஸ்வரசெல்வேளின் அன்பு மனைவியும் செல்வி ஷஜனியின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி-நாகம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் - கந்தசாமி, பாலசுப்பிரமணியம், யோகேஸ்வரி, விக்கினேஸ்வரன் (Germany), முருகமூர்த்தி (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான துரையப்பா - அன்னமுத்து தம்பதியரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற இராமசாமி, விசாலாட்சி, காலஞ்சென்றவர்களான சதாசிவம் - செல்வரத்தினம் ஆகியோரின் பெறாமகளும் காலஞ்சென்ற நவரத்தினம் (RIMP), இராஜலட்சுமி (நியூசிலாந்து), சிவசுப்பிரமணியம் (U.K), மங்களேஸ்வரி (U.K) ஆகியோரின் அன்பு மருமகளும் இராஜலட்சுமி, கௌரி (Germany), சோதிலிங்கம் (பாதுகாப்பு உத்தியோகத்தர் - மேக்கன்ரைல்), காலஞ்சென்ற சர்வவேஸ்வர ரூபி, சர்வேஸ்வர ஜோய், சர்வேஸ்வர லலிதா, சர்வேஸ்வர விமோசனம், சதீஸ்குமார் (நியூசிலாந்து), ராஜ்குமார் (நியூசிலாந்து), நினேஸ்குமார் (நியூசிலாந்து), அர்ச்சனா (U.K) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சர்வானந்தம், கமலானந்தன், கமலநாதன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஜசிந்தன், நிரோஜா, தர்சிகா, சர்மிலா (U.K), சர்மிலன் (U.K), சர்வன் (U.K), ஜெனேசன் (U.K), உமாஜினி, வச்சலினி, சுலக்சனா, சகானா (Germany), சஞ்சயன் (Germany), சனார்த்தனி (Germany) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மாவடி வீதி,**
**சுதுமலை தெற்கு, மானிப்பாய்.**

**தகவல்:- குடும்பத்தினர்**
**075 764 7889**

(C-870)

# விமலம் திருமண சேவை

**மணமகள் தேவை**

* வயது 34 லண்டன் உத்திரம், செவ்வாய் 02இல், பாவம் 26 1/4 Engineer R.C யும் விரும்பத்தக்கது.
* வயது 30 கனடா சதயம் சூரி+செவ் 10இல், பாவம் 25
* வயது 29 லண்டன் உத்திரம், பாவம் 15
* வயது 39 லண்டன் புனர்பூசம், பாவம் 17
* வயது 30 கனடா அவிட்டம், பாவம் 32, செவ்வாய் 4இல் Now in Srilanka.
* வயது 30 கனடா, கேட்டை, பாவம் 72, செவ்வாய் 7இல்
* வயது 32 கார்த்திகை 2, சுவிஸ், செவ்வாய் 2இல்
* வயது 37 லண்டன், பூராடம், பாவம் 20, செவ்வாய் 2இல்.

அனைவருக்கும் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் மணப் பெண் தேவை.

**மணமகன் தேவை**

* வயது 25 கனடா, திருவாதிரை, பாவம் 26 1/4, Accountant.
* வயது 32 கனடா கேட்டை, பாவம் 54, செவ்வாய் 07 இல், A/L
* வயது 31 ஜேர்மனி மகம் பாவம் 20

அனைவருக்கும் கல்வித் தகைமைக்கு ஏற்ற மணமகன் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் தேவை.

(1923)

vimalam48@gmail.com
077 406 6184(Srilanka),
001 647 718 1542

விமலம் திருமண சேவை.
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

## கடை வாடகைக்கு

பலாலி வீதி, யாழ்ப்பாணம் (அப்பலோ வைத்தியசாலைக்கு அருகாமையில்) கடை வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: (காலை 9.00-5.00)
021 222 9084

(சி-862)

## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

## காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் திண்ணபுரம் சிவனடியார் மடம் திறப்பு விழாவிற்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் "திண்ணபுரம் சிவனடியார் மடம்" திறப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். காலத்தின் தேவையறிந்து சிவனடியாரைப் பேண வேண்டிய கடமை உணர்ந்து திரு.திருமதி சிவஞானம் உமாதேவி தம்பதியினர் ஆற்றிய பணி பாராட்டிற்கும், வாழ்த்துக்கும் உரியதாகும்.

இந்த சிவனடியார் மடமானது சிவனடியார்களுக்கு உரிய முறைப்படி உணவூட்டி கொடுத்து உறையுள் வழங்கி திருவோடும் நிறைவோடும் வாழ வழி செய்யும் அறப் பணியை வழுவாதியற்றி வையத்துளோங்கி வளர குருவருளையும் திருவருளையும் வேண்டி தில்லைக்கூத்தன் திருவடிகளைப் பிரார்த்திப்போமாக. "ஓம் நமசிவாய"

க.கு.க. சிவபாலன்
அடியாருக்கு அமுதூட்டும் அன்னலார், மாணிக்கவாசகர் மடாலய பாதுகாவலர்.

# பாராட்டி மகிழ்கின்றோம்



திரு.
**பாலசுப்பிரமணியம் சுதாகரன்**

அமெரிக்க உலகப் பல்கலைக்கழகத்தினால்
இலங்கை மன்ற கல்லூரி பிரதான மண்டபத்தில்
கடந்த 28.11.2017 ஆம் திகதி அன்று
நடைபெற்ற தொழில் தலைமை சார்
பட்டமளிப்பு விழாவில் கலாநிதி பட்டத்தினைப் பெற்ற
தேசாபிமானியும், பனை அபிவிருத்திச் சபையின்
பொது முகாமையாளரும் ஆகிய
திரு. பாலசுப்பிரமணியம் சுதாகரன்
BBA(Hons), Dip.in.English, M.A
(Distinction), P.G.D in TESL (Merit)
அவர்களை மென்மேலும் பல பட்டங்கள் பெற்று
சிறப்புற வாழ பாராட்டி
மகிழ்கின்றோம்.

-இணுவில் நண்பர்கள்-

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.
**கார்த்திகேசு கோபாலகிருஸ்ணன்**

அமெரிக்க உலகப் பல்கலைக்கழகத்தினால்
இலங்கை மன்ற கல்லூரி பிரதான மண்டபத்தில்
கடந்த 28.11.2017 ஆம் திகதி அன்று
நடைபெற்ற தொழில் தலைமை சார்
பட்டமளிப்பு விழாவில் முதுமாணிப் பட்டத்தினைப் பெற்ற
அகில இலங்கை சமாதான நீதவானும்,
தேசாபிமானியும், பனை அபிவிருத்திச் சபையின்
விரிவாக்க முகாமையாளரும் ஆகிய
திரு.காத்திகேசு கோபாலகிருஸ்ணன்
அவர்களை மென்மேலும்
பல பட்டங்கள் பெற்று சிறப்புற வாழ
வேண்டுமென பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations!

சரசாலை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் சனசமூக நிலையத்தினர்.

# இராசி பலன்

24.12.2017
(மார்கழி 09, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு
சஷ்டி முன்னிரவு 9.51 மணிவரை
சதயம் முன்னிரவு 8.25 மணிவரை,
சுபநேரம் 9.26-10.56 மணிவரை
இராகுகாலம் 4.56-6.26 மணிவரை
திருவெம்பாவை பூஜை ஆரம்பம்
விநாயகர் சஷ்டி விரதம்
வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சந் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ஆயிலியம், மகம் | | ராகு |
| கேது | | | |
| சூரி<br>சுக்<br>சனி | புத | செவ்<br>குரு | |

**மேடம்:** புதிய பொருட் சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்:** கூட்டுத் தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்:** வழிபாடு மகத்துவம் தரும், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, பகையொன்று நட்பாகலாம்,பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கடகம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு, வீண் விரயங்கள் ஏற்படலாம், வீண் விவாதங்கள் ஏற்படலாம்..

**சிம்மம்:** கனவு பலிதமுண்டு, உடல் நலன் சீராகும்,சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், காரிய அனுகூலம் முண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், கொடுக்கல் வாங்கல் ஒழுங்காகும்.

**துலாம்:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம், தாய்வழி ஆதரவு பெருகும், பிள்ளைகளின் நலனில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரிய பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.

**விருச்சிகம்:** வருங்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**தனுசு:** அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், போசன நன்மையுண்டு.

**மகரம்:** காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கலாம், கல்யாணக் கனவுகள் நனவாகும், வாக்கு மேன்மையுண்டு, மாற்று மருத்துவத்தால் உடல் நலன் சீராகும்.

**கும்பம்:** புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம், உடல் நலனில் கவனம் தேவை, ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்:** ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் சிலரின் அன்புக்கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், மனதில் இனம்புரியாத அமைதிக் குறைவுகள் ஏற்படலாம்.

# வடக்கு மக்களின் அடிப்படைத் தேவைகளையாவது நிறைவேற்ற அரசாங்கம் முன்வர வேண்டும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வடக்கு மக்கள் பல்வேறு வாழ்வாதார உதவிகளுக்காக என்னை நாடி வந்து தெரிவிக்கின்ற சோகக் கதைகள் எனது உள்ளத்தை பெரிதும் பாதித்துள்ளன. இந்த மக்களுக்கு என்னால் முடிந்த உதவிகளை ஆற்ற வேண்டுமென்ற அவாவிலேயே மலேஷியப் பிரதமர் அனுப்பிய அழைப்பை நான் ஏற்றேன்.

எனவே எம்மைக் குறைகூறி ஏற்கனவே நொந்துபோன தமிழ் மக்களின் வெறுப்புக்களை மென்மேலும் சம்பாதித்துக் கொள்வதற்குப் பதிலாக உண்மை நிலையை உணர்ந்துகொண்டு இம்மக்களின் அடிப்படைத் தேவைகளையாவது நிறைவேற்றுவதற்கு அரசு முன்வர வேண்டுமென வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்.

நாட்டின் அனைத்துதர மக்களினதும் முன்னேற்றத்திற்கும் மேம்பாட்டிற்கும் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் தினமும் பாடுபடுகின்றவர்கள் என தம்மை அடையாளப்படுத்திக் கொள்கின்ற மத்திய அமைச்சரவையின் அமைச்சர் குழாத்தில் அங்கம் வகிக்கின்ற சுதந்திரக்கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா பத்திரிகை ஒன்றுக்கு. மத்திய அரசாங்கம் வழங்கும் நிதியைப் பயன்படுத்தாத "விக்கி" மலேஷியாவின் நிதியை வைத்து என்ன செய்வார் என்ற வினாக்குறியுடன் வழங்கிய செவ்வியைப்பார்த்து ஆச்சரியமடைந்தேன்.

டிலான் பெரேரா தரவுகள் எதையாவது பெற்று இந்த அறிக்கையை வெளியிட்டாரா? அல்லது எழுந்தமானமாக வடமாகாணசபையைக் குறைகூற வேண்டும் என்ற அபிப்பிராயத்தில் இக்கருத்தைத் தெரிவித்தாரா? அல்லது இலங்கைத் தமிழ் மக்களுக்கு உலக மக்களிடம் இருந்து உதவி கிடைப்பதை எப்படியாவது தவிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவ்வாறு கூறினாரா? அல்லது பத்திரிகைகளுக்கு அவர் கூறியது விளங்கவில்லையா? என்பதை நான் அறியேன்.

எனினும் பொதுமக்களுக்கு அரசின் நாடகப்பாணியிலான பொய்ப்பிரசாரங்களை விளக்குவதற்கு எனக்கொரு சந்தர்ப்பம் வழங்கியமைக்காக டிலான் பெரேராவுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு கடந்த மூன்று ஆண்டுகளில் வடமாகாண சபைக்கு அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை, அதில் வழங்கப்பட்ட கட்டுநிதி செலவழிக்கப்பட்ட தொகை போன்ற விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை அமைச்சரின் பார்வைக்கும் பொதுமக்களின் பார்வைக்குமாக இதன் கீழ் சமர்ப்பிப்பதில் மகிழ்வடைகின்றேன். அதில் மத்திய அரசாங்கம் வழங்கும் நிதியை பயன்படுத்தாதற்குப் பதிலாக மத்திய அரசாங்கம் எமக்குத் தருவதாக உறுதிமொழி அளித்த பணம் இதுவரை வந்து சேராமையே உண்மை என்பது புலப்படும்.

இவ்வருடம் ரூபா 850.12 மில்லியன் அரசாங்கத்திடம் இருந்து எமக்குக் கிடைக்க வேண்டும். இதுவரையில் கிடைக்கவில்லை. கிடைத்த நிதி அவ்வளவும் செலவாகி விட்டது.

முப்பது ஆண்டுகால நீண்ட போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வதிவிடம், தொழில் முயற்சி, வாழ்வாதார நிகழ்ச்சிகளை மேம்படுத்துவதற்காக ஏனைய மாகாணங்களை விட கூடுதலான நிதி வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்ற எமது கோரிக்கை பலமான எதிர்ப்புக்களுடன் மறுக்கப்பட்ட நிலையில் மிக மிக சொற்ப தொகையே வடமாகாணத்திற்கு ஒதுக்கப்படுகின்றது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டிற்குக் கூட முழுமையான நிதி வழங்கப்படுவதில்லை. கீழேயுள்ள அட்டவணையின் பிரகாரம் வழங்கப்பட்ட கட்டுநிதி முழுவதும் செலவு செய்யப்பட்டுள்ளமை அதனூடாக தெளிவாக மக்கள் அறிந்து கொள்ள முடியும். சென்ற வருடம் தரப்பட்ட கட்டு நிதிக்கு மேலதிகமாகச் செலவு செய்யப்பட்டமை புலப்படுகிறது. மேலும் ஒதுக்கப்பட்ட தொகையை பெறுவதற்குக்கூட பலமுறை விண்ணப்பித்து நெருக்குதல்களைக் கொடுத்து வலிந்து பெறவேண்டிய ஒரு கட்டாயத்தில் நாம் உள்ளோம். டிலான் பெரேரா தமக்குத் தெரியாத விடயங்களைத் தெரிந்தவர் போல் பொதுமக்கள் இடையிலே பகர்வதை நிறுத்த வேண்டும்.

அண்மைக் காலத்தில் மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்து அப்பகுதியிலுள்ள மக்கள் பாதிப்புக்களுக்கு உள்ளானபோது அரசு காட்டிய ஆர்வமும் வலிந்து மேற்கொண்ட உதவிகளும் இடரில் அகப்பட்ட மக்களை பாதுகாப்பதற்கான அவசர உதவிகளும் நாடறிந்தவை.

இவை அரசாங்கம் என்ற நிலைக்கு ஒரு படி மேலாக மனிதாபிமான ரீதியில் ஆற்றப்பட்ட சேவைகள் என்பதால் பாராட்டிற்குரியன. ஆனால் 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின்போது இலங்கை இராணுவம் கொத்துக்குண்டுகளை வீசி சுமார் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்ததும் பல இலட்சக் கணக்கான மக்களை நிரந்தர ஊனமுற்றவர்களாக மாற்றியதும் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களின் வாழ்விடங்களை அழித்து மண்ணோடு மண்ணாக்கியதும் எமது இலங்கை அரசிற்கு எந்த வித மனிதாபிமான உணர்வுகளையும் உண்டு பண்ணவில்லை. டிலான் பெரேராவுக்குக்கூட அவ்வாறான மனிதாபிமான எண்ணங்கள் எழுந்தனவோ நான் அறியேன். போர் முடிந்த பின்னராவது எஞ்சியுள்ள மக்களுக்கு இலங்கை அரசு எவ்வகையான உதவிகளை வழங்கியதுஎன்பதனை டிலான் பெரேரா எடுத்துக்கூற வேண்டும். அல்லது அதுபற்றிய விபரப்பட்டியல்கள் இருந்தால் அவற்றையாவது வெளியிட வேண்டும்.

இலங்கையின் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்களுக்கு அரசினால் வலிந்து மேற்கொள்ளப்பட்ட கடுமையான தாக்குதல்கள் வாயிலாக ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு மனமுவந்து மனிதாபிமான ரீதியில் உதவிகளை ஆற்ற வந்த மலேஷிய அரசின் பெருந்தன்மையைக்கூட இராஜாங்க அமைச்சரால் பொறுக்க முடியவில்லை. அவ்வாறான பெருந்தன்மைய்ய ஏற்றுக் கொள்கின்ற மனப்பக்குவமற்ற இவர் போன்றவர்களின் செயற்பாடே தமிழ் மக்களை விரக்தியின் விளிம்பிற்கு கொண்டு சென்றுள்ளது.

வடமாகாணத்தின் முதலமைச்சராக நான் தெரிவு செய்யப்பட்ட அன்றைய தினத்தில் இருந்து இன்றுவரை வடக்கு மக்களுடனேயே நான் வாழ்ந்து வருகின்றேன். வடக்கு மக்கள் பல்வேறு வாழ்வாதார உதவிகளுக்காக என்னை நாடி வந்து தெரிவிக்கின்ற சோகக் கதைகள் எனது உள்ளத்தை பெரிதும் பாதித்துள்ளன.

இந்த மக்களுக்கு என்னால் முடிந்த உதவிகளை ஆற்ற வேண்டுமென்ற அவாவிலேயே மலேஷியப் பிரதமர் அனுப்பிய அழைப்பை நான் ஏற்றேன். அரசிடமும் வெளிநாட்டு இராஜ தந்திரிகளிடமும் மலேஷியப் பிரதமரிடமும் எமது தேவைகளையே தொடர்ந்து முன்வைத்து வருகின்றேன். எந்து நிலையில் டிலான் பெரேரா இருந்திருப்பாரேயாகில் அவரின் கோரிக்கைகளும் நடவடிக்கைகளும் என்னைவிடப் பலமடங்கு கூடுதலாகவும் கூரியதாகவும் அமைந்திருப்பன என்பதில் ஐயமில்லை.

எனவே எம்மைக் குறைகூறி ஏற்கனவே நொந்துபோன தமிழ் மக்களின் வெறுப்புக்களை மென்மேலும் சம்பாதித்துக் கொள்வதற்குப் பதிலாக உண்மை நிலையை உணர்ந்துகொண்டு இம்மக்களின் அடிப்படைத் தேவைகளையாவது நிறைவேற்றுவதற்கு டிலான் பெரேராவும் அவர் சார்ந்த கட்சியின் அமைச்சுக்களும் முன்வர வேண்டும் என அன்பாக வேண்டுகோள் விடுக்கின்றேன் என முதலமைச்சர் விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

## தேசிய பாதுகாப்பு தினத்தை யாழில் அனுஷ்டிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

2004ஆம் ஆண்டு சுனாமிப் பேரலையினால் இலங்கை மற்றும் இந்து சமுத்திர கரையோரப்பகுதிகள் பாரிய உயிரிழப்பு மற்றும் சொத்தழிவுகளையும் எதிர்நோக்கியிருந்தது. இதன் விளைவாக 31.05.2006 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைவாக ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதம் 26ஆம் திகதி தேசிய பாதுகாப்பு தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக அனர்த்தங்களின் போது இறந்தவர்களை நினைவுகூரும் அதேவேளை எமது மாவட்டத்தில் நிலவும் அனர்த்தங்களை கருப்பொருளாக கொண்டு எதிர்காலத்தில் அனர்த்த பாதிப்புக்களை குறைத்தல், தணித்தல், தவிர்த்தல் போன்றவற்றை பலப்படுத்தம் நோக்கில் முன்னாயத்த நடவடிக்கைகள்,விழிப்புணர்வுகளை உருவாக்குவதற்கான சந்தர்ப்பமாகவுள்ளது.

அத்துடன் இந்நினைவு கூரலானது கிராம, பிரதேச, மாவட்ட தேசிய ரீதியில் ஓர் ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பினை அனர்த்த ஆபத்து முகாமைத்துவ செயற்பாடுகளை உள்வாங்குவதற்கான ஓர் செயலாற்றுகையாகவுமுள்ளது.

எனவே இத்தேசிய பாதுகாப்பு தினத்தில் காலை 9.25-9.27 வரையான இரண்டு நிமிடங்கள் அனைவரும் மௌனமாக இருந்து அனர்த்தங்களின் போது இறந்தவர்களை நினைவு கூருவதுடன் சமய நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்து இறந்த ஆத்மாக்களின் சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கான பரிகாரங்களை முன்னெடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து மாவட்டத்தின் அனர்த்த மீட்சி திறனை கட்டியெழுப்புவதற்கு உறுதி எடுத்துக் கொள்வோமாக என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் வலியுறுத்தியுள்ளார். (இ)




சமாதானத்துக்கான சர்வதேச இளைஞர் கூட்டமைப்பு யாழ்ப்பாண செயற்குழுவின் அனுசரணையுடன் யாழ்.பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் யாழ் நகர் மைய றோட்டறக்ட் கழகம் மற்றும் நல்லூர் றோட்டறக்ட் கழகமும் இணைந்து பெண்களுக்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவோம் என்ற தலைப்பில் அண்மையில் கருத்தரங்கு ஒன்றை நடத்தியிருந்தன.

## கைப்பை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

மகேஸ்வரவாசம் இந்து பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சிவசம்பு இரத்தினம் என்பவருடைய கைப்பை யாழ்.பலாலி வீதியில் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி பத்திரிகை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கைப்பையில் வாகன அனுமதிப்பத்திரம், வாகன் வருமான வரிப்பத்திரம் மற்றும் காப்புறுதி அட்டை போன்றவற்றுடன் சிறுதொகை பணமும் காணப்படுகிறது.

கைப்பையின் உரிமையாளர் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் வலம்புரிக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். (இ-10)

# UNIVERSITY OF CAMBRIDGE ENGLISH COURSES @

## Jaffna College - Undergraduate Department in Collaboration with British College of English

எமது வகுப்புக்களில் இணைந்து வாழ்நாள் முழுவதும் பயன்படும் கல்வித் தகைமையை பெற்று பயனடையுங்கள்.

**IELTS**

எமது கல்வி நிலையம் British Council இன் அங்கீகாரம் பெற்ற Registration Centre ஆகும்.

**எம்மிடம் IELTS கல்வி கற்பவர்களுக்கு நாம் வழங்கும் விசேட சலுகைகள்.**

இலவசமாக 2 நூல்கள் வழங்கப்படும்.
British Council இன் Library இல் சென்று நூல்களை வாசிக்க அனுமதி அட்டை
விரும்பிய நேரம் Listening வந்து செய்யக்கூடிய வசதிகள்.

**OUR TARGET IS BAND : 9**

British Council ஒவ்வொன்றும் £ 3000 பவுண்ட்ஸ் பெறுமதியான ஆறு Scholarship களை இந்த ஆண்டில் 2017–2018 வழங்குகின்றது.

**Application Dead Line - 31.05.2018**

Six scholarships* each worth £3,000 will be awarded to students applying to any of the following countries

UK | Australia | Canada | New Zealand | USA




இன்றே எமது வகுப்புக்களில் இணைந்து அதிக புள்ளிகளைப் பெற்று Scholarship ஒன்றை வென்றிடுங்கள்.

**வகுப்புக்கள் 27.12.2017 இல் ஆரம்பம்.**

- சுமார் 40 இலட்சம் மாணவர்கள் ஆண்டு தோறும் Cambridge பரீட்சைகளை எடுக்கின்றனர்.
- சுமார் 13000 பல்கலைக்கழகங்கள் Cambridge ஆங்கிலப் பரீட்சைகளை தமது அனுமதிக்காக ஏற்றுக்கொள்கின்றன.
- 40000 கல்லூரிகளும் நிறுவனங்களும் மாணவர்களை Cambridge பரீட்சைக்காக ஆயத்தப்படுத்துகின்றனர்.

**Cambridge ன் இரண்டு பாடநெறிகளை 27.12.2017 இல் ஆரம்பிக்கின்றோம்**

**Cambridge - Prelimnary English Test (PET)**

- இது ஓர் Intermediate B1. Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை பல்கலைக்கழக அனுமதிக்காக ஏற்றுக்கொள்கின்றன.
- நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாடநெறியைப் பின்பற்றி பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்.

It covers all four language skills (Reading, Writing, Listening and Speaking) and knowledge of grammar and vocabulary.

Exam Date : 15.03.2018
Centre - British Council Colombo.

**FCE Cambridge First Certificate in English**

FCE is an upper intermadiate level exam. It tests the ability to deal confidently with a range of written and spoken. communication. FCE is the most widely taken of the general English exam with over 250,000 candidates every year. This exam is at CEFR Level B2

இது ஒரு சர்வதேசப் பரீட்சையாகும் International Exam. 15000 ற்கு மேற்பட்ட கல்வி நிறுவனங்களும் Employers ம் FCE யை ஏற்றுக்கொள்கின்றன. உலகத்தின் எந்த ஒரு இடத்திலும் சிறந்த ஓர் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள அதியுயர்ந்த தகுதியாகும். இது ஒரு வாழ்நாள் முதலீடு.

**Exam Date : 15.03. 2018**
Centre - British Council Colombo

It covers all four skills Reading and Use of English, Writing, Listening - Speaking

**வகுப்புக்கள் ஆரம்பம் - 27.12.2017**

| Course Schedule | Monday, Tues, Wed, Thurs 11.00 - 1.00 pm | Sat & Sunday 3.00 pm - 6.00 pm |
|---|---|---|

**Jaffna College - Undergraduate Department**
No: 464, Hospital Road, Jaffna.
T.P: 021 222 0384, 077 880 3887

---

## இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

### கம்பி (கேபள்) மற்றும் செய்மதி தொலைக்காட்சி சேவைகளை வழங்குகின்றவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் அறிவித்தல்

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம், இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் சிபாரிசின் பேரில் அமைச்சரினால் வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி, யாரேனும் ஒருவர், இலங்கையினுள் தொலைத் தொடர்புகள் முறைமையொன்றை செயற்படுத்தக் கூடாது என இத்தால் அறிவிப்புச் செய்யப்படுகின்றது.

செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமொன்று இல்லாமல் கம்பி (கேபள்) மற்றும் செய்மதி தொலைக்காட்சி சேவையொன்றை நடாத்திச் செல்லல் இலங்கை தொலைத் தொடர்புகள் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமொன்றாகும்.

செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமொன்று இல்லாமல் கம்பி (கேபள்) மற்றும் செய்மதி தொலைக்காட்சி சேவைகளை நடாத்திச் செல்பவர்களை ஆய்வு செய்வதற்கு இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மின் அஞ்சல் : dgtsl@trc.gov.lk
இணையதளம் : www.trc.gov.lk
தொலைபேசி : 0112689345
பெக்ஸ் : 011-2689341

பணிப்பாளர் நாயகம்
இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
இல. 276, எல்விடிகல மாவத்தை,
கொழும்பு - 08

---

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்:உத்தரம்
கி.பா:10 சூரி செவ் 6 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:பட்டதாரி/அரசதொழில்
தொ.இ: B/8097

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: சூரி செவ் 7 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில்
தொ.இ: B/8098

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:O/L/அவுஸ்திரேலியா PR
தொ.இ: B/8106

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 56 செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ் PR
தொ.இ: B/2371

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 24 செவ் 12 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: HND, BA/தனியார் தொழில்
தொ.இ: G/5867

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 32 செவ் 4 இல்
உயரம்: 150cm
தகைமை/தொழில்: A/L/அரசதொழில்
தொ.இ: G/5870

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 37 செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: HND, BMS
தொ.இ: G/5871

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 77 சூரி செவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: MSc/அரசதொழில் கனடா
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/5872

கல்யாணமாலை
இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# கட்சியை தாரைவார்க்க வேண்டாம் டிலானுக்கு துமிந்த அறிவுறுத்தல்



(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ள கருத்து அவருடைய தனிப்பட்ட கருத்தே அன்றி கட்சியினுடையது அல்லவெனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை எவரும். தாரைவார்க்க வேண்டாம் எனவும் ஸ்ரீல.சு.க.யின் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தெஹிஅத்தகண்டி மற்றும் பதியதலாவ ஆகிய பிரதேச சபைகளுக்கு ஸ்ரீல.சு.கவினால் முன் வைத்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதனால், அப்பிரதேசங்களிலுள்ள வாக்காளர்கள் தமது வாக்குகளை மகிந்த தலைமையிலான பொதுஜன பெரமுனவுக்கு வழங் குமாறு இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இதற்கு மறுப்புத் தெரிவித்து கருத்துக் கூறுகையிலேயே துமிந்த இதனைத் தெரிவித்தார். பொதுஜன பெரமுனவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எந்தவொரு கொடுக் கல்-வாங்கலும் கிடையாது எனவும் நிராகரிக்கப்பட்ட வேட்புமனு தொடர்பில் நீதிமன்றத்தை நாடவுள்ளதாகவும் துமிந்த மேலும் தெரிவித்தார். (இ-7)

# சுதந்திரக் கட்சி தலைவர் பதவியை மகிந்தவுக்கு வழங்க வேண்டுமாம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்க வேண்டும் என கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னர் இது நடக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே சந்திரசேன இதனை தெரிவித்தார்.

எவ்வாறாயினும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த மகிந்த ராஜபக்ஷ, தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேனவிடம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை கையளித்தார். எனினும் பிற்காலத்தில் கட்சியின் தலைவர் பதவி தன்னிடம் இருந்து பலவந்தமாக பறிக்கப் பட்டது என மகிந்த ராஜபக்ஷ தெரி வித்தார்.

மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக அறிவித்து உத்தரவிட வேண்டும் என கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை மகிந்தவின் ஆதரவாளர்கள் சிலர் தொடர்ந்திருந்தனர்.

அந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், வழக்கை தள்ளுபடி செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், எஸ்.எம்.சந்திரசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் தலைவர் பதவியை மகிந்தவுக்கு வழங்க வேண்டும் என்று கூறியுள்ளார். (இ-7)

# சுனாமி அச்சத்தில் நள்ளிரவில் வீடுகளை விட்டு ஓடிய மக்கள்!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களிலுள்ள மக்கள் சுனாமி அச்சம் காரண மாக நேற்று முன்தினம் நள்ளிரவு வீடுகளை விட்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடியதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

மருதமுனை, கல்முனை, அக் கரைப்பற்று, தம்பட்டை, திருக் கோவில், கோமாரி, பொத்துவில் போன்ற கரையோரப் பிரதேசங் களில் வாழும் சில குடும்பங்கள், அச்சம் காரணமாக பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று மீண்டும் காலை வேளையில் தங்களது வீடுகளுக்குத் திரும்பியதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# போதைப்பொருள் மையமாக இலங்கை மகிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

போதைப்பொருள் மையமாக இலங்கை மாற்றமடைந்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றஞ்சுமத்தியுள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அன்று தேயிலை கைத்தொழில் துறையில் உலக பிரசித்தி பெற்றிருந்த இலங்கை இன்று போதைப்பொருள் வர்த்தகத்தின் ஊடாக உலக பிரசித்தி பெற்றுக் கொண்டுள்ளது.

தற்பொழுது இலங்கையில் போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்துள்ளது. மேலும் போதைப் பொருள் விநியோகம் செய்யும் கேந்திர நிலையமாக இலங்கை மாற்றமடைந்துள்ளது.

சதொச நிறுவனத்திற்கு சொந்தமான லொறிகளிலும் போதைப் பொருள் விநியோகம் செய்யப் படுகின்றது. கொள்கலன்களில், லொறிகளில் போதைப்பொருட்கள் மீட்கப்படுகின்றன.



பிடிக்கப்படும் போதைப் பொருட்களுக்கு என்ன நேர்கின்றது என்பது தெரியவில்லை.

எனினும் போதைப் பொருட்களை இல்லாதொழிக்கவும் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும் அரசாங்கத்திற்கு எவ்வித திட்டங்களும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)


## சிறைச்சாலைச் சீர்திருத்தங்கள், புனர்வாழ்வு பிரதமர் அலுவலகம் மீள்குடியேற்ற, இந்து சமய அலுவல்கள அமைச்சு

### புனர்வாழ்வு அதிகாரசபை கொள்கை அபிவிருத்தி அலுவலகம்

வன்முறையினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள வயது வந்தவர்களுக்கும், இளைஞர்களுக்கும் விசேட மீள்-ஒன்றிணைப்பு நிகழ்ச்சித்திட்டம்

சிறைச்சாலைச் சீர்திருத்தங்கள், புனர்வாழ்வு, மீள்குடியேற்ற, இந்து சமய அலுவல்கள் அமைச்சின் புனர்வாழ்வு அதிகார சபையும் மற்றும் பிரதமர் அலுவலகத்தில் உள்ள கொள்கை அபிவிருத்தி அலுவலகமும் இணைந்து மாகாண சபைகளினதும், இந்த மாகாணங்களில் அமைந்துள்ள மாவட்ட நிர்வாகத்துடனும் அத்துடன் சகல அரசாங்க மற்றும் அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களுடனும் வன்முறையினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள வயது வந்தவர்களையும், இளைஞர்களையும் மீள்- ஒன்றிணைப்பதற்காக நிகழ்ச்சித்திட்டமொன்றைத் திட்டமிட்டு அமுல்படுத்தவுள்ளன.

இந்த நோக்கத்திற்காக, கடந்த ஐந்து (5) ஆண்டுகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டுள்ள நம்பகமான சனசமூக மற்றும் சிவில் சமூகத் தாபனங்களுடன் பங்காண்மைகளைக் கட்டியெழுப்புவதற்கு நாம் உத்தேசித்துள்ளோம்.

2011 முதல் வடக்கு மாகாணத்தில் அத்துடன்/ அல்லது கிழக்கு மாகாணத்தில் கிராமிய சனசமூகம், இளைஞர், பெண்கள், சிரேஷ்ட பிரஜைகள், மாற்றுத் திறனாளிகள், மனித உரிமைகள், சமயச் செயற்பாடுகள், சுகநலம், கைத்தொழில் சிறிய தொழில் முயற்சி, பௌதீக அபிவிருத்தி ஆகியன உட்பட மனித அல்லது பௌதீக அபிவிருத்தியின் ஏதாவது துறையிலும் அத்துடன் சனசமூகத்தினுள் நிரூபிக்கப்பட்ட சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டத்திலும் பணியாற்றிய ஆவணப்படுத்தலிலான பதிவொன்றுடன் சட்டபூர்வ அந்தஸ்தொன்றைக் கொண்டுள்ள ஏதேனும் மக்கள் நிறுவனம் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கெடுப்பதற்கு தகுதியைக் கொண்டதாகும். நிறுவனத்தை உருவாக்குகின்ற சட்டபூர்வ ஆவணத்தின் தேவைப்பாடுகளுடனான முழுமையான இணக்கப்பாடு தகுதிக்கு அவசியமானதாகும். வருடாந்தப் பொதுக் கூட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த அறிக்கைகள், வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் ஆகியன அடிப்படையிலான தேவைப்பாடொன்றாகும். உத்தியோகபூர்வமானவை மற்றும் உத்தியோகபூர்வமற்றவை உட்பட சிவில் தாபனத்தினாலும், குழுக்களினாலுமான பரிந்துரை அத்துடன் சனசமூகத்தில் பயனுறுதி வாய்ந்த தலையீட்டின் சான்று ஆகியன அவசியமானவையாகும்.

பின்வரும் விபரங்களை வழங்கி, புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவருக்கு அக்கறையைக் கொண்டுள்ள சனசமூக தாபனங்கள் விண்ணப்பிக்க வேண்டும்:

1. நிறுவனத்தின் பெயர்
2. விலாசம்
3. தொடர்பு நபரின் பெயர்
4. நிறுவனத்தில் அவர் குறிப்பிடப்பட்டுள்ள நபரினால் வகிக்கப்பட்டுள்ள பதவி
5. தொலைபேசி இலக்கம்
6. இந்த நிகழ்ச்சித் திட்டம் மீது பணியாற்றுவதற்கு தாபனம் அக்கறையைக் கொண்டுள்ள கிராம அலுவலர் பிரிவு, பிரதேச செயலகப் பகுதி, மாவட்டம், மாகாணம் (அதிகபட்சமாக 5 கிராம அலுவலர் பிரிவுகள் மட்டுமே காட்டப்பட வேண்டும்)
7. மத்தியஸ்தர்கள்: அ. உத்தியோகபூர்வ
   ஆ. உத்தியோகபூர்வமற்ற
   (பெயர், நிலை, அந்தஸ்து, தபாலிடும் விலாசம், தொடர்பு தொலைபேசி இலக்கம்)
8. நிறுவனத்தின் தற்போதைய பணிக்கான நோக்கின் பிரதானதுறை (உதாரணம்: இளைஞர், பெண்கள், நுண்-தொழில் முயற்சி, சுகாதாரம், சமயம், பௌதீக அபிவிருத்தி போன்ற)

விண்ணப்பங்கள் பின்வரும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படவேண்டும்:

தவிசாளர் , புனர்வாழ்வு அதிகாரசபை
356.B, 2/2.கார்வில் பிளேஸ்,
கொழும்பு -3

தவிசாளர்,
புனர்வாழ்வு அதிகாரசபை.

தலைவர்,
கொள்கை அபிவிருத்தி அலுவலகம்,
பிரதமர் அலுவலகம்.

(அ-867)



## SB Travels and Tours (Pvt) Ltd

தை மாதத்திற்கான விசேட விலைக்கழிவுகளாக சென்னைக்கு

Srilankan Airlines 18500 /- இருந்தும்

Indigo ,Spice jet இலும் 18500/- இருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

சகல நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டுகளை மிகக் குறைந்த விலையில் யாழ்ப்பாணத்தில் தனது கிளைகளைக் கொண்ட Srilankan Airlines இன் நேரடி முகவரான SB Travels and tours (Pvt) Ltd இல் பெற்றுக் கொள்ளலாம்.

(இடைத் தரகர்கள் தேவையில்லை)

மலேசியா, பாங்கொக், இந்தியா போன்ற நாடுகளுக்கு விசா செய்து தரப்படும்.

(அ-863)

நேரடியாக தொடர்பு கொள்வதற்கு-
இல. 212 , கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 021 222 9555
இல. 166, கோயில் வீதி, யாழ்ப்பாணம் 021 222 7666
இல. 324, அலுத் மாவத்தை வீதி , மோதறை, கொழும்பு-15
011 254 0280
இல. 132 , ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-13 - 011 233 3322
077 108 3481 , 077 108 3482, 076 691 1080,
076 691 1081, 82,83, 84, 85, 89, 077 711 1228

# மரண அறிவித்தல்



## வல்லிபுரம் பிரிந்தா

பிறப்பு:
09.08.1993

இறப்பு:
22.12.2017

புலோலி வட கிழக்கு கூழாவடி பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பிரிந்தா 22.12.2017 அன்று அகால மரணமானார்.

இவர் வல்லிபுரம் நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், பிரதீபன் , பிரதீத் (லண்டன்),பிரகாஸ், சதீஸ், பிறேமா ஆகியோரது அன்புச் சகோதரியும் மனோகரன், பாமினியின் மைத்துனியும், சிம்பு, நர்சியின் சிறிய தாயாரும், சாயினியின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

புலோலி வடகிழக்கு,
கூழாவடி, பருத்தித்துறை.

தொலைபேசி
076 534 9308

தகவல்:
குடும்பத்தினர்.

(சி-863)

## தோல்வியடைய காத்திருக்கும் கட்சி உறுப்பினர்களுக்கு சு. க. அழைப்பு

(கொழும்பு)

தோல்வியை சந்திக்க காத்திருக்கும் ஜி.எல்.பீரிஸ் கட்சி உறுப்பினர்களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ள வருமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொது செயலாளரும் அமைச்சருமான துமிந்ததிஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்

அநுராதபுரம் - திரப்பன பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

## ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் அனைத்து வேட்பாளர்களையும் கொழும்பிற்கு வருமாறு அழைப்பு



(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் அனைத்து வேட்பாளர் ளும் ஜனவரி மாதம் 2ஆம் திகதி கொழும்பிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது, கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் விசேட சந்திப்பு ஒன்று வேட்பாளர்களுடன் நடத்தப்படஉள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட உள்ள அனைத்து வேட்பாளர்களும் தங்களது தொகுதிக்கு அர்ப் பணிப்புடன் சேவையாற்றப் போவதாக இதன்போது உறுதிமொழி வழங்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் 8000 இற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்க உள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார். (இ-7)


La Passion
Hair - Beauty - Bridal

### தேவை



யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது LA PASSION சலூனிற்கு முடி திருத்துநர் (ஆண்) உடனடியாக தேவை.

T. P:076 759 3357.

176.K.K.S Road, Jaffna.

(891)



### பதவிவெற்றிடம்

- அலுவக சுத்திகரிப்பாளர் – 8ம் வகுப்பு தகைமை.
- அலுவக உதவியாளர் – O/L தகைமை.
- பயிற்சி ஆசிரியர்கள் (விரிவுரையாளர்கள்) – Diploma / NVQ தகைமை.

# Beauty Culture & Hairdressing - NVQ தகைமை.
# Dressmaking (Tailoring) - NVQ தகைமை.
# Mobile Phone Repairing
# Laptop Repairing
# Marketing Management போன்ற

தொழில் கற்கை நெறிகளுக்கான, விரிவுரையாளர்களுக்கான பதவி வெற்றிடம்.

மேற்படி துறைகளுக்கு தகுதி உடையவர்கள் தகைமை சான்றிதழ்களுடன் 28.12.2017 அன்று 10.00மணி தொடக்கம் 03.00 மணி வரை நேரில் வருகை தரவும்.

மேற்படி துறைகளுக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், போன்ற இடங்களில் இருந்தும் எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.

Yarl International College Of Skills Development

YICSD COLLEGE

இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(... சந்தி Rolex வெதுப்பகத்திற்கும் இடையில்)



### விற்பனை

Lion பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

(1924) T.P:021 222 1273


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 140 | 160 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 70 | 80 | 75 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 500 | 400 |
| தக்காளி | 200 | 160 | 200 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 40 | 40 |
| கோவா | 120 | 120 | 120 | 90 |
| கரட் | 160 | 200 | 200 | 120 |
| பூசணி | 80 | 60 | 80 | 60 |
| புடோல் | 120 | 80 | 100 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 400 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 160 | 160 |
| பாகற்காய் | 200 | 240 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 160 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 80 | 60 |
| பயற்றங்காய் | 200 | 140 | 160 | 200 |
| லீக்ஸ் | 250 | 240 | 300 | 240 |
| பீற்றூட் | 200 | 160 | 200 | – |
| குடைமிளகாய் | 250 | 240 | 250 | 250 |
| முருங்கைக்காய் | – | – | – | – |
| போஞ்சி | 200 | 200 | 200 | 180 |
| கத்தரிதம்புள்ள | 160 | – | 120 | 180 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 60 | 40 |
| தேசிக்காய் | 40 | 50 | 80 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80 | 75 | 90 |
| இராசவள்ளி | 250 | 300 | 300 | 350 |
| வெங்காயப்பூ | 400 | 320 | – | 400 |
| முள்ளங்கி | 120 | 60 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 35 |
| ஈரப்பலா | 70 | 60 | 100 | – |

# இனத்தைக் கூறுபோடும் தமிழரசுக்கட்சியின் இராஜதந்திரம் நிச்சயம் வெறுப்புக்குரியதே




(நேற்றையதொடர்ச்சி...)

போரின் பின்பாக தமிழ்த் தலைமைகளுக்குள் இடம்பிடித்த இருவர், பல அதிர்வுகளை இன்று தமிழ்மக்கள் மத்தியில் உண்டாக்கிக் கொண்டிருக்கின்றனர். அவ் அதிர்வுகள் உவக்கும்படியான அதிர்வுகள் அன்றாம். அவ்விருவருள் ஒருவர் முதலமைச்சர் விக்னேஸ்வரன். மற்றவர் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன். இவ்விருவரும், போர்க்காலத்தில் மக்களோடு இணைந்திருக்காமல், சுமுக சூழ்நிலை ஏற்பட்டபின்பு தலைவர் சம்பந்தனால், அரசியலுக்குள் வலிந்து இழுத்து வரப்பட்டவர்கள். 2009 இல் கஜேந்திரகுமார் கட்சியைவிட்டுப் பிரிய, கட்சிக்கான சட்ட ஆலோசனைகளுக்காக தேசியப்பட்டியலில் பதவி கொடுத்து, சுமந்திரனைக் கட்சிக்குள் அழைத்து வந்தார் சம்பந்தர். அதுபோலவே தம்மோடு சேர்ந்திருந்த மாற்றணியினரை அடக்க, இவரது அறிவும் ஆளுமையும் மக்களிடம்அவர்பெற்று வைத்திருந்த நன்மதிப்பும் உதவும் என நினைந்து முன்னவரைப் போலவே வீடு தேடிச் சென்று முதலமைச்சர் பதவி கொடுத்து, விக்னேஸ்வரனையும் அவரே வலிந்து அழைத்து வந்தார். இராஜதந்திரமாய் நினைந்து சம்பந்தர் இயற்றிய இவ்விரு செயல்களும் இன்று படுதோல்வியில் முடிந்திருக்கின்றன. பட்டறிவு இல்லாத இவ்விருவரது பலமும் இன்று எதிர்மறையாய்ச் செயற்பட்டு, தமிழினத்தையும் கட்சியையும் பாதாளம் நோக்கி நகர்த்துகிறது.

பலதரமாய் முதலமைச்சரின் செயற்பாடுகள் பற்றி விமர்சித்து விட்டபடியால், அவர் பற்றிய விமர்சனங்களைத் தவிர்த்து, சுமந்திரன் பற்றிய கருத்துக்களை மட்டும் இவ்விடத்தில் பதிவு செய்கிறேன். ஆரம்பம் தொட்டு கூட்டமைப்பில் இணைந்த மாற்றணியினரை, சுமந்திரன் துரும்பாக நினைத்தே செயற்பட்டார். அதுமட்டுமன்றி தமிழரசுக்கட்சியின் மூன்றாம் நிலைப்பதவியில் தான் இருந்து கொண்டு, தானே முதல் நிலைப் பதவியாளர் போல அகங்காரத்தோடு செயற்பட்டு வந்தார். முதுமையின் எல்லையில் நின்ற சம்பந்தருக்கு சுமந்திரனின் ஆதரவு தேவையாயிற்று. அதனால் சுமந்திரன் முழுச் சுதந்திரத்தோடு கட்சிக்குள் கட்டவிழ்த்து விடப்பட்டார். பலரும் சுமந்திரனை சம்பந்தனின் கைத்தடி என்றார்கள். இன்றைய நிலையில் சம்பந்தன் கைத்தடியை இயக்குகிறாரா? கைத்தடி சம்பந்தனை இயக்குகிறதா? எனும் கேள்வி, தமிழ்மக்கள் மத்தியில் விஸ்வரூபம் எடுத்திருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது, பல கட்சிகள் ஒன்றுபட்டு அமைந்த ஓர் அமைப்பு. புலிகளே இவ்அமைப்பின்உருவாக்கத்திற்குக் காரணமாய் இருந்தார்கள். இன்று சம்பந்தன் மறுத்தாலும் அவ் உண்மையை அனைவரும் அறிவார்கள். புலிகள் இருக்கும் வரை அமைதியாய் அடங்கியிருந்த கூட்டமைப்புள் இணைந்த கட்சிகள், புலிகளின் மறைவோடு நவக்கிரகங்களாய் ஒருவரோடொருவர் முரண்படத் தொடங்கினார்கள். தாம் தமிழின எழுச்சிக்காய் பாடுபடப் போவதாய் வெளிப்படப் பேசிய அவர்களின் பேச்சில், சத்தியம் துளியும் இருக்கவில்லை. தமிழரசுக்கட்சி உட்பட கூட்டமைப்புள் ஒன்றுபட்டிருந்த அனைத்துக் கட்சிகளுமே, போரின் முடிவின் பின் தத்தம் சுயநலம் நோக்கியே செயற்பட்டு வந்தன. கூட்டமைப்புள் ஒன்றிணைந்திருந்த அனைவர்க்கும்.

மேற்படி கூட்டு ஏதோ வகையில் தேவையாக இருந்தது. அதனால்தான் ஆயிரம் பிரச்சினைகள் இருந்தும் பிரிய மனமின்றி,



**கம்பவாரிதி**
**இ.ஜெயராஜ்**

இன்றுவரை அவர்கள் இணைந்திருக்கின்றனர். அதுதவிர இனத்தின் எழுச்சியோ தமிழ் மக்களின் நல்வாழ்வோ, நிச்சயம் அவர்களது மூலநோக்கமாய் இருக்கவில்லை என்பது சர்வநிச்சயம்.

நீண்ட நாள் மக்கள் மத்தியில் பதிந்த கட்சி என்ற தகுதியையும், ஜனநாயகப் பாதையைவிட்டு விலகாதவர்கள் என்ற தகுதியையும், தமக்கான தனித்தகுதிகளாய்க் கொண்டு, மக்கள் ஆதரவு தமக்கே எனும் உறுதியில் போர் முடிவின் பின்பாக, தன்னிச்சையாய் மாற்றணியினரை அலட்சியம் செய்து செயற்படத் தொடங்கியது தமிழரசுக்கட்சி. அக்கைங்கரியத்தில் தன் முகத்தை முத்திரையாய் பதித்தவர் சுமந்திரனேயாம்! மற்றத் தலைவர்களுக்கு இல்லாத சட்ட அறிவு, உலகத் தொடர்பு போன்ற, தன் தனித்தகுதிகளை வைத்து சம்பந்தனின் தேரோட்டியாய் அமர்ந்த சுமந்திரன், சிறிது காலம் சம்பந்தரின் வழிகாட்டலில் தேரை ஓட்டி, பின்னாளில் தன் இஷ்டத்திற்கு அத்தேரை ஓட்டத்தொடங்கினார். அவ் ஓட்டம் சம்பந்தரின் உடன்பாட்டோடு நிகழ்ந்ததா? இல்லையா? என்பது, இன்றுவரை பலருக்கும் புரியாத புதிராகவே இருக்கிறது.

கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தர் பதவி வகிக்கிறார். தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை தலைமை வகிக்கிறார்.

ஆனால் இவ்விரு கட்சிகள் சார்பான முடிவுகள் எடுக்கப்படுகையில், இவ்விருவரையும் வெறும் பொம்மைகளாக்கி சுமந்திரனே முடிவுகள்எடுப்பதைக் காணமுடிந்தது. போகப் போக கட்சிக்குள் சுமந்திரனின் சர்வாதிகாரம் பகிரங்கமாய் விரியத் தொடங்கியது. பாராளுமன்றத் தேர்தலில் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கையிலும், கட்சி சார்ந்த பதவிகளை நிர்ணயிக்கையிலும், கட்சித்தலைவர்களுடனான உடன்பாடுகளை எட்டுகையிலும், சுமந்திரன் சர்வாதிகாரியாகவே நடந்து கொண்டார். ‘நான் சொன்னால் நீங்கள் கேட்டுக் கொள்ளவேண்டியதுதான்’ என்பதான தொனி அவரது அண்மைக்கால செயற்பாடுகள் அனைத்திலும் மறைமுகமாய் ஒலித்தது உண்மையிலும் உண்மை. தன் குரல், ஓர் ஒப்புக்குத்தானும் தாம் சார்ந்த கட்சியினதோ கூட்டமைப்பினதோ தலைவர்களது குரலாய் ஒலிக்க வேண்டும் எனும் எண்ணம் சுமந்திரனிடம் கிஞ்சித்தும் இருக்கவில்லை. மொத்தத்தில் சந்தர்ப்பம் தந்த பலத்தாலும், சம்பந்தர் தந்த இடத்தாலும், சுமந்திரன் ஜனநாயகப்பாதையை மறந்து போனார் என்பது மனவருத்தத்திற்குரிய உண்மை.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலிலேயே ஆயிரம் குழப்பங்கள். அப்போது சுமந்திரன் அடைந்த வெற்றிகூட பலராலும் ஐயத்துடனேயே பார்க்கப் பட்டது. தேசியப்பட்டியல் எம்.பிகளை நியமிக்கும் விடயத்தில் தன்னிச்சையாய் அவர் முடிவுகளை எடுத்தார். அதனால் ஒன்றுபட்ட கட்சித் தலைமைகளின் மனவெறுப்பை ஏகமாய் சம்பாதித்துக் கொண்டார். மாற்றுக் கட்சிகளுக்குள் மட்டுமன்றி தான் சார்ந்த தமிழரசுக்கட்சிக்குள்ளும், அவரது முடிவுகள் பலரையும் வெறுப்படையச் செய்தன. சாவகச்சேரி தொகுதியில் நாற்பதாயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்று, ஐயத்திற்கிடமான முறையில் தோல்வியைச் சந்தித்த, தமிழரசுக்கட்சியின் வேட்பாளரான அருந்தவபாலனின் தோல்வி, அத்தொகுதியில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. மக்கள் ஆதரவு பெற்ற அவரை நியமன எம்.பியாய்த் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று, இளைஞர் பலர் கொந்தளிக்கத் தொடங்கினர். அப்போது அவ் இளைஞர்களைச் சந்தித்த சுமந்திரன் (தலைவரோ, செயலாளரோ இன்றி), அப்பதவிக்காலம் பகிர்ந்தளிக்கப்படும் எனப் பலர் அறியப் பகிரங்கமாய் அறிவித்து, அக்கொந்தளிப்பை அடக்கினார். ஆனால் அவரது வழமையான வாக்குறுதிகளைப் போலவே, இவ்வாக்குறுதியும் இன்றுவரை நிஜமாகவில்லை.

இன்று அதே தொகுதியில் மீண்டும் குழப்பம்! கட்சியின் தொகுதி அமைப்பாளரான அருந்தவபாலன் மற்றும் சிலருமாக, இரவிரவாக தமிழரசுக்கட்சித் தலைவரின் வீட்டிலிருந்து தயாரித்த வேட்பாளர் பட்டியலை, மறுநாளே தலைவர் மாவை, உடன் இருக்கத் தக்கதாக, சுமந்திரனின் ஆதரவு பெற்றவர் எனும் ஒரே தகுதியைக் கொண்டு, மாகாணசபை உறுப்பினர் சயந்தன், தன் இஷ்டப்படி மாற்றி அமைத்தார் என்கிறார்கள். ஏனென்று கேட்கும் அதிகாரம் இழந்த நிலையில் தலைவராக மாவை பொம்மையாய் இருக்க, அங்கு சுமந்திரனின் அடிப்பொடியின் முடிவே முடிவாயிற்றாம். அக்குளறுபடிகளின் போது தலைவர்கள் கைகலப்பு வரை சென்றதான காட்சிகளை, இணையத்தளங்களும் ஊடகங்களும் பகிரங்கப்படுத்தி பறைசாற்றின.

இப்போது மீண்டும் ஒரு சர்ச்சை. யாழ் மாநகரசபை மேயர் யார்? என்பதில் பெரும் குழப்பம் நிகழத் தொடங்கியிருக்கிறது.

(தொடரும்)

# மங்கையர் நலமோங்கி மாநிலம் சிறக்க வழிகாட்டும் உதயத்தின் முன் மார்கழித் திருவெம்பாவை

மங்கையர் நலமோங்கி மாநிலம் சிறக்க வழிகாட்டும் உதயத்தின் முன் மார்கழித் திருவெம்பாவை பூஜை ஆரம்பம் ஏவிளம்பி வருஷம் மார்கழி 9ஆம் நாள்(24.12.2017) இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் இடம்பெற்று திருவாதிரை உதயம் ஆருத்திரா தரிசனத்துடன் (02.01.2018) செவ்வாய்க்கிழமை நிறைவு பெறுகின்றது.

சிவன்மூவருக்கும்மேலான கடவுள். சைவ சித்தாந்த விதி முறைகளின் படி இறைவன் பிறப்பற்றவன். இதையே "ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதி" அதாவது தொடக்கமும் முடிவும் இல்லாத சோதி வடிவம் என மாணிக்கவாசகர் திருவெம்பாவையின் முதற்பாடலிலேயே மிக அழகாக குறிப்பிடுகின்றார்.

சிவபெருமான் ஒருவனே முதல்வனாம். அழியாப்பொருளாக நிலைபெற்று பின் படைத்தல் தொழிலைச் செய்வதற்கு பிரணவ தத்துவத்தை சார்ந்து நிற்பவன் என்பது சைவ சமயத்தை கடைப்பிடிக்கும் இந்துமத மக்களின் அயராத நம்பிக்கை. இதையே "ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை ஏழைபங்காளனாய் பாடேல் ஓரெம்பாவாய்" என மாணிக்கவாசகர் திருவெம்பாவைப் பாடல்களில் குறிப்டுகின்றார்.



திருவெம்பாவையில் இறைவனின் பெருமைக் கூறி ஆணவமலம் நீங்கப் பெற்ற மனித உயிர்கள் இறைவனை அடைவதையே கருத்தாகக் கொண்டு அதன் அடிப்படையிலேயே திருவெம்பாவையில் வரும் 20 பாடல்களையும் மிகவும் கருத்தாளத்துடன் மாணிக்கவாசகர் இயற்றியுள்ளார்.

இறுதியாக உள்ள பாடலில் போற்றியருள நின் ஆதியாம் பாதமலர் போற்றி என ஆரம்பித்து "போற்றியாம் மார்கழி நீர் ஆடேல் ஓரெம்பாவாய்" என முடிவுறுகின்றது. பெருமானே எம்மைக் காப்பாற்றி ஆதியாயும் அந்தமுமாய் உள்ள பாதங்கள் காக்க, தோற்றம், காப்பு, அழிவு மூன்றிற்கும் காரணமான பாதங்கள் காக்காமல் பிரமன் காணாத பாதங்கள் காக்க நாங்கள் உய்ந்து பிழைக்க ஆட்கொண்டருளும் பாதங்கள் காக்க என்றும் நாம் நீராடி மார்கழி நீருக்கு வணங்குவோம் என்றும் வீதியிலே சேர்ந்து செல்லும் பல மங்கையர்கள் தம் தோழியரைத் துயிலெழுப்பி மார்கழி நீராடச் செல்லும் காட்சிகள் பல படியாகச் சித்திரித்துக் காட்டப்படுகின்றன. பாவை நோன்பு "மார்கழி நோன்பு" கார்த்தியாயினி விரதம் என்பதுமாம்.

திருவாசகத்திற்கு உருகாதவர் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது ஆன்றோர் வாக்கு. இதனால் திருவாசகம் என்னும் அரும் பெரும் தேன் நமக்கு கிடைத்தது. தனது அனுபவங்களை பாடல்களாக்கி மக்களை இறை வழிபாட்டில் ஈடுபடச் செய்தார். அந்தப் பாடல்களே மணிவாசகங்கள் ஆகின. திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, திருவாசகம் போன்ற பாடல்களைப் பாடிய மாணிக்கவாசகரது திருவாதவூரடிகள் புராணத்தை படித்துப் பயன் சொல்லும் நிகழ்வுகள் என்றும் இன்றும் எமது சைவ ஆலயங்கள் நிகழ்த்தி வருவதை நாம் கண்கூடாகக் காணலாம்.

மாணிக்கவாசகர் சைவ சமய குரவர்கள் நால்வருள் ஒருவராக திகழ்கின்றார். சைவ சமயத்தை வளர்க்க பல அற்புதங்களை பாரினில் நிகழ்த்தி ஆனி மகத்திலன்று இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

அதிகாலையில் எழுந்து பத்து தினங்களும் மார்கழி குளிர் நீரில் நீராடி ஆலயங்களுக்குச் சென்று மிகவும் பக்தி சிரத்தையுடன் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடி அரும்பெரும் சோதியாகிய சிவனை வணங்கி அவன் அருளைப்பெற சைவ சமயத்தவராகிய நாம் முன்வந்து என்றும் அழியாத சைவசமயத்தை நாட்டில் நிலைபெறச் செய்து மானிடராகப் பிறந்த அனைவரும் இந்த மண்ணிலே நல்ல வண்ணம் வாழ எல்லாம்வல்ல சிவனுடைய பாதங்களைப் பணிந்து அவன் அருள் பெற்று உய்வோமாக!

கந்தையா-கனகசபை ஓய்வுநிலை எழுதுநர்,
பரந்தன் இரசாயன கம்பனி லிமிட்டெட்

# "எந்தக் கடினமான சூழலிலும் பாலஸ்தீனுடன் கைகோர்ப்போம்"

## இலங்கை அரசியல் கட்சிகள் உறுதி

(கொழும்பு)

பாலஸ்தீன விடுதலையை உறுதிப்படுத்தி எந்தக் கடினமான சூழலிலும் பாலஸ்தீனுடன் கைகோர்ப்பதாக இலங்கையின் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளும் தெரிவித்துள்ளதுடன் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அக்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

"உலகின் அபிப்பிராயத்திற்கு மதிப்பளி! கிழக்கு ஜெருசலேத்தை பாலஸ்தீனத்தின் தலைநகராக ஏற்றுக்கொள்" என்ற தொனிப்பொருளில் பாலஸ்தீன் இலங்கை நட்புறவு அமைப்பு ஏற்பாடு செய்திருந்த மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

இலங்கையின் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கைக்கான பாலஸ்தீன் தூதுவர், மதத் தலைவர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் உரையாற்றிய பாலஸ்தீன -இலங்கை நட்புறவு அமைப்பின் தலைவர் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவிக்கையில்,

பாலஸ்தீன நாட்டில் இன்று இடம்பெற்றுவரும் சம்பவங்கள், அழிவுகள், அடக்கு முறைகள் அனைத்திற்கும் எதிராக இலங்கை அரசாங்கம் மிக நீண்டகாலமாகவே குரல் எழுப்பி வருகின்றது. கடந்த காலங்களில் நாம் ஒரு குழுவாக பாலஸ்தீனத்திற்கு சென்றோம். அங்கு இடம்பெறும் அழிவுகளை நாம் கண்களால் அவதானிக்க முடிந்தது. இஸ்ரேல் அரசாங்கதின் ஆக்கிரமிப்பு, இஸ்ரேல் இராணுவத்தின் அடக்குமுறை, பாலஸ்தீன வேலைத்திட்டங்கள் அனைத்தையும் கைப்பற்றி அம்மக்களை அடிமைகளாக்க மாற்றும் செயற்பாடுகளை நாம் உணர்ந்தோம். இவ்வாறான நிலையில் இவர்களின் ஏகாதிபத்திய சக்தியை எதிர்த்து முழு உலகமுமே திரும்பியுள்ளது.

பாலஸ்தீன மக்கள் இன்று ஆயுதத்துடன் போராடவில்லை, கற்களை கொண்டும் சிறிய தடுப்பு ஆயுதங்களை கொண்டுமே அவர்கள் போராடி வருகின்றனர். இவற்றை உணர்ந்த எவருக்கும் பாலஸ்தீனத்தை ஆதரிக்காது இருக்கவே முடியாது. இந்த உலகில் தனிமையாகும் இஸ்ரேல் அரசாங்கத்தை காப்பாற்ற இன்று அமெரிக்கா முன்னெடுக்கும் முயற்சிகளின் முக்கியமான ஒன்றாகவே இப்போது ஜெருசலேம் இஸ்ரேலின் தலைநகர் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இதற்கு அனைத்து நாடுகளும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றன. மேலும் ஐக்கிய நாடுகள் சபை கூட இன்று அமெரிக்காவின் செயற்பாட்டை நிராகரித்து விட்டது. ஆகவே ஏகாதிபத்திய நாடுகளான இவை இரண்டு நாடுகளும் என்ன செய்தாலும் நாம் உலக நாடுகளுடன் கைகோர்த்து பாலஸ்தீன உரிமைக்காகவும், சுதந்தரத்திற்காகவும் எந்தவொரு கடினமான சூழலிலும் ஒன்றிணைந்து செயற்படுவோம் எனத் தெரிவித்தார்.

பாலஸ்தீன -இலங்கை நட்புறவு அமைப்பின் செயலாளரும் ஜே.வி.பி யின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க உரையாற்றுகையில்,

நடுவுநிலையாகவும், மனிதாபிமான நீதியிலும் சிந்திக்கும் நாடுகளே உலகில் அதிகமாக உள்ளன என்பது தற்போது பாலஸ்தீன விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்காவின் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு இஸ்ரேல் அரசாங்கத்தின் அச்சுறுத்தலான செயற்பாடுகளை சிறிதளவேனும் கவனத்தில் கொள்ளாது உலக நாடுகள் அனைத்தும் பாலஸ்தீனத்தின் பக்கம் உள்ளன.

இலங்கையும் அதனை நிரூபித்துக்காட்டியுள்ளது. பாலஸ்தீனத்தின் சுதந்திரம் இன்று பறிபோயுள்ளது என்றால் அதற்கு முதல் காரணம் ஐக்கிய நாடுகள் சபையேயாகும். கடந்த 50 ஆண்டுகளில் முழுமையான ஆதரவு இஸ்ரேலின் பக்கமே இருந்துள்ளது. பாதுகாப்பு சபையின் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் அனைத்துமே இஸ்ரேலின் பக்கமே இருந்துள்ளன. அதன் விளைவே இன்று பாலஸ்தீனம் அழிந்து வரவும் காரணமாக அமைந்துள்ளது.

எனினும் இன்று உலக நாடுகளின் நடுவுநிலையான செயற்பாடுகள் அமெரிக்காவை புறந்தள்ளியுள்ளது. ஆகவே பாலஸ்தீன விவகாரத்தில் நாம் எப்போதும் ஆதரவு கரம் தூக்குவோம் அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை என்றார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் உரையாற்றுகையில்,

ஜெருசலேம்என்பது மூன்று மதங்களின், இரண்டு இனத்தின் சொந்த பூமியாகும். அவ்வாறான பூமியினை ஒரு நபர்களின் கைகளுக்கு கொடுக்கும் முயற்சியில் அமெரிக்க அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. பாலஸ்தீன தலைவர் யசீர் அரபாத் இலங்கைக்கு வந்த நிலையில் அவரை நான் சந்தித்தேன், அப்போது எனக்கு அவர் ஒரு விடயம் கூறினார், அதாவது யுத்தம் ஒன்றை முன்னெடுக்க நாம் கடுமையாக போராட வேண்டும். எனினும் சமாதானத்தை வெற்றி கொள்ள அதை விடவும் அதிகமாக போராட வேண்டும் என அவர் எனக்கு கூறினார்.

இன்றும் அது என் மனதில் உள்ளது. சமாதான நோக்கத்தில் தான் பாலஸ்தீன அரசாங்கம் செயற்பட்டது. எனினும் இன்று சமாதானம் என்ற கனவு துண்டுகளாக சிதறியுள்ளது. இன்று பாலஸ்தீனம் சமாதானம் என்ற கனவினை மறந்துவிட்டது.

அமெரிக்காவின் தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபை நிராகரித்துள்ளது. அமெரிக்காவின் அச்சுறுத்தலான பேச்சுக்களையும் கவனத்தில் கொள்ளாது சர்வதேச நாடுகள் அமெரிக்காவை எதிர்த்து வாக்களித்துள்ளன. இதுவே பாலஸ்தீன் மீதான உலக நாடுகளின் ஒற்றுமையான ஒத்துழைப்புகள் என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். எந்த நிலைமையிலும் பாலஸ்தீனத்தை ஆதரிப்போம் எனவும் தெரிவித்தார். (இ-7)

## காட்டலோனியா பாராளுமன்ற தேர்தல்

# தனிப்பெரும்பான்மை பெற்ற பிரிவினைவாதக் கட்சிகள்

(மாட்ரிட்)

தனிநாடு பிரகடனம் செய்ததால் ஸ்பெயினால் கலைக்கப்பட்ட காட்டலோனியா பாராளுமன்றத்திற்கு நடந்த மறுதேர்தல் வாக்கு எண்ணிக்கையில் பிரிவினைவாத கட்சிகள் தனிப்பெரும்பான்மை பெற்றுள்ளது.

ஸ்பெயினின் தன்னாட்சி பெற்ற மாகாணமான காட்டலோனியா, தனிநாடாக பிரிவது குறித்து வாக்கெடுப்பு நடத்தியிருந்தது. அதற்கு 90 சதவிகித மக்கள் ஆதரவாக வாக்களித்திருந்த நிலையில், கடந்த ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி காட்டலோனியா தனிநாடு பிரகடனம் செய்தது. ஸ்பெயினில் இருந்து பிரிந்து சுதந்திர காட்டாலோனியா பிறந்து விட்டதாக பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

தனிநாடு பிரகடனம் அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களிலேயே காட்டலோனியா பாராளுமன்றம் கலைக்கப்படுவதாக ஸ்பெயின் அறிவித்தது. மேலும், காட்டலோனியா நிர்வாகம் தன்னுடைய நேரடி கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டதாகவும் ஸ்பெயின் அரசு அறிவித்தது.

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்திற்கு நேற்று முன்தினம் மறுதேர்தல் நடத்த முடிவெடுத்த ஸ்பெயின் அரசு, இந்த தேர்தலில் காட்டலோனியா தலைவர் பூட்சியமோண்ட் ஹார்லஸ் போட்டியிட வேண்டும் என விருப்பம் தெரிவித்திருந்தது.

ஹார்லஸ் ஜேர்மனியில் தஞ்சமடைந்த போதும் அவர் மீது கைது நடவடிக்கை இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அவர் மீண்டும் நாடு திரும்பினார்.

இந்நிலையில், காட்டலோனியா பாராளுமன்றத்திற்கு நேற்று முன்தினம் மறுதேர்தல் நடந்தது. எதிர்பார்த்ததை விட அதிகமானோர் வாக்களித்ததாக தேர்தல் ஆணையம் தெரிவித்தது. வாக்குப்பதிவு முடிந்ததுமே வாக்கு எண்ணிக்கை தொடங்கியது.

99.9 சதவிகித வாக்குகள் எண்ணப்பட்டுள்ள நிலையில, பிரிவினைவாதக் கட்சிகளே அதிகமான இடங்களை வென்றுள்ளது. பிரிவினைவாதக் கட்சிகளே தனிப்பெரும்பான்மை பெற்றுள்ளது.

அதேவேளையில், ஸ்பெயின் ஜனாதிபதி ரஜோய்யின் கட்சி படுமோசமாக தோல்வியடைந்துள்ளது. வெற்றிக்கு பின்னர் பேசிய காட்டலோனியா முன்னாள் பிரதமர் பூட்சியமோண்டினே, "ஸ்பெயின் முழுவதுமாக தோற்கடிக்கப்பட்டுள்ளது" என்றார்.

தனிநாடு மட்டுமே எங்களது வேண்டுகோள், அதனை காட்டவே தேர்தலில் பங்கேற்றோம் என காட்டலோனியா மக்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# குழாய்க்கிணறு அமைத்தும் பயனில்லை; வெளிவரும் நீர் மஞ்சள் நிறமாகவுள்ளது

## உடன் நடவடிக்கை எடுக்குமாறு மல்லிகைத்தீவு மக்கள் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு கேப்பாப்பிலவு வீதியில் மல்லிகைத்தீவு பகுதியில் குடிநீருக்கென குழாய்க்கிணறு அமைத்தும் பயனில்லை, குடிநீர் இல்லை உடன் நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

குறித்த பகுதியில் குடிநீர் பெறமுடியாத நிலை இருந்தது. இதனால் அந்த பகுதி மக்களுக்கு கொள்கலன்கள் வைக்கப்பட்டு நீர் வழங்கப்பட்டு வந்த நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் ஊடாக குறித்த பகுதியில் குழாய்க்கிணறு ஒன்றுஅமைக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து குறித்த பகுதிக்கான குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்டு கொள்கலன்களும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இந்நிலையில் குறித்த குழாய்க்கிணற்றில் நீரை பெற்றுக்கொள்ள முடியாமல் மக்கள் அவதிப்படுகின்றனர்.

குழாய்க்கிணற்றில் நீர் பெறுவதற்கு மிக நீண்ட நேரம் சென்ற பின்பே நீர் வருவதாகவும் நீரை பெறுவதற்கு பெரும் சிரமப்படுவதாகவும் இரண்டு வாழி நீரை பெற்றவுடனே நீர் மஞ்சள் நிறமாக வருவதாகவும் அந்த நீரை எந்த தேவைக்கும் பயன்படுத்த முடியாமல் உள்ளதாகவும் சிறுவர்களை அந்த நீரில் கழுவுவதால் நோய்கள் ஏற்படுவதாகவும் மக்கள் தெரிவிப்பதோடு இதற்கான உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் தமக்கான குடிநீரை நல்லமுறையில் பெற்றுக்கொள்ள ஆவன செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-281)

# 36 வேட்புமனுக்கள் தாக்கல் ஒரு வேட்பு மனு நிராகரிப்பு

## முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 36 வேட்புமனுக்களில் ஒரு வேட்புமனு நிராகரிக்கப்பட்டு 35 வேட்பு மனுக்களுடன் உள்ளுராட்சிமன்ற தேர்தலுக்கு தயாராகியுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2018 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனுக்கள் கையேற்கும் நிகழ்வு கடந்த 21 ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றுள்ளது. இந்த வேட்பு மனு கையேற்கும் நிகழ்வினை தொடர்ந்து மாவட்டத்தின் வேட்பாளர்கள் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் ஊடக அறிவிப்பு ஒன்றினை விடுத்துள்ளார்.

இதன்போது அவர் வேட்பு மனுத்தாக்கல்நிகழ்வுநிறைவு பெற்று வேட்பு மனு தொடர்பிலான ஆட்சேபனைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன மாவட்டத்தில் ஐந்து ஆட்சேபனைகள் கிடைக்கப் பெற்றுள்ளன இவைகள் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுரைகளை பெற்று ஆட்சேபனைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச சபைகளுக்குமான வேட்பு மனுக்களில் மாந்தை கிழக்கு பிரதேச சபைக்காக எட்டு வேட்பு மனுக்கள் எட்டு கட்சிகளிடம் இருந்து பெறப்பட்டிருந்தன இவை அனைத்தும் அங்கிகரிக்கப்பட்டன.

துணுக்காய் பிரதேச சபைக்கான வேட்பு மனுக்களில் எட்டு கட்சிகள் தங்களுடைய வேட்பு மனுக்களை சமர்ப்பித்துள்ளார்கள் அவற்றில் ஏழு கட்சிகள் அங்கிகரிக்கப்பட ஒரு கட்சி நிராகரிக்கப்பட்டுள்ளது இதில் அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் கட்சி நிராகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம் வேட்பு மனுவில் இரண்டாவது அட்டவணையில் பெண்களுடைய விகிதாசார எண்ணிக்கை அதில் குறிப்பிடப்படாத காரணத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கான வேட்பு மனுக்கள் 10 அரசியல் கட்சிகளும் ஒரு சுயேட்சைகுழுவும் கையளித்துள்ளது. 11 வேட்பு மனுக்களும் அங்கிகரிக்கப்பட்டுள்ளது

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கான வேட்பு மனுக்களில் எட்டு கட்சிகளும் ஒரு சுயேட்சைக்குழுவும் தங்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருந்தன அவற்றில் அனைத்து கட்சிகளுடைய வேட்பு மனுக்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தபோதும் அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் கட்சியின் ஒரு வேட்பாளர் நிராகரிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்கு பிரதேச சபைகளுகக்குமாக 36 வேட்புமனுக்களில் ஒரு வேட்பு மனு நிராகரிக்கப்பட்டு 35 வேட்பு மனுக்களுடன் உள்ளுராட்சி தேர்தலுக்காக ஆயத் தமாக இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2-281)

# 1,786 அபாயகரமான வெடிபொருட்கள் 13 மாதகாலப் பகுதிக்குள் அகற்றம்

## ஷார்ப் நிறுவன முகாமையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் உள்ள அம்பகாமம் பகுதியிலும் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக பிரிவில் உள்ள முகமாலை மற்றும் கிளாலி ஆகிய பிரதேசங்களில் இருந்தும் கடந்த 13 மாத காலப் பகுதிக்குள் ஒரு இலட்சத்து 82 ஆயிரத்து 44 சதுர மீற்றர் பரப்பளவில் ஆயிரத்து 786 அபாயகரமான வெடிப் பொருட்களை அகற்றியுள்ளதாக மனித நேயக்கண்ணிவெடிப்பொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள 'ஷார்ப்' நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் கப்டன் பிரபாத் நாரம்பனாவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், மிக விரைவில் 2 ஆவது தடவையாக ஒரு இலட்சத்து 6ஆயிரத்து 257 சதுரமீற்றர் பரப்பளவில் வெடிப் பொருட்கள் அகற்றியதற்கான பத்திரத்தை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கவுள்ளோம்.

இந்நிலையில், அபாயகரமான வெடிப்பொருட்கள் புதைக்கப்பட்ட இடங்களுக்குள் சில சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர் கள் சட்ட விரோதமான முறையில் உள்நுழைந்து மனித நேய கண்ணி வெடிப்பொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களினால் வெடிப்பொருட்கள் புதைக்கப்பட்ட இடங்கள் என சுட்டிக் காட்டும் பாதுகாப்பு அடையாளங்கள் இடப்பட்ட எச்சரிக்கைகளை அகற்றி விட்டு உள்ளே நுழைந்து மரக் கடத்தல், மணல் கடத்தல், அபாயகரமான வெடிப் பொருட்களில் உள்ள வெடி மருந்து பொருட்களைதிருடுவதுபோன்ற செயல்களில் ஈடுபட்டு வருவதால் எமது விரைவான பணிக்கு இது இடையூறாகவும், தடையாக இருப்பதுடன், அவர்களும் உயிரிழப்புக்களுடன், படுகாயங்கள் அடைந்து அங்கவீனமான நிலைக்குள்ளாகி வருகின்றனர்.

பல்வேறு நெருக் கடிகளுக்கு மத்தியில் மீதமாகவுள்ள பிரதேசங்களில் இருந்து அபாயகரமான வெடிப் பொருட்களை அகற்றும் பணியில் 12 பெண் பணியாளர்கள் உட்பட 108 பேர் அடங்கிய நான்கு அணிகள் ஈடுபட்டு வருவதுடன், இவர்கள் தொடர்ந்தும் யுத்த சூனியப் பிரதேசத்தில் பணிபுரிவதால் மன நிலையில் ஏற்படும் மாற்றங்களை தவிர்த்து மகிழ்ச்சியேற்படுத்தும் வகையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை முதல் பிற்பகல் 7 மணி வரை பணியாளர்களும், களநிலை அதிகாரிகளும் பங்கு கொண்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன் போது, விளையாட்டு போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை "ஷார்ப்" நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் ஓய்வு பெற்ற லெப்டினன்ட் கேணல் சரத் ஜெயவர்த்தனா மற்றும் நடவடிக்கை முகாமையாளர் கப்டன் பிரபாத் நாரம் பனாவ, மனித வளம் மற்றும் நிதி முகாமையாளர் செல்வி ரீ. வித்தியா ஆகியோர் வழங்கி வைத்துள்ளனர். (2-15)




# உயிர்களை காவுகொண்ட ஆழிப்பேரலையின் 13ம் ஆண்டு நினைவு நிகழ்வு நாளை மறுதினம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களுக்கான 13ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி நாட்டின் கடற்கரையோரங்களை பெரும்அழிவுக்குள்ளாக்கி பல்லாயிரக் கணக்கான உயிர்களை காவு கொண்ட ஆழிப்பேரலை ஏற்பட்டு 13ஆம் ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது.

இதில் உயிரிழந்த உறவுகளுக்கான வணக்கம் செலுத்தும் நிகழ்வும் ஆழிப்பேரலையின் 13ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவில் அமைந்துள்ள ஆழிப்பேரலை நினைவாலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று இறந்தவர்களுக்கான வணக்கம் செலுத்தும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதே போன்று மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் வணக்க நிகழ்வுகள் நடைபெறுவதற்கு ஏற்பாடாகி வருகின்றன.

இதேவேளை யாழ்.வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் அமைந்துள்ள ஆழிப் பேரலையால் உயிரிழந்த உறவுகளை அடக்கம் செய்த ஆழிப்பேரலை நினைவாலயத்தில் நினைவு நிகழ்வுகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை சகல ஆலயங்களிலும் சர்வமத பிரார்த்தனைகள் பொது இடங்களிலும் வணக்கம் செலுத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (2-315)

# பண்டிகை காலத்தை முன்னிட்டு குத்தகைக்கு வழங்கப்பட்ட கடைகளினால் ஒரு கோடியே 2 இலட்சம் ரூபா வருமானம்

## மன்னார் நகரசபை செயலாளர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

கடந்த வருடத்தை விட இம்முறை மன்னாரில் பண்டிகைக்கால வியாபார நடவடிக்கை சூடுபிடித்துள்ளது.

இந்நிலையில் இம்முறை குத்தகையினால் ஒரு கோடியே 2 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாக மன்னார் நகரசபை செயலாளர் எக்ஸ்.எல். றெனோல்ட் தெரிவித்துள்ளார்.



அந்த வகையில் இம்முறையும் நத்தார், புதுவருட பண்டிகையை முன்னிட்டு கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரையான காலப் பகுதியில் வியாபாரங்களை மேற்கொள்ள மன்னார் நகரசபை பிரிவிற்குட்பட்ட பிரதான வீதியோரங்களில் மன்னார் நகர சபையால் குத்தகைக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது.

அதிகளவான வர்த்தகர்கள் தென்பகுதியில் இருந்து மன்னாரிற்கு வந்து பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் பண்டிகைக் கால வியாபாரங்கள் மேற்கொள்ளும் பகுதிகளில் உள்ள வீட்டு உரிமையாளர்களுக்கும், பாதசாரிகளுக்கும் இடையூறை ஏற்படுத்தாத வகையில் குறித்த வியாபார நடவடிக்கைகளைமேற்கொள்ள மன்னார் நகரசபை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் குத்தகையினால் சுமார் 75 இலட்சம் ரூபாவை மன்னார்நகரசபை வருமானமாக பெற்றிருந்தது. எனினும் இம்முறை குத்தகையினால் ஒரு கோடியே 2 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய் வருமானமாக கிடைத்துள்ளதாக நகரசபையின்செயலாளர் எக்ஸ்.எல். றெனோல்ட் தெரிவித்துள்ளனர்.

பண்டிகைக்கால வியாபார நடவடிக்கை இடம்பெறுகின்ற பகுதிகளில் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-281-4)

# நீர் நிரம்பிய குழியில் வீழ்ந்த குழந்தை மரணம்

(பரந்தன்)

கிளிநொச்சி அக்கராயன் குளம் கண்ணகிபுரம் பகுதியில் ஒன்றரை வயது ஆண் குழந்தை நீர் நிரம்பிய குழியில் வீழ்ந்து உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த பகுதியைச் சேர்ந்த சத்தியசீலன் ஜெயந்தன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வரட்சி காரணமாக குறித்த வீட்டார் குழாய்க் கிணற்றில் பொருத்தப்பட்ட மோட்டாரினை தாழ இறக்கி பயன்படுத்துவதற்காக வெட்டப்பட்ட குழியிலேயே குழந்தை விழுந்துள்ளது. வீட்டில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தையை காணவில்லை யென தெரிவித்து அயலவர்களின் உதவியுடன் தேடிய போது குழந்தை குறித்த குழியில் வீழ்ந்து கிடப்பதை அவதானித்து மீட்டுள்ளனர்.

எனினும் குழந்தையை மீட்டு கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதித்தனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-312)

உறங்குகின்ற கும்பகர்ணன் உங்கள் மாய வாழ்வெல்லாம்.
இறங்குகின்றது இன்றுகாண் எழுந்திராய் எழுந்திராய்... – கம்பராமாயணம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தேர்தல் சத்தம் கேட்கிறது பள்ளி எழுந்தருளுமினே!

மார்கழித் திருவெம்பாவைத் திருநாள் இன்று வைகறைப் பொழுதில் ஆரம்பமாகின்றது.

முன்பெல்லாம் மார்கழித் திருவெம்பாவை என்றால் அதிகாலை மூன்று மணியளவில் முதியவர்கள், இளைஞர்கள், சிறுவர்கள் என எல்லோரும் ஒன்று சேர்ந்து வீதி வழியாகத் திருப்பள்ளி எழுச்சி பாடிய வண்ணம் செல்வார்கள்.

திருப்பள்ளி எழுச்சிப் பாடலும் சங்கு, சேமக்கல வாத்திய ஒலிகளும் கேட்டு துயில் நீங்கியவர்களும் நீராடி ஆலயம் செல்வர்.

குளிர் நிறைந்த மார்கழி மாதத்தில் வைகறைப் பொழுதில் துயில் எழுவதென்பது மிகக் கடினமான காரியம்.

எனினும் கூத்தபிரானை வணங்குவதற்கு மார்கழி மாதத்து வைகறைப் பொழுது மிகவும் உகந்தது என்பதால் உறக்கம் கலைந்து நீராடி கோயில் சென்று இறைவழிபாடு ஆற்றுவதை நம்மவர்கள் சிரமேற்கொண்டனர்.

ஆனால் இப்போது திருப்பள்ளி எழுச்சி பாடுவதற்கும் வீதி வழி செல்வதற்கும் ஆட்கள் இல்லை என்றாயிற்று.

இறைவழிபாட்டினூடாக மனித சமூகத்தை வழிப்படுத்த நம் முன்னோர்களும் ஞானிகளும் வகுத்த வழிபாட்டு முறைகளும் பண்பாட்டு நெறிகளும் எங்களை விட்டு விலகியபோது, எங்கள் இளம் பிள்ளைகளின் பாதைகளும் வேறாயின.

என்ன செய்வது! நல்லவற்றை இழந்து தீயவற்றை உள்வாங்குவதில் நம் சமூகம் ஆர்வப்படுகிறது.

இதனால் எதிலும் அக்கறையில்லாத் தன்மை வேகமாகப் பரவி வருவதை காண முடியும். முகநூல் தொடர்பும் கையடக்கத் தொலைபேசியின் அதீத பாவனையும் மனிதத்தின் பண்பாட்டு இயல்புகளை பிறழ்வடைய வைத்தன.

இதன் விளைவுகள் மிகப்பெரும் பாதிப்புக்களைத் தரப்போகிறது என்பதற்கு அப்பால், முக்கியமான விடயங்களிலேனும் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்பதையாவது நினைவுபடுத்துவது அவசியம் என்ற அடிப்படையில் நாம் ஒவ்வொருவரும் செயற்பட வேண்டியுள்ளது.

ஆம், உள்ளூராட்சி சபைத் தேர்தல் வந்துவிட்டது. அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்துவிட்டு தேர்தல் பிரசார பாடல்களைப் பாடுவது கேட்கிறது.

அவர்கள் பாடுகிறார்கள். என்ன சொல்கிறார்கள், முன்பு சொல்லியதையே இப்போதும் சொல்கிறார்களா? அல்லது வேறு விதமாகக் கதைக்கிறார்களா? முன்பு சொல்லியதைச் செய்தார்களா? என்று அறியாமல் குழப்பத்தோடு இருப்பது மிகப்பெரும் ஆபத்து.

ஆகையால், மார்கழித் திருவெம்பாவைப் பாடல்கள் கேட்கின்ற இந்த வைகறைப் பொழுதில் எம் தமிழ் மக்களே பள்ளி எழுங்கள். எங்கள் இனத்தின் விடிவுக்காக நீங்கள் விழித்தெழுங்கள். உங்கள் விழிப்பு இருளை அகற்றட்டும். ஏமாற்றுக் கதைகள் பேசுபவர்களை திருந்த வைக்கும்.

ஆகையால் தமிழ் மக்காள் பள்ளி எழுங்கள். தேர்தல் சத்தம் கேட்கிறது. பள்ளி எழுங்கள்.

# சிங்கள பௌத்த பேரினவாத சித்தாந்தத்தினை திணிக்கும் முயற்சியே தேரரின் உடல் தகனம்

## அமைச்சர் அனந்தி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

சிங்கள பௌத்த பேரினவாத சித்தாந்தத்தினை தமிழர் தாயகத்தில் திணிக்கும் முயற்சியாகவே, நாக விகாராதிபதியின் உடலை யாழ். மண்ணில் எமது மக்களால் புனித பூமியாக கருதப்படும் இடத்தில் தகனம் செய்ய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஐயமேற்படுகிறது என வடக்கு மாகாண சபையின் கூட்டுறவு அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழர் தாயகத்தின் பண்பாட்டுத் தலைநகரமாக விளங்கி வரும் யாழ்ப்பாணத்தில அதுவும் தமிழாராய்ச்சி மாநாட்டில் சிங்கள காடையர்களால் படுகொலை செய்யப்பட்ட தியாகிகளது நினைவாக அமைக்கப்பட்டிருக்கும் நினைவுத் தூபி மற்றும் யாழ். முனீஸ்வரன் கோயில் அமைந்துள்ள இடத்திற்கு அருகாமையில் விகாராதிபதியின் உடலை தகனம் செய்ய முற்பட்டது திட்டமிட்ட நடவடிக்கையாகவே பார்க்க வேண்டியுள்ளது.

உள்ளூராட்சி சபைகளினால் அனுமதியளிக்கப்பட்ட மயானங்களில்தான் இறந்தவர்களது உடல்களை அடக்கம் செய்வது வழக்கமாகும். அதனை தகர்த்தெறியும் வகையில் பொது இடமொன்றில் இராணுவத்தினரின் பிரத்தியேக ஏற்பாடுகள் மூலம் விகாராதிபதியின் உடல் தகனத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை தேவையற்ற இன முரண்பாட்டிற்கு வித்திடும் அபாயத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இறந்தவர்களை தகனம் செய்யவோ புதைப்பதற்கோ அனுமதி வழங்கப்பட்ட இடங்கள் ஏராளம் இருக்கையில எமது மக்களால் புனித பூமியாக கருதப்படும் குறிப்பிட்ட இடத்தை விகாராதிபதியின் உடல் தகனத்திற்கு தேர்வு செய்துள்ளமையானது தமிழர் தாயகத்தில் இன முரண்பாடொன்றை ஏற்படுத்தி தமிழர்களை வன்முறைப் பிரியர்களாக உலகிற்கு காட்டும்நோககில் திட்டமிடப்பட்டதாகவே கருதவேண்டியுள்ளது.

நாட்டின் ஆட்சி, அதிகாரத்தை கையில்வைத்துக் கொண்டு தமிழர்களின் புனித பூமியில் இதனை நடத்த எத்தனிப்பவர்கள், கொழும்பில் உள்ள பொன்னம்பலவாணேஸ்வரம் கோவிலில் பிரதான குருக்களாக இருக்கும் ஒருவர் இறக்கும் போது காலிமுகத்திடலில் அவரது இறுதிச்சடங்குகளை மேற்கொள்ள இடமளிப்பார்களா?

இன்று விகாராதிபதியை தகனம் செய்வார்கள். பின்னர் நினைவிடம் அமைப்பார்கள். அதனை காரணம் காட்டி புனித பிரதேசமாக அறிவித்து பௌத்த விகாரை ஒன்றையும் அமைத்து நிரந்தர ஆக்கிரமிப்பின் குறியீடாக அவ்விடத்தை மாற்றும் அபாயம் கண்முன்னே நடந்தேறுவதை நாம் எவ்வாறு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியும்?

யாழ்.மாநகர சபை மேயர் பதவி உள்ளிட்ட சபைகளின் பதவிகளுக்கு போட்டியிடுவதற்காக முட்டிமோதும் கட்சிகள் இதனைக் கண்டு கொள்ளாது மௌனமாக இருப்பது வேதனையளிக்கிறது. ஏலவே அமைக்கப்பட்ட பௌத்த நினைவிடங்களை மையப்படுத்தி திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நில ஆக்கிரமிப்பில் இருந்து இன்னமும் விடுபட முடியாது திணறிவரும் நிலையில் எமது காலத்திலேயே ஆக்கிரமிப்பிற்கான அடிகோலிடப்படுவதை உடனடியாக தடுத்துநிறுத்த வேண்டிய பாரிய பொறுப்பு எமது தோள்களில் சுமத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

# யாழ்.முற்றவெளியில் தேரரின் உடல் தகனம் தேசிய நல்லிணக்கத்தை பெரிதும் பாதிக்கும்

## டக்ளஸ் எம்.பி. சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாக விகாரையின் விகாராதிபதி ஞானசார தேரோவின் இழப்புக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். யுத்தம் நடைபெற்ற காலத்திலும் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தனது சமயக்கடமையை முன்னெடுத்தவர். தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்காக நாம் முன்னெடுத்த முயற்சிகளில் தனது பங்களிப்பைச் செய்தவர் என்பதையும் எண்ணிப்பார்க்கின்றோம்.

அதேவேளை அன்னாரின் இறுதிக் கிரியைகள் நடைபெற்ற யாழ்ப்பாணம் முற்றவெளிப்பிரதேசமானது அதற்கு பொருத்தமற்றதாகும்.

அது எமது மக்களின் மனதை புண்படுத்தும் விதமாகவே அமைந்துள்ளது. எனவே எதிர்காலத்திலாவது தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதுடன், தேசிய நல்லிணக்கத்தைப் பாதுகாக்கும் விதமாகவும் பொருத்தமான முடிவுகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி.விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலம் யாழ்ப்பாண மண்ணில் தங்கியிருந்து பணியாற்றிய நாக விகாரை விகாராதிபதியின் இறுதிக் கிரியைகள் யாழ்ப்பாணத்தில் வேறொரு பொருத்தமான இடத்தில் மேற்கொண்டிருக்கலாம்.

யாழ்ப்பாணம் முற்றவெளிப்பகுதியானது தொல்பொருள் திணைக்களத்திற்குச் சொந்தமானதாக இருந்தாலும், வரலாற்றில் எக்காலப் பகுதியிலும் அவ்விடத்தில் இறுதிக்கிரியைகளோ, உடல் தகனங்களோ நடைபெறவில்லை. அது தவிரவும் அப்பிரதேசத்தில் யாழ்ப்பாண மக்கள் வழிபடும் முனியப்பர் கோயில் அமைந்துள்ளது. எனவே அந்த இடத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெறுவதும், உடல் தகனம் நடைபெறுவதும் பொருத்தமானதல்ல.

தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல், மனங்களைப் புண்படுத்தும் விதமாக முனியப்பர் ஆலயத்திற்கு அருகில் உடல் தகனம் செய்யப்பட்ட செயற்பாடு தேசிய நல்லிணக்கத்தை பெரிதும் பாதிப்பதாகவே அமையும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## வலையைத் திருடி மீன்பிடித்தவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாஷையூர் மீனவர்களுக்குச் சொந்தமான வலையைத் திருடி மீன்பிடித்த குற்றச்சாட்டின் பேரில் குருநகரைச் சேர்ந்த இருவர் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் யாழ்.குடா கடற்பரப்பில் பாஷையூர் மீனவர்களுக்குச் சொந்தமான சிறகுவலையில் குருநகர் பகுதியைச் சேர்ந்த இருவர் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

இதனையறிந்த பாஷையூர் மீனவர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த இருவரையும் மடக்கிப்பிடித்து பாஷையூர் கடற்றொழில் சங்கத்தினரிடம் ஒப்படைத்து மேலதிக விசாரணைகளுக்காக யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10,107)

## சாரதியின்றி பஸ் ஓடியதால் வவுனியாவில் நேற்று பதற்றம்

வவுனியா, புகையிரத நிலைய வீதியில் சாரதி இன்றி மினிபஸ் ஒன்று ஓடியதால் மக்கள் பதற்றத்துடன் வீதியில இருந்து நாலாபுறமும் தப்பி ஓடிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, புகையிரத நிலைய வீதியால் சென்ற மினி பஸ்ஸை அரசவங்கி ஒன்றின் முன்னால் நிறுத்திய அதன் சாரதி வங்கிக்குள் சென்றுள்ளார். இதன்போது குறித்த பஸ் சாரதி இன்றி அவ்விடத்தில் இருந்து புகையிரத வீதி நோக்கி நகர்ந்து சென்று எதிரே வந்த, கார் மற்றும் மோட்டார் சைக்கிள்களுடன் மோதி விபத்துக்குள்ளாகி தொடர்ந்தும் சென்றுள்ளது.

சாரதி இன்றி குறித்த மினிபஸ் வீதியில் விபத்தை ஏற்படுத்தும் வகையில் பயணிப்பதை அவதானித்த அவ்வீதியால் பயணித்த பயணிகள் தமது வாகனங்களுடன் நாலாபுறமும் சிதறி ஓடினர். சுமார் 50 மீற்றர் தூரம் வரை பயணித்த குறித்த மினிபஸ்ஸை பலர் ஒன்று சென்று தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதன்போது ஏற்பட்ட விபத்தில் எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. இது குறித்து வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (ம-250,231)

## டெங்கு ஒழிப்பு சிரமதான பணி

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை தமிழ் மன்ற சனசமூக நிலையமும் இந்து இளைஞர் கழகமும் இணைந்து வலி.வடக்கு பிரதேச சபையின் ஒத்துழைப்புடன் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது. (ம)

## அகழ்வு பணி தோல்வியில் முடிவு

(விஸ்வமடு)

விடுதலைப் புலிகளின் ஆயுதம் தேடி நேற்று வள்ளிபுனம் பகுதியில் நீதிமன்ற உத்தரவோடு இடம்பெற்ற அகழ்வுப் பணி தோல்வியில முடிவுற்றது. (ம-281)

## எம்.ஜி.ஆரின் நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழக முன்னாள் முதல்வர் அமரர் எம்.ஜி.ஆரின் நூற்றாண்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பண்டத்தரிப்பு றிசான் பிளாஸா மண்டபத்தில் வடக்கு மாகாண எம்.ஜி.ஆர்.முன்னேற்றக் கழகத் தலைவர் இ.செல்வகுமார் தலைமையில் இடம்பெறும். (இ-10)

# ஊரெழு றோயலுடன் மோத தயாராகிறது திக்கம் இளைஞர்



வடமாகாண மகுடம் கால பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பலாலி விண்மீன் அணியை வீழ்த்தி, திக்கம் இளைஞர் அணிகள் அரை யிறுதிக்குள் தகுதி பெற்றது.

லீக் சுற்றில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் நான்கு இடங்களையும் பெற்ற அணிகள் பிளே ஓவ் சுற்றுக்குத் தகுதி பெற்றன. அந்த வகையில் 8 அணிகள் பிளே ஓவ் சுற்றுக்குத் தகுதி பெற்றன.

பிளே ஓவ் சுற்றில் 8 அணிகளும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

ஏ குழுவில் பலாலி விண் மீன், திக்கம் இளைஞர், வதிரி டயமன்ஸ், ஊரெழு றோயல் அணிகளும், பி குழுவில் இளவாலை யங் ஹென்றிஸ், நாச்சிக்குடா சென்.மேரிஸ், மன்னார் கில்லறி, மன்னார் அந்தோணியார்புரம் விளையாட்டுக்கழகங்கள் என்பன இடம்பெற்றன.

குழு ஏ யில், முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களைப் பெற்றிருந்த பலாலி விண்மீன் மற்றும் திக்கம் இளைஞர் அணிகளுக்கிடையிலான போட்டி கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்றது. இதில் திக்கம் இளைஞர் அணி, 5:1 என்ற கோல்கள் கணக்கில் வென்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. திக்கம் அணி சார்பாக அகில தீபன் மூன்று கோல்களையும், அரிகரன் 1, பிரகலாதன் ஒரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர்.

தோல்வியடைந்த பலாலி விண்மீன் அணி, ஊரெழு றோயல் அணியுடன் மோதவுள்ளது. அதில் வெற்றிபெறும் அணி அரையிறு திக்குத் தகுதி பெறும். (க-26)

# வதிரி டயமன்ஸை வென்று அரையிறுதியில் ஊரெழு றோயல்



வடமாகாண மகுடம் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி வாய்ப்பினை ஊரெழு றோயல அணி தக்கவைத்துள்ளதுடன், வதிரி டயமன்ஸ் அணி சுற்றிலிருந்து வெளி யேறியது.

இந்தச் சுற்றுப்போட்டியின் போட்டிகள் யாவும் மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

முதற்சுற்று ஆட்டங்கள் விலகல் முறையில் இடம் பெற்றன. அதனைத் தொடர்ந்து, லீக் ஆட்டங்கள் இடம் பெற்றன. லீக் ஆட்டங்களில் 16 அணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, போட்டிகள் இடம்பெற்றன.

லீக் சுற்றில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் நான்கு இடங்களையும் பெற்ற அணிகள் பிளே ஓவ் சுற்றுக்குத் தகுதி பெற்றன. அந்த வகையில் 8 அணிகள் பிளே ஓவ் சுற்றுக்குத் தகுதி பெற் றன.

பிளே ஓவ் சுற்றில் 8 அணிகளும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

ஏ குழுவில் பலாலி விண்மீன், திக்கம் இளைஞர், வதிரி டயமன்ஸ், ஊரெழு றோயல் அணிகளும், பி குழுவில் இளவாலை யங் ஹென்றிஸ், நாச்சிக்குடா சென்.மேரிஸ், மன்னார் கில்லறி, மன்னார் அந்தோணியார்புரம் விளையாட்டுக்கழகங்கள் என்பன இடம்பெற்றன.

குழு ஏ யில், மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களைப் பெற்ற வதிரி டயமன்ஸ் மற்றும் ஊரெழு றோயல் அணிகளுக்கிடையிலான போட்டி 17ஆம் திகதி இரவு இடம்பெற்றது.

முதல்பாதியாட்டத்தில் ஊரெழு றோயல் அணி, 2:1 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் றோயல் அணி மேலும் 2 கோல்களைப் போட்டது.

பதிலுக்கு வதிரி டயமன்ஸ் அணி ஒரு கோலைப் போட்டது. ஆட்ட நேர முடிவில் ஊரெழு றோயல் அணி, 4:2 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

ஊரெழு றோயல் அணி சார்பாக, கஜகோபன் 2 கோல்களையும் எடிசன் 2 கோல்களையும் போட்டனர்.

வதிரி டயமன்ஸ் அணி சார்பாக, பிறேம்குமார் ஒரு கோலையும், லக்சிசன் ஒரு கோலையும் போட்டனர்.

வெற்றிபெற்ற றோயல் அணி, பலாலி விண்மீன் அணியும் திக்கம் இளைஞர்கள் அணியும் மோதிய போட்டியில், தோல்வியடையும் அணியுடன் மோதும். அதில் வெற்றிபெறும் அணி அரையிறுதிக்குத் தகுதி பெறும். (க-26)

# லீக் சுற்றுப்போட்டிகள் ஆரம்பம்

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்ட சுற்றுப் போட்டி யொன்றை திருக்குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வருகின்றது.

48 அணிகள் பங்குபற்றுகின்ற இந்தச் சுற்றுப் போட்டியில் முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் இடம் பெற்றன. அதிலிருந்து, 8 அணிகள் சுப்பர் - 8 அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள லீக் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

ஊரெழு றோயல், நாவாந்துறை சென். நீக்கிலஸ், இளவாலை யங்ஹென்றிஸ், திக்கம் இளைஞர், குருநகர் சென்.றொக்ஸ், இளவாலை சென்.லூட்ஸ், குப்பிளான் குறிஞ்சிக்குமரன் ஆகிய 8 அணிகள் சுப்பர் - 8 சுற்றுக்குள் தகுதி பெற்றுள்ளன.

சுப்பர் - 8 அணிகளுக்கிடையிலான போட்டிகள் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் லீக் முறையில் இடம் பெறவுள்ளது. (க-26)


காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் திண்ணபுரம் சிவனடியார் மடம்

திறப்புவிழாவுக்கு தில்லைக்கூத்தன் தூக்கிய திருவடிகளை
"ஓம் நமசிவாய" கரம் கூப்பி சிரந் தாழ்த்தி வாழ்த்துகின்றோம்





காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் திண்ணபுரம் சிவனடியார்மடம் இன்றைய தினம் (24.12.2017) திறப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். கோமாதா தரிசனம் கோடி புண்ணியம். ஆலய கோமாதாக்களை பரிபாலித்து காலத்தின் தேவை அறிந்து சிவனடியாரை பேணவேண்டிய கடமை உணர்ந்து

திரு. திருமதி சிவஞானம் உமாதேவி தம்பதியர்

ஆற்றிய பணி பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் உரியதாகும். ஆலயம் வரும் சிவனடியார்கள் கோமாதாவை வணங்கி மடமானது சிவனடியாருக்கு உரிய முறைப்படி உண்டி கொடுத்து உறைவிடம் வழங்கி வாழ வழி செய்யும் அறப்பணியை செவ்வனவே செய்து வையத்துள் ஓங்கி வளர மாணிக்கவாசகர் குரு அருளையும் பூரண பொற்கல சமேத ஐயனார் திருவருளையும் சோமாஸ்கந்த பெருமான் அருளாட்சியையும் வேண்டி சிவகாமி அம்பாள் சமேத ஈழத்து சிதம்பரம் தில்லைக் கூத்தன் தூக்கிய திருவடிகளையும் பிரார்த்திப்போமாக

ஓம் நமசிவாய

ஆதீனகர்த்தாக்கள்
ஆ.அம்பலவிமுருகன்
மு.சுந்தரலிங்கம்

காரைநகர் மாணிக்கவாசகர்
மடாலய சிவதொண்டர்கள்
தலைவர் E.S.P. நாகரத்தினம், மடாலய உறுப்பினர்கள்

(C-874)

## சேவைகள் இடம்பெற்...

இவ் கலந்துரையாடலின் போது இரண்டு சேவைகளுக்குமான புதிய இணைந்த நேர அட்டவணை தயாரிக்கப்படும் வரை அவர்கள் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும் வரை கடந்த காலத்தில் எவ்வாறு செயற்பட்டார்களோ அவ் விடங்களில் இருந்து சேவைகள் தொடர அனுமதிக்கப்படுகிறது. அது வரை தற்காலிகமாக புதிய பேருந்து நிலையம் மூடப்பட்டிருக்குமெனவும் இணைந்த நேர அட்டவணை தயாரித்து வழங்கப்பட்டவுடன் இரு தரப்பினரும் மாவட்டங்களுக்கிடையிலான சேவைகள் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து செயற்பட வேண்டும்.

வவுனியா மாவட்டத்தினுள் உள்ளூர் சேவைகளும் பழைய பேருந்து நிலையத்திலிருந்து வெளியூர் சேவைகளும் செயற்பட வேண்டுமெனவும் அதன் பிரகாரம் செயற்படாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இரு தரப்பினராலும் ஒத்துக்கொள்ளப்பட்டது.

நாளை 25ஆம் திகதி வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் இருந்து தனியார் மற்றும் இ.போ.ச சேவைகள் இடம்பெற வேண்டும் என வட மாகாண முதலமைச்சர் திட்டவட்டமாக அறிவித்தல் வழங்கியுள்ள நிலையிலேயே இவ் கலந்துரையாடல் இடம்பெற்றது.

முற்றும் முழுதாக புதிய பேருந்து நிலையத்திலிருந்து அனைத்து பேருந்துகளும் இடம்பெறாமல் உள்ளூர் சேவைகள் தற் போது உள்ள இலங்கை போக்குவரத்து சபை பேருந்து நிலையத்திலிருந்தும் புதிய பேருந்து நிலையத்திலிருந்து வெளியூர் சேவைகள் இடம்பெறுவதுடன்,

உள்ளூர் சேவைகள் தற்போது உள்ள பேருந்து தரிப்பிடத்தில் தரித்து நின்று புதிய பேருந்து நிலையத்தில் பயணிகளை ஏற்றிச் செல்வதுடன் வெளியூர் சேவைகள் புதிய பேருந்து நிலையத்தில் தரித்து நின்று தற்போது உள்ள பேருந்து நிலையத்திற்கு சென்று பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டும்.

அவ்வாறு செயல்முறைபடுத்தப்பட்டால் உரிமையாளர்கள், தொழிலாளர்கள் உட்பட 3500க்கு மேற்பட்டவர்கள் பாதிப்படைய மாட்டார்கள். எமக்கு புதிய பேருந்து நிலையம் செயற்முறைப்படுத்துவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குகின்றோம். வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் பாதிப் படையாத வண்ணம் நடைமுறைப்படுத்துமாறும் அவ்வாறு செயற்முறைப்படுத்தப்படாவிட்டால் போராட்டம் வெடிக்குமென வர்த்தக சங்கத்தினர் மேலும் தெரிவித்தனர். (ம-281)

## யாழில் கோலாகலமாக...

2017ஆம் ஆண்டிற்கான தேசிய மீலாத் விழா யாழில் நேற்று சனிக்கிழமை கோலாகலமாக நடைபெற்றது. இந்த விழா ஞாபகார்த்தமாக இதன்போது முத்திரை யொன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி வளாகத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற சபாநாயகர் கரு ஜெயசூரிய கலந்து கொண்டிருந்தார்.

மேலும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் மற்றும் தபால் அமைச்சரான எம்.எச். எம்.ஹலீம், வர்த்தக வாணிப அமைச்சரான ரிசாட் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, தர்மலிங்கம் சித்தார்த்தன் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோலட் கூரே உட்பட அரச அதிகாரிகள் பொது மக்கள் எனப் பெருமளவிலானோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது 2017ஆம் ஆண்டிற்கான தேசிய மீலாத் விழா நிகழ்வின் ஞாபகார்த்தமாக முத்திரை ஒன்று உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டது. குறித்த முத்திரையை நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்த் பாராளுமன்ற சபாநாயகர் கரு ஜெயசூரிய மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் மற்றும் தபால் அமைச்சர் எம் எச் எம் ஹலீம் ஆகியோர் இணைந்து வெளியிட்டு வைத்தனர்.

ரூபா 15 பெறுமதியான இம்முத்திரையில் யாழ்ப்பாணம் முகமதியா ஜும்மா பள்ளி வாசலின் முகத்தோற்றம் (புதுப்பள்ளி) இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை இந் நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் தவிர்க்க முடியாத காரணங்களினால் அவர் இந் நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.(ம-4)

## ஜனநாயக போராளி...

நடத்தியிருந்தனர்.

இதன் போதே மேற்படி அறிவிப்பை அவர்கள் வெளியிட்டுள்ளனர். தற்போது தமிழரசு கட்சியுடன் இணைந்து பணியாற்ற வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பிளவுபட்டால் அதனை மீளவும் ஒன்றிணைக்கும் சக்தி தமிழீழ தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் மட்டுமே இருந்தது. ஆகையால் அவர் இல்லாத தற்போதையை சூழலில் கூட்டமைப்பினை பலப்படுத்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அதனால் தான் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்துள்ளோம் என ஜனநாயக போராளிகள் கட்சி தெரிவித்தது. இதன் போது கருத்து தெரிவித்த அவைத்தலைவர் சிவஞானம், தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்குள் பிளவுகள் இருந்தாலும் முன்னர் இருந்த கட்சிகளின் கூட்டமைப்பே தமிழ்த்தேசிய கூட்டமைப்பாகும். ஜனநாயக போராளிகள் கட்சியினர் கூட்டமைப்பை பலப்படுத்தும் எண்ணத்துடனேயே எம்முடன் இணைந்துள்ளார்கள் என அவர மேலும் கூறினார். (ம-4)

## அவற்றை சிந்திப்பது...

யாழ்ப்பாணத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற தேசிய மீலாத் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலத்தின் தவறுகள் குறித்துச் சிந்திப்பது அவசியமற்ற விடயம். தற்போது எதிர்காலம் குறித்து சிந்திப்பதற்கும், நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதற்குமான காலம் அமைந்துள்ளது.

எந்தவொரு மதத்திலும் இன மற்றும் மதவாதக் கருத்துக்கள் போதிக்கப்படுவதில்லை. மாறாக மனிதாபிமானக் கருத்துக்களை மாத்திரம் மதங்கள் போதிக்கின்றன.

எனவே தேசிய ரீதியாக ஒன்றிணைந்து செயற்பட்டால் இந்தச் சிறியநாட்டை முன்னோக்கி நகர்த்த முடியும். அதற்காக நாம் புத்திமிக்கவர்களாக செயற்படுவது அவசியமாகும் என சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார். (ம)

## பருத்தித்துறை கடலில்...

ருட்டிப் பகுதியைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் கடலில் மிதந்து வந்ததாகக் கூறப்படும் கொள்கலன் ஒன்றினை தமது படகில் ஏற்றி கரைக்குச் கொண்டு வந்துள்ளனர்.

இது விடயம் தொடர்பில் கடற்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அப்பகுதிக்குச் சென்ற கடற்படையினர் கரைக்குச் கொண்டு வரப்பட்ட கொள்கலனினைச் சோதனையிட்டுள்ளனர்.

அதற்குள் மாவாப்பாக்குகள் அடங்கிய பைக்கற்றுாள்கள் நீரில் நனைந்தவண்ணம் காணப்பட்டன.

இதனையடுத்து மாவாப் பாக்குகள் அடங்கிய கொள்கலனை மீட்ட கடற்படையினர் அவற்றை எடுத்து வந்த மூவரையும் கைது செய்து பருத்தித்துறைப் பொலிஸில் நேற்று மாலை ஒப்படைத்தனர்.

மீட்கப்பட்டவற்றில் 100 கிலோக்கிராமம் மாவாப் பாக்கு காணப்பட்டதாக பொலிஸார் கூறினர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸார் மேலும் கூறினர். வடபகுதியில் அதிகளவான் மாவாப் பாக்குகள் கைப்பெற்றப்பட்டது இதுவே முதற்தடவையாகும். (ம-60)

## வடக்கு மக்களின்...

கொள்ளப்பட்டுள்ள திறந்த இதய சத்திர சிகிச்சையினை மேற்கொண்ட வைத்தியக் குழுவினரை பாராட்டும் நோக்கில் சுகாதார பணிப்பாளர் நாயகம் தலைமையிலான விசேட குழுவொன்று நேற்றைய தினம் யாழ் மாவட்டத்திற்கு விஜயம் செய்திருந்தது

சுகாதார பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜெயசிங்க பிரதி சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் சிறிதரன் உள்ளிட்ட குழுவினர் போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்து குறித்த சத்திர சிகிச்சையினை மேற்கொண்ட வைத்தியர் குழுவினரை சந்தித்தனர்

சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட இருவரையும் இவர்கள் சந்தித்ததுடன் சத்திரசிகிச்சையினை வெற்றிகரமாக மேற்கொண்ட வைத்தியக் குழுவினரையும் சந்தித்து பாராட்டு தெரிவித்தனர்

அத்துடன் வைத்தியசாலை நிர்வாகத்தினருடனும் கலந்துரையாடி வைத்தியசாலையில் காணப்படும் குறைநிறைகள் தேவைகள் தொடர்பிலும் கேட்டறிந்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் காணப்படும் வைத்தியர்கள் மற்றும் தாதியர் பற்றாக்குறைகள் தொடர்பில் நிர்வாகத்தினர் சார்பில் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தியினால் குறித்த குழுவினருக்கு சுட்டிக்காட்டப்பட்டது

இவை தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுப்பதாக சுகாதார பணிப்பாளர் தலைமையிலான குழுவினர்கள் வாக்குறுதி அளித்தனர். (ம-4)

## தமிழ்-முஸ்லிம்...

ஒற்றுமையாக இணைந்து செயற்பட வேண்டுமென தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டிற்கான மீலாத் தேசிய விழா நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோது நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மண்ணிலே மீலாத் நபிகள் நாயகத்தின் பிறந்த தினம் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வேளையில் கலந்து கொண்டிருப்பது மகிழ்ச்சியாக இருக்கின்றது. மேன்மையான இந்த விழாவில் நாங்களும் கலந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்கிய எல்லோருக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தந்தை செல்வநாயகம் முஸ்லிம் மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்று கூறி அவர்களுடைய உரிமையை அங்கீகரித்தவராக இருக்கிறார். அவரது காலத்தில் பல முஸ்லிம் தலைவர்களும் உருவாகியிருக்கின்றார்கள். அந்த வழியில் தலைவராக இருந்த அஸ்ரப் அவர்களை நாங்கள் நினைவு கூருகிறோம்.

அந்தக் காலங்களில் முஸ்லிம் தலைவர்கள் எம்மோடு இணைந்து செயற்பட்டிருக்கின்றார்கள். யாழில் ஆட்சியில் ஆளுபவர்களாக இருந்திருக்கிறார்கள். தந்தை செல்வா வழிகாட்டிலில் அல்லாவின் போதனையில் செயற்பட்டவராக இருக்கின்ற அஸ்ரப் அவர்களை நாம் மறந்துவிடவில்லை.

இந்த மண்ணிலும் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் அனுபவித்து வருகின்ற துன்பங்களுக்கு இந்த நாட்டில் சமமாக மனித உரிமைகளோடு வாழ்வதற்கும் அடக்கி ஒடுக்கப்பட்டவர்கள் ஒன்றாக இருக்க வேண்டுமென்ற தேவையும் காணப்படுகின்றது. இவ்வாறான நிலைமைகளால் உரிமைகளுக்காக போராடுபவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

அத்தகைய உரிமைக்காக போராடுகின்ற தேவை இருப்பதால் மத, சமூக, அரசியல் ரீதியாக ஒன்றாக இணைந்து உழைப்பதற்கு நாங்கள் உறுதி பூணவேண்டும். முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் ஒன்றுபட்டவர்களாக ஒன்றாக இணைந்து ஒற்றுமையாக வாழ்வோம் என்றார். (ம-4)

## அனைத்து மக்க...

ஒன்றாக இணைந்து சமாதானமாக வாழ வேண்டுமென வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

2017ஆம் ஆண்டிற்கான தேசிய மீலாத் விழா யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற போது நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலையே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த உலகத்தில் சகல நாட்டிலும் சகல முஸ்லிம் மக்களுக்கும் ஒரே ஒரு தெய்வம் தான் இருக்கிறது. ஆனால் மற்ற மதங்களில் மிக மிக நிறைய தெய்வங்கள் இருக்கிறது.

இந்த சிறிய அழகான அருமையான நாட்டிலே மக்களுக்கு சமாதானமும் சாந்தியும் இருக்க வேண்டும். அந்த சமாதானமும் சாந்தியும் இல்லாமல் அபிவிருத்தியை கொண்டு வர முடியாது. ஆகவே நீங்கள் நாங்கள் என எல்லோரும் ஒரு தாயின் பிள்ளைகளாக இருந்தால் இந்த நாட்டிற்கு அபிவிருத்தியை கொண்டு வரமுடியும்.

இதனைவிடுத்து சின்ன சின்ன துண்டுகளாக பிரிந்து இருப்பதனை தவிர்த்து அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள் போன்று இந்த நாட்டிலே ஒன்றாக வாழ வேண்டும். அவ்வாறில்லாது துண்டுகளாக இருந்தால் பெரிய பிரச்சினைகள் தான் ஏற்படும்.

தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் என அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டுமென்று தான் கடவுள் சொல்லியிருக்கிறார். ஆகவே நாம் அவ்வாறே ஒன்றாக ஒற்றுமையாக இணைந்து இருப்போமேயானால் இந்த நாட்டில் பலவேறு அபிவிருத்திகளை மேற்கொண்டு மக்களின் வாழ்வையும் வளமாக்கிக் கொள்ள முடியும் என்றார். (ம-4)

## பிக்குவின் தகனம்...

பௌத்த விகாரையின் முன்னாள் விகாராதிபதி கடந்த 19ஆம் திகதி உயிரிழந்திருந்தார்.

இவரது உடலினை யாழ்ப்பாணம் கோட்டை முற்றவெளிப் பகுதியில் தகனம் செய்வதற்கு யாழ்.இராணுவ படைத்தலைமையகம் பெருமெடுப்பில் ஏற்பாடுகளை முன்னெடுத்து உடல் தகனம் செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதற்கு தடைவிதிக்க வேண்டும் என கோரி பொதுமகன் இருவரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவினை நிராகரித்து அப் பிரதேசத்தில் அவ் விகாராதிபதியின் உடலினை தகனம் செய்வதற்கு யாழ். நீதவான் நீதிமன்றம் அனுமதியளித்து உத்தரவிட்டுள்ளது.

இதனை அடுத்து பெரும் ஊர்வலத்தோடு விகாராபதியின் உடல் பொதுமக்கள் அதிகம் நடமாடும் இடத்தில் தகனம் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்போது உள்ளூராட்சி தேர்தல் நடைபெறவுள்ளது. உள்ளூராட்சி சட்டத்தின் பிரகாரம் ஒரு சடலத்தை மயானத்தில் தான் தகனம் செய்ய வேண்டும். ஆனால் அரச பலத்துடனும் ஆதரவுடனும் தேரரின் உடல் தகனம் செய்யப்பட்டுள்ளது என சிவஞானம் தெரிவித்தார். (ம-4)

## ஜெனிவா தீர்மானத்தை...

கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தி சுமுகமான வாழ்க்கைக்குத் தேவையான ஆணையையே இலங்கை மக்கள் வழங்கியுள்ளனர். தகவல் அறியும் சட்டமூலம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் இலங்கை அரசு ஏற்படுத்துவதாகக் கூறிய மனித உரிமை செயற்பாடுகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை அரசு சடுதியான முன்னேற்றப் பாதையை நோக்கி நகரவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.(ம)

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




CNR World Wide Express
இல.401, மனிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062
follow us cnrworldwideexpress

IT Spot 185, V.M.றோட், பருத்தித்துறை.
ICT
ஆரம்பம்:03/01/2018
ஆங்கில, தமிழ் மொழிமூல வகுப்புக்கள்
தரம்-10, 11 & A/L 2018/19/20/ Day
க.செந்தூரன் (B.Sc (Hons) BIT) 0770871456
(1647)

TVS மானிப்பாயில் மாபெரும் வாகனச் சந்தை



- புதிய TVS மோட்டார் சைக்கிள் ஒன்றை சொந்தமாக்க வேண்டுமா? இதோ உங்களது கனவு நிறைவேற.
- உங்களிடம் உள்ள அனைத்து வகையான பழைய மோட்டார் சைக்கிள்களுக்கும் புதிய TVS மோட்டார் சைக்கிள்கள் பெற்றுக்கொள்ளலாம்.
- குறைந்த வட்டி வீதத்தில் லீசிங் வசதி செய்து தரப்படும்.

நத்தார் விசேட சலுகை 7500/= தொடக்கம். கைவிருப்பு உள்ளவரை

இடம் : மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றும்
காலம் : இம்மாதம் 22,23ஆம் திகதிகளில் 9 மணி தொடக்கம் 5.30 வரை 24ஆம் திகதி 9 மணி தொடக்கம் 2.00 மணி வரை

தொடர்புகளுக்கு:
J.P Motors - Chankanai
0777585909, 0212252225, 0775087251
Jaffna ஓட்டோமார்ட் - நல்லூர் TVS உடன் இணைந்து வழங்குகின்றது. நிபந்தனைக்கு உட்பட்டது.
(C-750)

## முறைப்பாடுகளை...

தேர்தல் குறித்த 10 முறைப்பாடுகளும், தேர்தல் சட்டங்களை மீறிய 6 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் பெண் வேட்பாளர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து முறைப்பாடு செய்வதற்கு விசேட தொலைபேசி இலக்கமொன்று அறிமுகம் செய்யப்பட உள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது பெண் வேட்பாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அசௌகரியங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யவும் அறிவிக்கவும் தனியான தொலைபேசி இலக்கமொன்று விரைவில் அறிமுகம் செய்யப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுடன் இணைந்து இந்த முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## பிக்குவின் தகனம் சட்ட...

பிரதேசமான கோட்டை முற்றவெளிப் பகுதியில் தகனம் செய்யப்பட்டமை சட்டத்திற்கு உட்பட்டு நடைபெறவில்லை என வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

மாட்டின் வீதியில் அமைந்துள்ள தமிழரசு கட்சியின் அலுவலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். யாழ்.ஆரியகுள 15☛

## நத்தா...

மன்னிப்பின் கீழ் அவர்கள் விடுவிக்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளுக்கும் இது தொடர்பான அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ரீனன் உப்புல்தெனிய கூறியுள்ளார்.

அபராதம் செலுத்த முடியாதவர்கள், 70 வயதுக்கு மேற்பட்ட கைதிகள் மற்றும் தண்டனை காலம் குறைக்கப்பட்டவர்களுக்கே இந்த பொதுமன்னிப்பு வழங்கப்படவுள்ளது. (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

விற்பனைக்கு
14 இஞ்சி இத்தாலி பட்டடை, வேட்டிக்கல் பட்டடை, வளைவு வெட்டுப் பட்டடை என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 075 049 4681

பணிப்பெண் தேவை
யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் உள்ள வீடு ஒன்றுக்கு சமையல் வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் ரூபாய் 15,000/=-20,000/= வரை கொடுக்கப்படும்.
தொடர்பு: 0773611282
(926)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
UK-550/=Kg
DELIVERY IN 3-5 DAYS
V2 TRAVELS-0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(C-696)

Personal Class
G.C.E. A/L
அரசியல் விஞ்ஞானம்
O/L குடியுரிமைக்கல்வி
Group Class or Personal Class
பிரபல ஆசிரியர்
V.விஜயகுமார்
(B.A Dip in Edu)
தொடர்பு: 0770366257
(1932)

கணித வகுப்பு
கணித பாடம் தரம் 06-11 வரை தமிழ், ஆங்கில மொழி மூலம் பிரபல ஆசிரியரினால் குழுவாகவோ, தனியாகவோ கற்பிக்கப்படுகின்றது.
தொடர்புகளுக்கு:- 0772964233

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
EXPRESS Courier Services
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | மீசாலை | முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை
(759)

## கண்ணீர் அஞ்சலி



அமரர் கோவிந்தர் கந்தையா
(முன்னைநாள் வர்த்தகர், பாணந்துறை - வாரிவளவு காரைநகர்)

ஸ்ரீரங்கன் என்ரபிறைஸ் (ஆஸ்பத்திரி வீதி நிறுவனத்தின் உரிமையாளர் திரு.ஆ.குணரத்தினம் அவர்களின் அன்பு மாமனார் திரு.கோவிந்தர் கந்தையா (முன்னைநாள் வர்த்தகர் பாணந்துறை) (வாரிவளவு, காரைநகர்) அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

- வலம்புரி நிர்வாகம்

D.C.M
வேம்படிச் சந்தி, யாழ்.நகர்
20T20 A/L 2020
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
ஜனவரி 06 ➔ ஆரம்பம் 8.00am

75 வருட தலைமைத்துவத்தின் அடையாளம்
மாணவ முதல்வர் சபை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவ முதல்வர் சங்கம்
பெருமையுடன் வழங்கும்
இந்துவின் திமிழோசை
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவ முதல்வர் சங்கம் ESTD 2017
காலம் - 24.12.2017 ஞாயிற்றுக்கிழமை நேரம் - பிற்பகல் 4.30 மணி இடம் - சபாலிங்கம் அரங்கம் (யா.இ.க)
குக்கூ இசைக் குழு | யாழ்.நாட்டார் வழக்கியல் கழகம் | பூவன் மீடியா
இசைச் சங்கமம் | அரிச்சந்திரா - நாடகம் | கலை நிகழ்ச்சி
அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.
பிரதான அனுசரணை கற்பகவனம் 2
சமூக வலைத்தள ஊடக அனுசரணை POOVAN MEDIA
விளம்பரதாரர் அனுசரணை KIRUBA LEARNERS
நிகழ்விற்கான நுழைவுச்சீட்டுக்களை இன்று மாலை 4 மணிமுதல் நுழைவாயிலில் பெற்றுக் கொள்ள முடியும்.
(1892)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்
# வலம்புரி
சங்குநாதம்

நாதம் 148

வள்ளுவர் ஆண்டு 2048 24.12.2017 தொலைபேசி : 021 222 3378




# ஏன் இந்த எடுப்பு?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# நாவலர் பெருமான்(களே) விழித்தெழுங்கள்

இலங்கையில் சைவ சமயத்திற்கு ஆபத்து வந்துவிட்டது என்பதை இன்னும் உணராதவர்கள் இந்த மண்ணில் சைவம் அழிவதற்கு வழிவிடுவார்கள் என்பதில் எந்த மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை.

சைவத்தையும் தமிழையும் வேரறுப்பதன் மூலமே இலங்கையில் தமிழர்களின் கொட்டத்தை அடக்க முடியும் என்ற எண்ணப்பாடு உச்சம் பெற்று விட்டது.

இதற்கு சைவசமயத்தில் ஒரு பலமான அமைப்பு இல்லாமையும் துணைபோகின்றது என்பதையும் ஏற்றுத் தானாக வேண்டும்.

அண்மைக்காலமாக வடக்கு- கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் சைவசமய விரோதச் செயல்கள் இதற்குக் கட்டியம் கூறுவதாக உள்ளது.

திருகோணமலையில் பாடல் பெற்ற திருக்கோணேச்சரத்தை இலக்கு வைத்து பௌத்தம் நிலை நிறுத்தப்படுகிறது. மன்னாரில் பாடல் பெற்ற திருக்கேதீச்சரத்தை கிறிஸ்தவம் கபளீகரம் செய்கிறது.

இவை உதாரணத்திற்குச் சில, இவை தவிர இப்போது தேர்தல் அரசியல் ரீதியில் சைவ சமயத்திற்கு எதிரான அத்தனை ஏற்பாடுகளையும் தமிழ் அரசியல் தலைமை செய்து முடித்துள்ளது. தேர்தல்கள் தொடர்பிலான ஒரு பொறுப்பான இடத்தில் சைவசமயத்திற்கு எதிரான பேராசிரியர் ஒருவர் இடம்பெற்றுள்ளார். சைவ ஆலயங்களையும் சைவமதத் தலைவர்களையும் இழிவுபடுத்தி இணையங்களில் எழுதும் இந்தப் பேராசிரியர் சைவாலயங்களில் பக்தர்கள் உருக் கொண்டு ஆடுவதை பித்து நோய் என்று வெளிப்படையாகக் கூறியவர்.

இணுவிலில் நடந்த




நிகழ்வொன்றில் நல்லை ஆதீன சுவாமிகளைத் தாக்கிப் பேசிய இந்தப் பேராசிரியர் இப்போது இந்து சமய அமைப்புக்களின் குரல்வளையை சட்டத்தினூடாக நசுக்குவதற்குக் கடும்பிரயத்தனம் செய்துவருகின்றார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சமயச் சார்புகள் தலைதூக்கலாம் என்ற அடிப்படையில் அதற்கு முன்னேற்பாடாக இந்து சமய அமைப்புகள் மீது குற்றம்சாட்டி அவை தொடர்பில் முறைப்பாடுகளைச் செய்வதனூடாக எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தாம் நினைத்தவர்களை முக்கிய பதவிகளில் இருத்துவதற்கான ஏற்பாடுகளாக இவற்றைப் பார்க்க முடியும்.

தேர்தல் விவகாரங்களில், அரசியல் விவகாரங்களில் மிகப் பெரும் ஆதிக்க சக்திகளாக இருக்கக்கூடிய பௌத்த பீடங்கள் மீது எந்த முறைப்பாடும் செய்ய முடியாதவர்கள், இந்து அமைப்புக்கள் மீது இத்துணைதூரம் சீற்றம் கொள்வது எதற்கானது என்பதை அனைத்துச் சமயத்தவர்களும் நடுநிலை நின்று ஆராய வேண்டும்.

உண்மையில் மனம் விட்டுப் பேசுவதாக இருந்தால், இந்த நாட்டில் எவருக்கும் உபத்திரவம் கொடுக்காத - அரசியலில் ஈடுபடாத சமயம் என்றால் அது இந்து சமயமாகவே இருக்க முடியும்.



ஜனாதிபதி, பிரதமர், வெளிநாட்டுத் தூதுவர்கள் என யார் வடக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்தாலும் அவர்கள் இந்து மதத்தலைவர்களைச் சந்திப்பதே இல்லை. அதற்கான ஏற்பாட்டை அரச நிர்வாகிகளும் செய்வதில்லை.

எனினும் இதுபற்றி எதனையும் பொருட்படுத்தாத சைவசமய சிவாச்சாரியர்கள் ஆன்மீகப் பணியே தமக்கானது. எனவே அரசியலோ அன்றி அரசியல் பிரமுகர்களுடனான சந்திப்போ தமக்குத் தேவையில்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றனர்.

இதன் காரணமாக எந்தப் பிரச்சினையும் இல்லாமல் நிலைமை சுமுகமாகச் செல்கிறது.

ஆனால் சைவசமயத்தின் மௌனமும் அதன் பொறுமையும் சில மதவாதிகளால் பலயீனமாகக் கருதப்பட்டு சைவசமயத்தை முற்றாக வேரறுக்க- சைவசமயத்தை வடக்கு- கிழக்கு மாகாணங்களில் இருந்து ஓரங்கட்ட கடும் பிரயத்தனங்கள் நடக்கின்றன.

இந்நிலைமை தொடருமாக இருந்தால் சைவ சமய அமைப்புக்கள் மௌனமாக இருக்காது என்பதை தெரியப்படுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு அந்த அமைப்புச் சார்ந்தவர்களிடம் இருக்கவே செய்கிறது.

எது எவ்வாறாயினும் சைவசமய விரோதச் செயல்களை நிறுத்தி தமிழ் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் செய்யப்படாமல் இருந்தால் அதன் விளைவு பாரதூரமானதாக இருக்கும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

சமய ஒற்றுமை என்பதை தனித்து சைவமக்களே பின்பற்றவேண்டும் என்று யார் நினைத்தாலும் அது பக்கச்சார்பானதே.

மதவாதம் இல்லாத ஒரு சூழ்நிலையே மிகவும் நன்மையானது. அந்த நன்மை நிரந்தரமானதாக இருக்க வேண்டுமாயின் அனைத்து மதத்தவர்களும் சமயத்தை ஆன்மீகத்திற்கான- தெய்வீகத்திற்கான- மக்கள் சேவைக்கான அமைப்பாகப் பேணுவதே நல்லது.

இதைவிடுத்து நாங்கள் அனைவரும் அரசியல் பேசுவோம், அரசியல்வாதிகளுடன் உண்டு மகிழ்வோம். ஆனால் சைவசமயத்தவர்கள் மட்டும் இவற்றில் தலையிடாமல் இருக்க வேண்டும் என்று நினைத்தால், அது நீண்ட காலத்திற்குப் பொருந்தாதென்பதும் உணர்தற்குரியது.

எது எவ்வாறாயினும் இலங்கையில் சைவ சமயத்திற்கு ஆபத்து வந்துவிட்டது. சைவமும் தமிழும் காப்பாற்றப்பட வேண்டும்.

ஆறுமுகநாவலர்களே உயிர்த்தெழுங்கள், விழித்தெழுங்கள். உங்கள் உயிர்ப்பும் விழிப்பும் பலரையும் திருத்தும், திருந்த வைக்கும் என அறை கூவல் விடுவதே சம காலத்தின் தேவை என்று உணரப் படுகின்றது.

விதுரன்

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் அறிவிக்க அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**விதானையார்:** எங்கட அரசியல் எப்படி இருக்குது எண்டு பார்த்தியளோ. நான் சொல்லச் சொல்ல ஒருத்தரும் கேட்கல்ல. இப்ப...

**கங்காணி:** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:** சைவத்தையும் தமிழையும் அழிக்கிறதுக்கான அத்தனை வேலையும் நடந்தாயிற்று. மதவெறி பிடித்த ஒரு பேராசிரியர் அதனை முன்னெடுத்து வருகிறார். அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில இருக்கிற ஒரு முக்கிய எம்.பி.தான் மூலகாரணம்.

**மூப்பர்:** ஏன்? சம்பந்தர் ஐயா, மாவை எல்லாரும் என்ன செய்யினம்.

**விதானையார்:** மூப்பர் அண்ணே! சம்பந்தர் ஐயாவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைத்ததோட அந்தாள் கைலாயப் பதவி கிடைத்த மாதிரியல்லோ நினைக்குது.

தேசியக் கொடியில இருக்கிற சிங்கத்தையும் காளியம்மன்ர சிங்க வாகனத்தையும் ஒன்று என்று பொருத்திய அந்த மனுசன் சைவத்தை அழிக்க வந்தவர் எண்டுதான் நான் சொல்லுவன்!

**சாத்திரியார்:** ஏன்? தம்பி மாவை என்னவாம்.

**வாத்தியார்:** அவர் தன்ர மகனை அரசியலுக்குக் கொண்டுவந்திட்டார். எப்பவோ ஒருக்கா சிறைக்குப் போனதை இன்றுவரை சொல்லிக் கொண்டு எல்லாத்தையும் நாசமறுத்துப் போட்டார். ஆனால் ஒன்றை மட்டும் நான் சொல்லுவன். தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு நடந்த கதிதான் சம்பந்தப்பெருமானுக்கு நடக்கும்.

அதேவேளை மாவையின்ர விட்டிற்கு ஒரு கடிதம் வரும். உங்களைக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து நீக்கியுள்ளோம் எண்டு அந்தக் கடிதத்தில இருக்கும். அப்பதான் அவருக்கு நடந்தது என்ன? எண்டு புரிய வரும்.



## ஜெயலலிதாவுக்கு நடந்த கதிதான் சம்பந்தப்பெருமானுக்கும் நடக்கும்

**பண்டிதர்:** அதெண்டால் உண்மைதான். கட்சியின்ர தலைமைப் பதவியில இருந்தா அதை ஒழுங்காச் செய்யவேணும். இல்லையெண்டால் விட்டிட்டுப் போயிடவேணும்.

**சாத்திரியார்:** தெரியாமல்தான் கேட்கிறன். மாவையை கட்சியின்ர தலைமைப் பதவியில இருந்து நீக்கினால் வேறு யாரைத் தலைவராக்குவினம்.

**விதானையார்:** ஏன்? சாத்திரியார் உங்களுக்குத் தெரியாதோ. அந்த மதவெறிப் பேராசிரியர் தான்.

**சாத்திரியார்:** என்ர கதிர்காமப் பெருமானே அப்ப தமிழும் சைவமும் அழியத்தான் போகுது.

**மூப்பர்:** அதுசரி யாழ்ப்பாண மாநகரசபையில தமிழரசுக் கட்சி யாரை மேயராக நிறுத்துதாம்.

**வாத்தியார்:** ஏன் மூப்பர் நீங்கள் பேப்பர் பார்க்கிறதில்லையோ? வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆனோல்டைதான்.

**மூப்பர்:** தமிழரசுக் கட்சியின்ர செயலாளர் துரைராஜசிங்கம் ஒரு அறிக்கைவிட்டவர். அதில ஆனோல்டை வேட்பாளராக நியமிக்கல்ல எண்டு சொல்லியிருக்கிறாராம்.

**வாத்தியார்:** தமிழரசுக் கட்சியின்ர செயலாளர் துரைராஜசிங்கம் பச்சைத் துரோகம் செய்கிறார். எங்கட வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவுக்கு எதிராகவும் கனக்க அறிக்கை விட்டவர்.

கட்சியின் செயலாளர் பதவி பறிபோகும் என்பதற்காக கட்சியின் தலைமை போடுகிற ஆட்டத்திற்கெல்லாம் தாளம் போடுகிறவராக இருக்கிறார்.

**சாத்திரியார்:** ஆனோல்ட் யாழ்ப்பாண மாநகர சபையில போட்டியிட்டாலும் இன்னொருவரும் மேயராக வரலாம்தானே!

**பண்டிதர்:** இம்... விடிய விடிய இராமாயணம் விடிந்த பிறகு இராமர் சீதைக்கு என்ன முறை எண்ட மாதிரித்தான் மூப்பரின்ர கதை இருக்குது.

**சாத்திரியார்:** ஏன் பண்டிதர் ஐயா அப்படிச் சொல்லுறியள்.

**பண்டிதர்:** சாத்திரியார் வடக்கு மாகாண சபையில உறுப்பினராக இருந்தவர் ஆனோல்ட். கல்வி அமைச்சுப் பதவியை அவருக்குக் கொடுக்கவேணும் எண்டு முதலமைச்சரிட்ட தமிழரசுக்கட்சி கேட்டு அது நடக்கவும் இல்லை. அப்படிப்பட்ட ஒருவரை மாகாண சபை உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்ய வைத்து, யாழ்ப்பாண மாநகர சபையின்ர ஒரு உறுப்பினராக இருத்து வினமோ. இது பற்றி நாங்கள் கொஞ்சமெண்டாலும் சிந்திக்கவேண்டாமோ?

**சாத்திரியார்:** பண்டிதர் ஐயா சொல்லுறதிலும் உண்மை இருக்கத்தான் செய்யுது. நாசமறுந்த நான் துரைராஜசிங்கத்தின்ர அறிக்கையை வாசிச்சுப்போட்டு அப்படி நினைச்சிட்டன்.

**மூப்பர்:** யாழ்ப்பாண மாநகர சபையின்ர முக்கிய அமைவிடம் நல்லூர் முருகன் ஆலயம். எனவே யாழ். மாநகர சபையின்ர முதல்வர் இந்து சமயம் சார்ந்தவராக இருக்கிறது நல்லது எண்ட கருத்தும் இருக்குது.

**வாத்தியார்:** வடக்கின் முதலமைச்சருக்கு எதிராக ஆனோல்ட் ஆக்கள் செயற்பட்டபோது ஆனோல்டை யாழ்ப்பாண மாநகரத்தின்ர முதல்வராக்கிறது எண்டு உறுதிமொழி வழங்கிய தாலதான் முதலமைச்சருக்கு எதிராக அவையள் செயற்பட்டதாக ஆட்கள் கதைத்தவியள்.

இது பற்றி அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானத்திட்ட கூறிய போது அவர் சொன்னவராம் அப்படி எதுவும் நடக்க விடமாட்டன் எண்டு.

**பண்டிதர்:** கடவுளே! சம்பந்தர், சுமந்திரன் ஆகியோருக்குக் கிட்டவும் இவர்கள் போகமுடியாது. ஏதேனும் கருத்துக்கள் சொல்லிச்சினம் எண்டால் வாயைப்பொத்திக் கொண்டு இருக்கிறதா இருந்தால் இருங்கள் எண்டுதான் பதில் வரும்.

**சாத்திரியார்:** அட! சங்கதி அப்படியோ. அப்ப ஏன் யாழ். மாநகர சபை முதல்வராக ஆனோல்ட் வருவதை விடமாட்டன் எண்டு ஐயா சொன்னவர்.

**வாத்தியார்:** சாத்திரியார் இவையள் எல்லாம் எங்கட முதலமைச்சரை எதிர்த்துக் கட்சியில இடம்பிடித்திருக்கிறவியள். முதலமைச்சரை எதிர்க்கும் வரைக்கும்தான் இவயளுக்கு இடம். மற்றும்படி வாய் திறந்தால் அவ்வளவுதான்.

**கங்காணி:** அப்ப இளக்காரம் பார்த்துத்தான் இவையள் தங்கட கோபத்தைக் காட்டுகினம் போல.

**மூப்பர்:** அது சரி யாழ்ப்பாணம் ஆரியகுளம் நாகவிகாரை விகாராதிபதி ஞானசாரதேரரை யாழ்ப்பாண முற்றவெளியில வைத்து தகனம் செய்தது தொடர்பில சிறிதரன் எம்.பி., டக்ளஸ் எம்.பி. தவிர மற்ற ஒரு எம்.பிமாரும் வாய் திறக்கல்ல ஏனாம்.

**விதானையார்:** பௌத்தத்திற்கு முன்னுரிமை என்பதை ஏற்றுக் கொண்டவியள் என்னெண்டு வாய் திறப்பினம்.

**பண்டிதர்:** பௌத்தத்திற்கு முன்னுரிமை எண்டு இடைக்கால வரைபு வந்தவுடனேயே தேரரின்ர உடலை யாழ்ப்பாணம் முற்றவெளியில தகனம் செய்ததெண்டால், இடைக்கால வரைபு அரசியலமைப்பாக மாறும் போது...

**விதானையார்:** தேரரை தகனம் செய்த இடத்தில விகாரை கட்டுப்படும்.

இப்படி விதானையார் சொல்ல அதை ஏற்றுக் கொள்வது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

## பட்டுச் சட்டை போட்ட பூச்சி!



(கடந்த வாரத் தொடர்ச்சி)

யாருதான் பிரமிக்க மாட்டாங்க?

"ஹேய் யாருப்பா நீ? இதுவரைக்கும் உன்னைப் பார்த்ததே இல்லியே... பக்கத்துக் காட்டிலிருந்து சீப்கெஸ்ட்டா வந்திருக்கியோ?" எனக் கரடி மந்திரி கேட்டுச்சு.

"காட்டின் இன்சார்ஜ். இந்தத் திருவிழாவின் இன்சார்ஜான உங்களுக்குத் தெரியாமல் எப்படி புதுசா வரமுடியும்?" எனச் சொல்லிச்சு அந்தப் பட்டு ராணி.

"அதானே... எப்படி வந்தே?" என மூக்கு மேலே விரலை வெச்சு யோசிச்சது கரடி.

"நீ யாரா இருந்தாலும் பரவாயில்லை. எங்க குழந்தைகள் விழாவுக்கு வந்து சிறப்பிச்சதுக்கு, ரொம்ப நன்றி. நீதான் விழாவை ஆரம்பிச்சு வைக்கணும்" எனச் சொல்லிச்சு சிங்க ராஜா.

"ராஜா, நான் விடயத்தைச் சொல்றேன். நான் இதே காட்டிலிருந்த ஒரு புழு. புதுத்துணி இல்லைபேன்னு அழுது அழுது கண்ணீரக் கூட்டுக்குள்ளே அடைபட்டுட்டேன்.

அந்த நீரும் தூசியும் வெயிலின் வெப்பமும் சேர்ந்து என் உடம்பை என்னென்னமோ செஞ்சது.

ஆனாலும் நான் பொறுத்துக்கிட்டு. புத்தாடை கிடைக்கும் என்கிற நம்பிக்கையில் இருந்தேன்.

கொஞ்ச நாளில் என் உடம்பில் மாற்றம் நடந்து இந்த அழகான சிறகு ஆடை வந்துச்சு.

கூட்டை உடைச்சுக்கிட்டு பறந்து வந்தேன்" என சந்தோஷமா சொல்லிச்சு அந்தப் பட்டு ராணி.

"சபாஷ்! நம்பிக்கையோடு முயற்சி செஞ்சா நினைச்சது கிடைக்கும்னு நிரூபிச்சுட்டே புழுவே. பட்டு மாதிரி இருக்கிற உன்னை இனிமே பட்டாம்பூச்சின்னே கூப்பிடறோம். விழாவை ஆரம்பிக்கலாம்" எனச் சொல்லிச்சு சிங்கராஜா.

அந்தப் புழுவை கேலி செஞ்சவங்க எல்லாம், "எங்களை மன்னிச்சிடுங்க பட்டாம்பூச்சியே. இன்னியிலிருந்து நாம / ப்ரெண்ட்ஸ்" எனச் சொல்லி பட்டாம்பூச்சிகிட்டே ஆட்டோகிராப் வாங்கிச்சுங்க.

ஆட்டம் பாட்டமா திருவிழா ஆரம்பிச்சது.

(முற்றும்)

## பொது அறிவு

1.அருணகிரிநாதர் எந்த ஊரில் அவதரித்தார் ?

2.கம்பளிக்காக வளர்க்கப்படும் ஆடுகளுக்கு பெயர் என்ன ?

3.உலக அமைதிக்கான நோபல் பரிசு யாரால் சிபாரிசு செய்யப்படுகிறது ?

4.வெங்காயத்தில் அதிகமுள்ள விற்றமின் எது ?

5.மனிதனைப்போல் தலையில் வழுக்கை விழும் விலங்கு எது ?

6.செலினியம் செல் என்ற போட்டோ முறையை கண்டுபிடித்தவர் யார் ?

7.திருவள்ளுவரின் மனைவி பெயர் என்ன ?

8.ஜப்பான் மீது வீசப்பட்ட முதல் அணுகுண்டு எது ?

9.ஆப்கானிஸ்தானின் தலைநகரம் எது ?

10.நிக்கல் உலோகத்தை கண்டறிந்தவர் யார் ?

11.அயோடின் நம் உடலில் எந்தெந்த இடத்தில் உள்ளது ?

12.எகிப்திய நாகரிகம் எங்கு தோன்றியது ?

13.பென்சில் தயாரிக்கப்பயன்படும் மூலப்பொருட்கள் எவை ?

**விடைகள்:**

1. திருவண்ணாமலை 2.மரினோ
3.நோர்வே அரசு 4.விற்றமின் 'பி'
5. ஆண் குரங்கு 6. எர்னஸ்ட் வெர்னர்
7. வாசுகி.
8. லிட்டில்போய் 9.காபூல்.
10. கிரான்ஸ்டட் 11. தைரொக்ஸின்.
12. நைல் நதிக்கரையில்
13. காரியம்,களிமண், மரக்கூழ்,

## கிறிஸ்மஸ்



கிறிஸ்மஸ் (Christmas) அல்லது கிறிஸ்து பிறப்பு பெருவிழா (நத்தார்) ஆண்டுதோறும் இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறிக்க கொண்டாடப் படும் விழாவாகும். இவ் விழாவானது கிறிஸ்தவ திருவழிபாட்டு ஆண்டில் திருவருகைக் காலத் தினை முடிவு பெறச்செய்து, பன்னிரெண்டு நாட்கள் கொண்டாடப்படும் கிறிஸ்து பிறப்புக் காலத்தின் துவக்க நாளாகும்.

இவ்விழாவின் கொண்டாட்டங்களில் திருப்பலி, குடில்கள், கிறிஸ்மஸ் தாத்தா, வாழ்த்து அட்டை மற்றும் பரிசுப் பரிமாறல், கிறிஸ்மஸ் மரத்தை அழகூட்டல், கிறிஸ்மஸ் மகிழ்ச்சிப் பாடல், சிறப்பு விருந்து என்பன பொதுவாக அடங்கும். கிறிஸ்தவ கருத்துக்களோடு, இக்கொண்டாட்டத்தின் மதம் சாரா பகுதிகளாக குடும்ப உறுப்பினர்கள் ஒன்றுகூடல், நல்லெண்ணங்களை வளர்த்தல் என்பன பின்பற்றப்படுகின்றன.

"நத்தார்" என்பது கிறிஸ்மஸ் என்பதற்கான "natal" என்ற போர்த்துக்கேய மொழிச் சொல்லின் தமிழாக்கமாகும். இவ் வார்த்தை தற்போது இலங்கையில் பயன்பாட்டில் இருந்தாலும் கிறிஸ்மஸ் என்பதே முதன்மையாக உள்ளது. கிறிஸ்து பிறப்புவிழா கிறிஸ்தவர்களின் ஒரு முக்கியமான திருநாளாகும் இது பெரும்பாலான கிறிஸ்தவர்களால் டிசெம்பர் 25 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

## இளநீர்

தென்னை மரத்து இளநீர்
நல்ல தேன்போல
இனிக்கும் சுவைநீரு
என்றும் எங்கும்
கிடைத்திடுமே -தினம்
ஏற்றுக் குடித்தால் நலம்
தருமே!

பானத்தில் இளநீர்
அரியவகை -எந்த
காலமும் நமக்கு நல்ல துணை
விலையோ ஒன்றும்
அதிகமில்லை -இங்கு
இதுபோல் பானம் வேறு
இல்லை.

இயற்கை தந்தது இளநீர்
நல்ல இன்சுவை தந்திடும்
இளநீர் -கொத்துக்
கொத்தாய் காய்த்திடுமே
நம் அனைவரின் தாகம்
தீர்த்திடுமே!
அனைவரும் நாளும்
குடித்திடலாம்.

## நலன்... நீலன்



கடந்த வாரத் தொடர்ச்சி...

என்ன ஆச்சரியம்... இப்போது கடலில் போட்ட பாறைகளும், மலைகளும் மிதக்க ஆரம்பித்தன.

அனுமனுக்கு ஒரே ஆச்சரியம் அவர்பகவான் ஸ்ரீராமசந்திர மூர்த்தியை வணங்கி, அந்த சிறுவர்கள் தொட்டு கொடுத்தால் மட்டும் எப்படி எல்லாம் மிதக்கிறது? என்ன காரணம் என்று கேட்டார்.

அனுமா... ஒரு முனிவர் அத்தி மரத்தின் அடியில் கடும் தவம் செய்து கொண்டிருந்தார். அந்த பக்கம் விளையாடி கொண்டிருந்த நலன் நீலன் இருவரும் அந்த மரத்தில் இருந்த அத்தி பழங்களை பறித்து விளையாடி கொண்டிருந்தன.

அந்த பழங்கள் முனிவர் மீது விழுந்தது. கோபத்தில் கண் விழித்த முனிவர்.... தன் கமண்டலத்தில் இருந்து நீரை எடுத்து, கைகளை ஓங்கியபடி மரத்தை அண்ணாந்து பார்த்தார்.

அங்கே... இரண்டு இளம் குரங்கு குட்டிகள் விளையாடி கொண்டிருப்பதை பார்த்து, முனிவர் மனம் இளகுகிறது. ஆனால் கமண்டலத்தில் இருந்து நீரை எடுத்தாகி விட்டதே.... எனவே, தன் சாபத்தை மாற்றி அவர்கள் எறியும் எதுவும் பஞ்சு போல் மிதக்கட்டும் என்று கூறிவிடுகிறார்.

அதனால் தான் இவர்கள் தொட்டு கொடுக்கும் பாறைகள் கடலில் மூழ்காமல் மிதக்கின்றன என்று ராமசந்திர மூர்த்தி கூறினார்.

(முற்றும்)








முதலமைச்சர் தேர்தலில் யாருக்கு ஆதரவு கொடுப்பார்?

அறிவியலுக்கும் ஆன்மீகத்திற்கும் என்ன வித்தியாசம்?

மனிதகுலம் அழிவை நோக்கிப் பயணிக் கிறது என்பது உண்மையா?

**விபுல் — நவாலி**

**மனிதகுலம் அழிவை நோக்கிப் பயணிக் கிறது என்பது உண்மையா?**

நஞ்சு வீசிய மரக்கறி என்று தெரிந்தும் அதை அச்சமின்றி உண்ணுகிறோம். ஒன்றுக்குப் பத்து முறை ஏதோநாசமறுத்ததைப் போட்டுவெள்ளை யாக்கிய கூப்பன் மாவே கதி என்று கிடக்கிறோம்.

கூடும் கூட்டங்களிலெல்லாம் கோலாக்களை வாங்கி குடித்துத் தள்ளுகின்றோம். எம் வீர வரலாற்றை எழுதி வைத்த வாளை போதையில் கொண்டு அலைகிறோம். மீற்றர் வட்டி மோகத் தில் கடன் கொடுத்து கடனாளியாகி கடைசி யில் உயிரை விடுகிறோம்.

பாசம் பரிவு எல்லாம் மறந்து போக வேசம் போடும் வாழ்க்கை மேடையில் நாடக நடிகர்க ளாக அழுகிறோம். புனித அரசியலை சுய நலத்துக்காய் சுருட்டி தம் சட்டைப் பையை நிறைக்கும் அரசியல்வாதிகளுக்கு இன்றும் வாக்களித்துக் கொண்டிருக்கின்றோம். இப் படியே போனால் உலகம் அழியாமல் என்ன செய்யும்.

**தனபால் — வட்டுக்கோட்டை**

**அன்பின் தேவை எப்படிப்பட்டது?**

சிரிக்கிறபோது சிரிப்பதுதான் அன்பல்ல. அழுகின்றபோது ஆறுதலாய் தோள் கொடுப் பதே அன்பு.

**காயா — சண்டிலிப்பாய்**

**உங்களுக்கு சூடு சுரணையே இல்லையா வியாசரே?**

காயா நீங்கள் என்னைப்பார்த்து இந்தக் கேள் வியைக் கேட்கிறீர்கள். அதற்கு நான் ஒன்றும் அரசியல்வாதியில்லையே.

அது இல்லாமல் போயிருந்தால் நான் இப்போது பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைமைக் கதிரைக்கு பக்கத்துக் கதிரையில் இருந்திருப் பேன்.

**அனு — மந்துவில்**

**தேர்தல் வேகம் எப்படியிருக்கின்றது?**

வேட்பு மனுவில் கையெழுத்திட வந்த ஒரு பெண்ணிடம் அடையாள அட்டையை பறித் துக் கொண்டு ஓடும் அளவு வேகம். தேர்தலில் நீ போட்டியிட்டால் உன்னை உயிருடன் கொளுத்தி விடுவோம் என்று மிரட்டும் அளவிலான வேகம்.

நான் சொன்னது தான் சட்டம். இரண்டு தலை வர்களும் அடங்குங்கள் என்று வேட்பாளரை அறிவிக்கும் அளவிலான வேகம். ஒன்று சேர்ந்து தயாரித்த வேட்பு மனுவை இரவோடு இரவாக மாற்றியமைக்கும் வேகம். இப்படிப் போகிற வேகத்தைப் பார்த்தால் பல கொலை கள் விழும் போலத் தெரிகின்றது.

**டனுசன் — உரும்பிராய்**

**மீற்றர் வட்டி கொடுப்பது சரியா?**

கொடுப்பதும் தவறு, வாங்குவதும் தவறு என்று நீதிமன்று அறிவித்ததை பத்திரிகை களில் படிக்கவில்லையா?

**விஜய் — உடுப்பிட்டி**

**மதத்தைப் பற்றி?**

மதம் மனிதனுக்காக உருவாக்கப்பட்டதே தவிர. மனிதன் மதத்துக்காக உருவாக்கப்பட வில்லை. ஆனால் இன்று மதம் மதம் என்று மனிதன் மதம்பிடித்து அலைவது தான் வேத னையின் உச்சம்.




**அனு — பருத்தித்துறை**

**அமர்வுகளில் தூங்கும் அரசியல்வாதிகளுக்கு சுவீட் வழங்கப்படுமாமே?**

சுவீட் வழங்குவதற்கு முன்பு பற்பொடி வழங்க வேண்டும் என்பதை இவ்விடத்தில் பணிவுடன் வேண்டி நிற்கின்றோம்.

**ஜீபா — கரவெட்டி**

**முதலமைச்சர் தேர்தலில் யாருக்கு ஆதரவு கொடுப்பார்?**

நல்லவர்களுக்கு, ஊழலற்ற மக்கள் சேவையாற்றக் கூடிய அர்ப்பணிப்புடையோ ருக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டாரே.

அவர் மனிதன் , நீதிவான், உண்மைநெறி வாழ்பவர். அவரால் ஊழல் புரிபவர்களுக்கும் அராஜகம் செய்பவர்களுக்கும் வாக்களிக்கும் படி கேட்க எப்படி முடியும். நல்லவர்களுக்கு வாக்களிக்கும்படி கேட்க மட்டுமே முடியும்.

**தேவதாஸ் — தர்மபுரம்**

**மனைவியின் குறட்டை தொல்லை தாங்க முடியவில்லையே?**

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்.

**பரமேஸ் — வதிரி**

**ஆசனச் சண்டை எப்படி?**

இதைப் படிக்கும் போது பேஸ்புக்கில் ஒரு பதி லைப் பார்த்த ஞாபகம். ஆரம்பத்தில் கண வனுக்கு மனைவி தேவயானி போலவும் வருடங்கள் சில கடக்க தேவையா நீ எனவும் மாற்றம் பெற்றுவிடும். இது தான் நினைவு வந்தது.

ஆசனச் சண்டை பிடிப்பவர்கள் ஆளாளுக்கு குரலை உயர்த்துகிறார்கள். ஆனால் மண்டை யில் இருந்த கொண்டையை மறந்து விட்டார் களே.

**சுபன் — கொக்குவில்**

**பிரபாகரன் உயிருடன் இருந்திருந்தால்?**

வீதியில் இருக்கும் மின்கம்பங்களுக்கு பற் றாக்குறை ஏற்பட்டிருக்கும் தேர்தல் களமல் லவா.

**சுதன் — குப்பிளான்**

**தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எப்படி?**

அழிந்து போன எமது தேசத்தை கட்டி யெழுப்ப வாக்களியுங்கள். வேட்பு மனுத் தாக்கலில் மாவை சேனாதிராசா தெரிவிப்பு. இவ்விடத்தில் நாம் கேட்பது போர் முடிந்து எட்டு வருடங்கள் கழிந்துவிட்டன.

தேசத்தைக் கட்டி எழுப்ப எங்கே அத்திபாரம் வெட்டினீர்கள், எப்போது அடிக்கல் நாட்டி னீர்கள். இப்படி உசுப்பேத்தி உசுப்பேத்தி தேர்த லில் வெல்வதில் மட்டும் கவனம் செலுத்துங் கள். வாழ்க நீங்கள் மட்டும் வளமுடன்.

**தமிழ் — வவுனியா**

**பகிடி என்றால் என்ன?**

பத்திரிகைகள் பாருங்கள். அதில் தேர்தல் கால கட்சி அறிக்கைகள் இருக்கும். அவற்றை பொறுமையாக வாசியுங்கள் சிரிப்பு வரும் அது தான் பகிடி

**மிதுஷியா — விசுவடு**

**அறிவியலுக்கும் ஆன்மீகத்திற்கும் என்ன வித்தியாசம்?**

ஆன்மீகம் போதிக்கிறது. அறிவியல் சோதிக் கிறது. அவ்வளவுதான்!




## பெண்ணே நீ விழித்துக்கொள்

நித்தம் நித்தம் கொடுமை
நிகழும் உலகில்
கலைமகளையும் விலைமகளாக்கும்
காலமிது பெண்ணே
நீ விழித்துக்கொள்
நாய் என்று எட்டி உதைக்கும்
நாசகாரர் மத்தியில்
நாசாவரை சென்றுகாட்ட
பெண்ணே நீ விழித்துக்கொள்
ஊதுகோல் கொண்டு அடுப்பங்கரையில்
உட்காரச் சொல்வர்
எழுதுகோல் எடுத்துக்கொண்டு
ஏட்டினைப் பிடித்துக்கொள்ள
பெண்ணே நீ விழித்துக்கொள்
அஞ்சி அஞ்சி அழுதிடாமல்
ஆணையிட்டு சொல்லவும்
கெஞ்சி கெஞ்சி வாழாமல்
கொடிகட்டிப் பறந்திடவும்
பாரதிகண்ட புதுமைப்பெண்ணாக
பெண்ணே நீ விழித்துக்கொள்

**க.சிவகௌரி**
**நெல்லியடி**

## உனக்கு அதற்கு நேரமில்லை!

எழுத்தறிவற்ற உன் மகனை
வித்தகனாக்க விடுமுறையில்
அதிபர் நானே ஆசானாய்
வகுப்பு வைத்தும் விடவில்லை
ஏற்றியிறக்க நேரமில்லை
என்றே எளிதாய் சொல்லிவிட்டாய்
போனெடுத்துப் பேசியுமே
போனதெந்தன் பணம்தானே!
பெற்றோர்க்கான கூட்டமென
பெரிதாய்க்கடிதம் அனுப்பியுமே
சற்றும் நீயோ மசியவில்லை
நேரம் இல்லையென்றுரைத்தாய்
ஆயின் எனக்கோர் ஐயமொன்று
அதனைத் தீர்ப்பாய் இன்றிங்கு
கல்விச் சுற்றுலா தன்னில்
கலந்து கொள்ளச் சந்தர்ப்பம்
பெற்றோருக்கும் வழங்குகையில்
முந்தியே நீ பணம் செலுத்தி
ஆசனத்தைப் பதிவு செய்வாய்!
பத்து மணிகள் பேருந்தில்
எத்திக்கெனினும் சுற்றிடுவாய்!
மகனைப் பெற்ற மறந்தாயே
மனிதனாக்க மறந்தாயே!
உலகம் சுற்ற நேரமெல்லாம்
உனக்கு வந்தது எப்படியோ?

**இரா.ஜெயக்குமார்**

## ஏன் சிதைத்தாய்?

ஏய் மழையே– நீ இடம்பார்த்து
பொழிபவளோ?
குருத்துக்கள் துளிர்விடும்போது
கிளைகள் ஒடிவதுபோல்
நம்பிக்கையுடன் உன்னை நம்பியபோது
நாணயம் மறந்தாயோ?
விதைகள் முளைவிடமுன்
முழுவதுமாய் மூடிவிட்டாய்
விளைகின்ற நிலமெல்லாம்
வினாவாகிப் போனதுவே
விதி என்று அழுவதா
எம் வினை என்று அழுந்துவதா
கதி என்று நம்பும்போது
சதியோடு நீ வந்தாயே
சோகத்தின் ரேகையை
சுமந்து வந்தாயோ?
காலத்தின் கணக்கில்
பருவங்கள் மாறியதால்
கனத்த மேகமாய் உன்
கரும்புருவம் உயர்ந்ததுவோ?
சென்றுவா மழையே– நீ
சிதைத்தவற்றை நாம்
சீர்படுத்த சிலகால அவகாசம்தா
மூச்சினில் முயற்சியோடு
ஜனித்தவர் நாம்
காலம் கனிய எம் கரங்கள் ஓங்கும்
சிதைந்தவற்றுக்காய் சிந்தை கலங்காது
மீண்டும் விதைப்போம்
புதைந்தாலும் எழுவோம்

**அ.நளினாசினி**
**கோண்டாவில்**

## இது தகுமோ?

உயரப் பறந்தாலும்
ஊர்க்குருவி பருந்தாகுமா?
தலைநிமிர்ந்து நின்றாலும்
நல்ல தலைவருக்கீடாகுமா?

கொலைகள் செய்தவர்பின்
மறைந்து நின்று கொண்டு
கொலையே நடக்கவில்லை
என்றுரைக்கும் சீமான்களே

கொத்துக்குண்டுபட்டு
குருதி கொட்டி செத்தவரை
காலம் மறந்திடுமா?

படுகாயமடைந்து
பராமரிக்க ஆளின்றி
உயிரை மாய்த்தவர் எக்கணக்கு?

நடக்க திராணியற்று
உயிருக்காய் ஓலமிட்ட
முதியவர் கணக்கு எங்கே போனது?

தமிழ்த் தலை ஒவ்வொன்றையும்
தெற்கிற்கு அடகு வைத்துவிட்டு
அடக்கமாய் இருக்கும்
தமிழ்த் தலைமையே!
நெஞ்சமுண்டோ உமக்கு?

வஞ்சம் செய்து
தமிழன் வாழ்வளித்த பாவியர் பின்
நெஞ்சை நிமிர்த்தி நிற்கிறீரே
இது தகுமோ?
இது முறையோ?

அது சரி...
உயிரை இழந்தவருக்கே புரியும்
இன்னொரு உயிரின் அருமை
நீர்தான் எதையும் இழக்கலையே

ஆதலால்
தமிழன் தலையை
அடகுவைக்கிறீர்
தெற்கில் தலைவைத்து
வடக்கில் வால் காட்டி...

**மாவை. நா.கஜேந்திரன்**

# மௌனத்தின் தேடல்– 382



## முரண்

பதாகையில் உறங்கும்
உனை அணைத்திட
ஓர் அன்னை இருக்கிறாள்...
உயிரோடு அநாதையாய்
அலையும் எனக்கு;
விழி நிறைய கண்ணீரையும்
மனம் முழுக்க வலியையும்
சொந்தமாக்கிவிட்டான் கடவுள்
காரணம் அறிந்திட முடியாத
அவனது படைப்புகளில்
இந்தப் பாவியும்
ஒன்றோ....???

**த.மோகனரூபன்**
**சுழிபுரம் கிழக்கு**

## தாயன்பு

நீக்கமற வெங்கும்
நிறைந்திருப்பதை
நிருபிக்கத்தான்
இறைவன் தாயன்பை
படைத்தானாயினும்
இடைவிடாத தடைகள்
இதற்கு வருவதுண்டு
போரைப் பின் தொடரும்
பொருளாதார வீழ்ச்சி
போதைப்பொருட்கள்
போசாக்குக் குறைபாடுகளை
யோசித்தால் தீர்வு வரும்

**க.நாகராசா**
**நுணாவில்**

## தேடலின் தவிப்பு

உண்மை அன்பை
தொலைத்துவிட்டு
உருவகித்த
அன்பை தொடுகிறாய்
உன் அன்னையும்
உயர்வு– என்று
ஊர்விட்டு தொலைதூரம்
உயர் சம்பளம் பெறப்
போய்விட்டாளோ
உன்னை தெருவில்
தவிக்கவிட்டு

**க.கருணாமூர்த்தி**
**மன்னார்**

## அம்மா

முடியாத பாசம்
உனக்காக அழும் விழிகள்
நீ மட்டும் சாய்ந்து கொள்ள ஒரு தோள்
உன்னை பசிக்காமல் பார்த்து
கொள்ளும் ஒரு தேவதை
"அம்மா"

**வி.கஜானன், வடலியடைப்பு**

## அநாதை

அன்னை படத்துக்கு
உயிர்கொடுத்து
அன்பைப் பெற ஏங்கும்
அன்புச் சிறுவனே
இந்தப் பொல்லாத
உலகில் உன்னை–நடு
பாதையில் விட்டவர் யார்?
பாசத்தின் உறைவிடம்–உன்
அன்பு அன்னை எங்கே?
உயிரின் பாதுகாவலன்–உன்
அன்புத் தந்தை எங்கே?
உன்னை அரவணைக்கும்
அன்பு உறவுகள்
எல்லாம் எங்கே சின்னஞ்சிறுவனே
சொல்லத் தெரியவில்லையா உன்
நெஞ்சக்குமுறலை
கவலைப்படாதே உனக்கு
உயிர் தந்த–உன்
அன்னை உன்னை விட்டுப் பிரிந்தாலும்
உனக்கு உயிர் தந்த உன்
தமிழ் அன்னை உன்னைகாப்பாள்

**அ.அகிலன்**
**கரவெட்டி**

## தவிப்பு

அம்மாவும் தம்பியும்
முள்ளிவாய்க்காலில்
உறங்குவதால்
அன்புக்காக
தவிக்கும் பிள்ளை– இங்கு
படத்தின் முன்னால்

**க.செல்வமலர்**
**சிறுவர் இல்லம்**
**திருநெல்வேலி**

## பாசம் உயர்ந்தது

அன்னையின் பாசத்தை
உணர்ந்த செல்வமே
உன் உடன்பிறப்பும்
அம்மாவும் காய்ச்சலால்
பீடிக்கப்பட்டதென
உள்ளம் நொந்தாயா?
டெங்கு வந்திடுமா என
ஏங்குகின்றாயா?
ஏங்காதே கண்ணா! உன்
பாசப்பிடியினுள் உள்ள இவர்களை
ஒரு காலமும் ஒரு
கஷ்டமும் நெருங்காது
பாசம் வெல்லும்
உலகில் உயர்ந்தது
அன்னையின் பாசமன்றோ!

**அபி குலமாலிகா**
**சங்கானை**

## ஏக்கம்

சுவரில் மாட்டப்பட்ட
அம்மாவும் தம்பியும்
சுனாமியில் காணாமல் போனதால்
கண்ணீருடன் காத்திருக்கின்றேன்
அழுத விழிகளோடு

**க.செல்வமலர்**
**இடைக்காடு**

# மௌனத்தின் தேடல் –383



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 27.12.2017ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# சிறுகதை

# நம்பிக்கை

திருமதி பி.ஜசந்தினி, அரியாலை

நாளை கிறிஸ்மஸ். வீட்டில போட்டது போட்ட இடத்திலேயே கிடக்கிது. "இந்த மனுசன் எங்க போயிட்டுது. காலையில போனது இன்னும் வரல" என எண்ணியவாறு வீட்டினை ஒதுங்க வைத்துக் கொண்டிருந்தாள் மேரி. என்றும் இல்லாதவாறு வாசலில் கட்டியிருந்த நாய் அங்குமிங்குமாய் சுழன்று உறுமி உறுமி குரைத்தது. இந்தக்காலத்தில் கள்ளர் காடையரது கரைச்சல். ஆனால் எங்கட வீட்ட தான் ஒன்றுமேயில்லையே என்றவாறு ஓலைக் கொட்டிலின் ஓட்டை வழியே எட்டிப்பார்த்தாள். தூரத்தில ஒரு கறுத்த உருவம் தாடியுடன் தாண்டித் தாண்டி நடந்து வந்து கொண்டிருப்பது தெரிந்தது. உற்று உற்றுப் பார்க்கிறார் மேரி. அடையாளம் தெரியவில்லை "எதற்கும் கிட்ட வரட்டும் பார்ப்பம்" என்று பொறுமைகாத்தாள். மெல்ல மெல்ல அசைந்து வந்த உருவம் வீட்டுப்படலைக்கு வந்தது. பயந்து போனவளாய் நடுநடுங்கிய குரலில் கேட்டாள் மேரி யார் யாரது? என்னவேண்டும்? என்றாள். உடனே அந்த நபர் நான் தான் பர்னாண்டோ மாஸ்டர் வந்திருக்கிறன். பர்னாண்டோ மாஸ்டரா?... எந்த பர்னாண்டோ மாஸ்டர்? என கேள்வி தொடுத்தாள் மேரி உடனே பர்னாண்டோ மாஸ்டர் சொன்னார் நான் தான் உங்கட பக்கத்து வீட்டு பங்கயத்தின் கணவர் ...என்றதும் மேரிக்கு ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டது. நம்பவே முடியல இப்படி ஒரு கிறிஸ்மஸ் விழாவில் பாலன் பிறப்பை கொண்டாடிய அடுத்த நாள் கரையோரப்பகுதியை கடல் அன்னை காவு கொண்ட 2004 ஆம் ஆண்டு சுனாமியின் போது இறந்ததாக கூறப்பட்ட இந்த பர்னாண்டோ மாஸ்டர் எப்படி 2017 ஆம் ஆண்டு மீள வந்தார். பங்கஜம் அக்காவினது நம்பிக்கை வீணாகவில்லை என எண்ணியவள் "வாங்க மாஸ்டர் வாங்கோ" என உள்ளே கூப்பிட்டாள் ஆளே முழுமையா கோலம் மாறிப் போயிட்டீங்கள் என்று மேரி சொல்லி வாய் மூடமுன் பர்னாண்டோ மாஸ்டர் "எங்க என்ட பங்கஜமும் பிள்ளைகளும்?.... நான் எங்கட வீட்ட போனன். வீடு பூட்டிக்கிடக்கிது யாரும் தெரிந்தவராக இல்லை அது தான் நேர இங்க வந்திட்டன் எனத் தொடர்ந்தார். அவர்கள் வீடு மாறிப் போயிட்டினம். இப்ப யாழ்ப்பாணத்தில உங்கட மகளுடன் இருக்கிறா பங்கஜம் அக்கா. உங்களுடைய மூத்த மகள் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருக்கிறார் இரண்டாவது மகன் பொறியியலாளராக இருக்கிறார். கடைசி மகள் இப்ப பல்கலைக்கழகத்தில் வைத்தியராக வருவதற்குப் படித்துக் கொண்டிருக்கிறாள். விலாசம் எழுதித்தாறன். நீங்கள் அங்க போய்ப் பாருங்கள் என்று எழுதிக் கொடுத்தாள் மேரி. அவளிடம் விலாசத்தை வாங்கிக் கொண்டு பர்னாண்டோ மாஸ்டர் புறப்பட மேரிக்கு பழைய நினைவுகள் மெல்ல துளிர்விட்டன ...

மணல்காடு மிகவும் பாலைவனம் நிறைந்த பகுதி பெரும் கடலின் இரைச்சலுடன் கடலிலிருந்து சிறுது தொலைவில் உள்ள ஓலைக் கொட்டில்களில் ஒன்றில் பிறந்தவர் தான் இந்த பர்னான்டோ மாஸ்டர். ஆரம்பத்தில் வறுமையின் பிடியில் சிக்கித்தவித்த இவரது குடும்பத்தில் இவர்தான் மூத்த பிள்ளை. இவர் காலையில் பாடசாலை செல்வதும் இரவில் கடலுக்குச் சென்று தொழில் செய்வதுமாக இவரது பருவம் கடந்தது. தந்தை சூசையுடன் இணைந்து கஷ்டப்பட்டு ஐந்து தங்கைகளையும் ஒரு தம்பியையும் படிப்பித்து எல்லோரையும் அரச உத்தியோகத்திற்குச் செல்ல வழி செய்தார் பர்னாண்டோ மாஸ்டர். குடும்பச் சுமைகளை இறக்கி வைத்து முப்பத்தைந்து வயதில் தான் பங்கஜத்தை கரம் பிடித்தார். பங்கஜம் குடும்பம் ஊரிலேயே பெரிய பணக்காரக் குடும்பம். பெரிய வீடு,சொத்துக்கள் எல்லாம் கொடுத்து மிகவும் சிறப்பாகக் கல்யாணமும் செய்து வைத்தார்கள். சீதனத்தை எதிர்பாராது இருந்தவருக்கு சிறு வயதில் கஷ்டப்பட்டதற்கு இப்ப நல்ல வாழ்வு கிடைத்தது. இதற்காக கடவுளுக்கு அடிக்கடி நன்றி பர்னாண்டோ மாஸ்டர் சொல்லிக் கொள்வதும் உண்டு. உண்மையில் பங்கஜம் ஒரு நல்ல வரப்பிரசாதம். பர்னாண்டோ மாஸ்டர் என்றால் அவளுக்கு உயிர். கணவனைக் கண்ணாகக் காத்து வந்தாள். தான் ஒரு ஆசிரியராக இருந்தாலும் கணவனுக்கு வேண்டிய வேலைகள் எல்லாவற்றையும் நிறைவாகவும் மன விருப்பத்துடனும் செய்வாள். பர்னாண்டோ மாஸ்டரும் அப்படித்தான் மனைவியின் மனம் அறிந்து செயற் படுபவர். மனைவி மனம் நோக நடக்க மாட்டார்.நேரம் கிடைக்கும் போது மனைவிக்கு வீட்டு வேலைகளுக்கு உதவி செய்வதும் தனக்குத் தெரிந்த கணிதத்தை ஊரில் உள்ள வறிய மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பதும் என காலம் ஓடிக் கொண்டிருக்க இவர்களுக்கு மூத்த பிள்ளை பிறந்தது. அவளைப் பராமரிப்பதற்கு ஒரு ஆள் தேவைப்பட்ட போது தான் இவர்களுக்கு உதவியாளாக என்னை பங்கஜம் ரீச்சர் தேர்ந்தெடுத்தார். நானும் என் பிள்ளைகள், கணவருடன் பர்னாண்டோ மாஸ்டருக்குச் சொந்தமாக இருந்த அவர்களுக்குப் பக்கத்து வீட்டில் வந்து குடியமர்ந்து என் பிள்ளை போல் பர்னாண்டோ மாஸ்டரின் பிள்ளையைக் கவனித்தேன்.

இதனால் பங்கஜம் ரீச்சரும் பர்னாண்டோ மாஸ்டரும் நிம்மதியாக வாழ்ந்து வந்தனர். மூத்த பிள்ளைக்குப் பின் இரு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களையும் கவனமாகக் கவனித்து வந்தேன். பிள்ளைகள் வளர்ந்து வரும் போது நல்ல பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து கல்வி கற்பித்தனர். பங்கஜம் ரீச்சரின் மகள் தரம் பத்திலும் மகன் தரம் ஒன்பதும் கடைசி நான்காம் தரத்திலும் படித்துக்கொண்டிருந்த காலம் வழமை போல் கிறிஸ்மஸ் முடிந்ததும் அடுத்த நாள் தனது பிறந்த மண்ணுக்குச் செல்வது பர்னாண்டோ மாஸ்டரின் வழக்கம். என்னதான் சொத்துச் சுகம் இருந்தாலும் தாய், தந்தை சகோதரங்களுடன் வாழ்ந்த சொந்த மண்ணில் ஒரு நொடி அமர்ந்திருக்கும் போது கிடைக்கும் சுகம் வேறு எதிலும் கிடையாது. தாய் முகம் பார்த்து பல கதைகள் பேசி ஒரு பிடி சோறு உண்டாலே ஒரு யுக பசி தீரும் என எண்ணுபவர் தான் இந்த பர்னாண்டோ மாஸ்டர். அதனால் தான் ஒவ்வொரு வருடமும் கிறிஸ்மஸ் முடிந் ததும் அடுத்த நாள் இவர் தனது சொந்த ஊருக்குச் செல்வது வழக்கம். அங்கு சென்று வீட்டிற்கு அருகில் இருக்கும் தேவாலயத்திற்குச் சென்று விட்டு அருகில் இருக்கும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு புதிய வகுப்புக்குத் தேவையான கொப்பி, புத்தகப்பை, உடுப்பு என எல்லாம் கொண்டு போய் கொடுத்து விட்டு வருவார். அவ்வாறே 2004 டிசெம்பர் 26 ஆம் திகதியும் மணல்காடு சென்ற போது சுனாமிப் பேரலையில் சிக்கி இறந்து போயிட்டதாக எல்லோரும் நம்பியிருந்த பர்னாண்டோ மாஸ்டர் எப்படி உயிருடன் வந்தார் என்று நினைத்துக் கொண்டிருந்த மேரிக்கு அவள் கணவனது குரல் கேட்டது. அவள் நினைவுகள் திரும்பின. வாங்கோப்பா இவ்வளவு நேரமும் எங்க போனீங்கள் இப்பத்தான் பர்னாண்டோ மாஸ்டர் வந்திட்டுப் போனவர் திகைத்துப் போனவனாய் நின்றான் ஸ்ரீபன். மேரி நடந்தவற்றைக் கூறி இப்பதான் அவர் பஸ் ஸ்டான்ட் வரைக்கும் போனார் என்று சொன்னதும் "இதே வாரன் போறு" என்று கூறியவன் பஸ் ஸ்டான்ட் நோக்கி ஓடினான் ஸ்ரீபன். ஒருவாறு பஸ் ஸ்டான்டில் ஒருவர் நிற்பதைக் கண்டதும் ஸ்ரீபன் மனது லேசானது. தன் பிள்ளைகள் போல் எங்கள் பிள்ளைகளையும் படிப்பித்தவர் இந்த மாஸ்டர் இண்டைக்கு என் பிள்ளைகள் இருவரும் வங்கியில் கை நிறையச் சம்பளத்துடன் இருப்பதற்கு உதவி செய்த தெய்வம் இவர் என்று மனதுக்குள் எண்ணியவன் கிட்டப் போனான். தள்ளாடும் வயதிலான கிழவனாய் தோற்றம் அளித்தார் பர்னாண்டோ மாஸ்டர். "என்னை ஞாபகம் வருகிறதா? நான் தான் உங்கள் ஸ்ரீ" என்றதும் "ஓ உன்னை எப்படி மறக்க முடியும் ஸ்ரீ. நீ என் உடன் பிறவாச் சகோதரன். எப்படியிருக்கிறாய் நான் உன்னுடைய வீட்ட வந்தனான் "என் மனைவி பிள்ளைகளை காணவில்லை என்பதால் அதைப் பற்றி மட்டும் கதைத்து விட்டு உன் மனைவியோ உன் பிள்ளைகளையோ பற்றிக் கேட்காம வந்திட்டன்" என எண்ணி இப்ப வருத்தப்பட்டுக் கொண்டிருந்தன். கடவுளாப் பார்த்து உன்னை அனுப்பி வைத்திருக்கிறான் என்றார். அவர் சொல்லி முடிந்ததும் ஸ்ரீபன் "சேர் நீங்கள் இறந்து விட்டதாக எல்லோரும் சொன்னாங்கள். ஊரே சோகமயமாக இருந்தது. உங்களிடம் படித்த எத்தனையாயிரம் மாணவர்கள் வந்தனர். ஒரு மனிதன் எப்படி வாழ்ந்தான் என்பதற்கு அவனின் மரணச் சடங்கில் வரும் மக்கள் தொகை சொல்லும். உண்மையில் நீங்கள் நல்மனிதனாக வாழ்ந்ததற்கு உங்கள் மரணத்தைக் கேள்விப்பட்டு வந்த மக்கள் கூட்டம் புரிய வைத்தது. எது எப்படியிருந்தாலும் பங்கஜம் ரீச்சர் மட்டும் நம்பவில்லை. நீங்கள் சாகவில்லை வருவீங்கள் ... வருவீங்கள் என்று காத்திருந்தவ. நீண்ட நாட்களாயினும் கடைசியாக போன வாரம் எங்கட வீட்ட வந்த போதும் நீங்கள் எப்படியாவது வருவீங்கள் எனக் கூறினா... அவவுடைய நம்பிக்கை வீண் போகவில்லை. எப்படி சாத்தியமாயிற்று" என்றான். அதைப்பற்றி நான் சொல்லிறன் உன்ட பிள்ளைகள் இரண்டும் எப்படி? சுகமாக இருக்கிறார்களா? உடனே ஸ்ரீபன் "ஓம் ஐயா இருவரும் வங்கியில் வேலை செய்கிறார்கள். மணம் முடித்து நல்ல வசதியாக நகரத்தில் இருக்கினம்" அப்ப நீங்கள் ஏன் இந்த ஓலைக் கொட்டிலில் என்று பர்னாண்டோ மாஸ்டர் கேட்க ஸ்ரீபன் வேறு ஒரு பிரச்சினையும் இல்லை. நகர வாழ்க்கை நரக வாழ்க்கையாக இருக்கு. இயந்திர வாழ்க்கை. அதனால சொந்த வீட்டில் இருப்பம் என்று மேரி வந்திட்டாள். பின்னால புதிதா வீடு கட்டிக் கொண்டிருக்கிறம். பிள்ளைகள் உதவி செய்கிறார்கள். உங்களது மக்களும் உதவி செய்யினம். அடிக்கடி வந்து போறவ என்றதும் தான் மீண்டு கதையைச் சொல்லத் தொடங்கனார் பர்னாண்டோ மாஸ்டர். நான் வழமை போல் அன்றும் தேவாலயத்தைக் கும்பிட்டு விட்டு வறிய பிள்ளைகளுக்கான உதவிப் பொருட்களைக் கொடுத்துக் கொண்டிருக்கும் போது வழக்கத்திற்கு மாறாக கடல் அன்னை பெரும் இரைச்சல் போட்டால். கடல் ஊருக்குள் வருகிது என்று கத்தியபடி மக்கள் ஓடிவந்தனர். நான் அந்த சிறார்களை இழுத்துக் கொண்டு பாதுகாப்பான இடத்தை நோக்கி ஓடினேன். கடல் அலை என்னை அடித்து தூக்கிப் போட்டது. நான் கல்லில் அடிபட்டு மயங்கி கிடந்தேன். மற்ற இடங்களில் எழுந்த அலையை விட எங்கட இடத்தில் எழுந்த அலை சிறிது என்பதால் பெரும்பாலான மக்கள் தப்பிக் கொண்டனர். மீட்புப் பணியில் ஈடுபட்டவர்கள் என்னில் உயிர் இருப்பதைக் கண்டு என்னை வைத்தியசாலையில் அனுமதித்தார்கள். நான் சுய நினைவின்றி (ஹோமா) பல ஆண்டுகள் இருந்தேன். என்னை வைத்தியர்களும் தாதியர்களும் கவனமாகக் கவனித்து வந்ததால் கடந்த ஆண்டு குணம் பெற்று மீண்டேன். இருந்தும் என் பழைய நினைவுகள் ஒன்றும் என்னிடம் இல்லை. நேற்றுத் தான் என் பழைய நினைவுகள் மீண்டன. நான் வந்து சேர்ந்தேன் என்றார். அவர் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட ஸ்ரீபனுக்கு பங்கஜம் ரீச்சரின் நம்பிக்கை வீணாகிப் போகவில்லை என்ற திருப்தி ஏற்பட இருவரும் சேர்ந்து வந்ததும் பங்கஜம் ரீச்சர் வீட்டை நோக்கி புறப்பட்டனர்.



# கனிமொழி, ராசா விடுதலை எய்தவர் பக்கம் திரும்பும் அம்பு

## குற்றச்சாட்டே சித்திரிக்கப்பட்டது என அழுத்தமாகக் குறிப்பிட்டு 2 ஜி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் விடுதலை

'குற்றச்சாட்டே சித்திரிக்கப்பட்டது' என அழுத்தமாகக் குறிப்பிட்டு, 2ஜி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரையும் விடுதலை செய்துள்ளார் நீதிபதி ஓ.பி. சைனி. அவருடைய தீர்ப்பை, 2ஜி வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த சி.பி.ஐ. மற்றும் அமுலாக்கத் துறைக்கு எதிரான குற்றப்பத்திரிகை என்றும் குறிப்பிடலாம். அந்த அளவுக்குத் தன் தீர்ப்பில் இந்த இரண்டு அமைப்புகளும் செய்த தவறுகளைப் பட்டியலிட்டுள்ளார் நீதிபதி ஓ.பி.சைனி.

"2ஜி வழக்கில், ஐந்து முக்கியமான குற்றச்சாட்டுகளை, குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சி.பி.ஐ. முன்வைத்தது.

1. அலைக்கற்றை உரிமம் பெறுவதற்கான திகதியை நிர்ணயம் செய்ததில் குளறுபடி, 2. பொது ஏலம் நடத்தாமல், முதலில் வருபவருக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் அலைக்கற்றையை ஒதுக்கீடு செய்தது, 3. தகுதியற்ற நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்தது, 4. டிராய் பரிந்துரைத்தபடி நுழைவுக் கட்டணம்-பதிவுக் கட்டணத்தில் மாற்றம் செய்யாதது, 5. 2ஜி அலைக்கற்றையில் ஆதாயம் அடைந்த பணத்தை கலைஞர் தொலைக்காட்சியில் முதலீடு செய்தது ஆகியவை அந்தக் குற்றச்சாட்டுகள்.

அவற்றை அடிப்படையாக வைத்து, மத்திய அமுலாக்கத்துறையும் ஆ.ராசா, கனிமொழி உள்ளிட்ட 19 பேருக்கு எதிராக குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்து, இந்த நீதிமன்றத்தில் வாதிட்டது. சி.பி.ஐ. மற்றும் அமுலாக்கத் துறை வைத்த வாதங்கள், குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் வாதங்கள், அதிகாரிகளின் சாட்சியங்கள், அரசுத்தரப்பு சாட்சிகள், எதிர்த்தரப்பு சாட்சிகள் என அனைத்தையும் தெளிவாகப் பதிவுசெய்து, ஆவணங்களைப் பரிசீலித்து, கடந்த ஏழு ஆண்டுகளாக இந்த வழக்கை விசாரித்துள்ளேன். வாரத்தில் ஆறு நாட்களும், வருடத்தில் கோடை விடுமுறை நாட்களிலும் இந்த வழக்கை விசாரித்துள்ளேன். அப்படி என் மனசாட்சிப் படியும், உச்ச நீதிமன்றத்தின் நேரடிக் கண்காணிப்பிலும் இந்த வழக்கை விசாரித்ததில், சி.பி.ஐ. மற்றும்அமுலாக்கத்துறை சொன்ன குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லை என்பது நிரூபணமாகியுள்ளது" என்கிறார் சைனி. தீர்ப்பில் அவர் கேட்டிருக்கும் கேள்விகள் ஆழமானவை.

### திகதியை நிர்ணயித்ததில் என்ன தவறு?

அலைக்கற்றை விற்பனைக்கான கட்-ஆஃப் திகதி பற்றி எப்போது, எங்கே, என்னவிதமான விதிமுறைகளை 'டிராய்' வகுத்துக் கொடுத்துள்ளது? அதுபற்றி எந்தவிதமான விதிமுறைகளும் இல்லை. 2001 ஆம் ஆண்டு டிராய் வகுத்துள்ள விதிமுறைகளில், 'அலைக்கற்றைகளின் இருப்பு, சந்தையில் அதற்கான தேவை, அதைக் கேட்டு வரும் ஆபரேட்டர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அவ்வப்போது அவற்றை விற்பனை செய்யுங்கள்' என்றுதான் குறிப்பிட்டுள்ளது. அதன் பிறகு, 2003, 2007 ஆம் ஆண்டு களில் சில திருத்தங் களை டிராய் செய் துள்ளது. ஆனால், அவை எதுவும் கட்-ஆஃப் திகதி குறித்தது அல்ல.

### ஆ.ராசா கொள்கையை மாற்றவில்லை!

'முதலில் வருபவருக்கே முன்னுரிமை' என்ற கொள்கை, இந்த வழக்கில் மிகப்பெரிய குற்றமாகப் பேசப்பட்டது. அதை, ஆ.ராசாதான் கொண்டுவந்தார் என்ற அடிப்படையில், இந்த வழக்கின் தொடக்கத்தில் சி.பி.ஐ. வாதிட்டது. ஆனால், 'வழக்கே அது தொடர்பான பிரச்சினை அல்ல' என்பது புரியவந்துள்ளது. 'முதலில் வருபவருக்கே முன்னுரிமை என்பதில் பிரச்சினை அல்ல. அதன்மூலம் எந்த நிறுவனங்கள் அலைக்கற்றையை வாங்கின என்பதுதான் பிரச்சினை' என்று இந்த நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது. ஏனென்றால், 'முதலில் வருபவருக்கே முன்னுரிமை' என்ற கொள்கையை ஆ.ராசா செயற்படுத்தவில்லை. அதற்கு முன்பே அந்தமுறையில் தான் விற்பனை நடந்துள்ளது. 'இந்தக் கொள்கையை மாற்ற வேண்டும் என்று யார் பரிந்துரை செய்தார்கள்? அப்படிச் செய்த பரிந்துரையைக் கருத்தில் கொள்ளாமல் ஆ.ராசா எப்போது செயற்பட்டார்?' என்பதற்கு சி.பி.ஐ-யிடம் பதில் இல்லை.

இப்படித்தான் விற்பனை நடக்கப் போகிறது எனப் பிரதமர் அலுவலகம், சட்டத்துறை அமைச்சகம், நிதி அமைச்சகம் என எல்லாவற்றுக்கும் உரியமுறையில் ஆ.ராசா தெரிவித்துள்ளார். அதற்கான கடிதப் போக்குவரத்து ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சாட்சிகள் அதை உறுதிப்படுத்தியுள்ளன. ஆனால், அவற்றையெல்லாம் கருத்தில்கொள்ளாமல், சிலர் தந்திரமாகச் செயற்பட்டு அது ஆ.ராசா செய்த தவறு என்று சித்திரித்துள்ளனர். தொலைத்தொடர்புத் துறை அதிகாரி மாத்தூர் சொன்ன முன்னுக்குப் பின் முரணான சாட்சி, அதை உறுதிப்படுத்துகிறது. ஆ.ராசா ஒன்றும் புதிதாக அந்த விதியைக் கொண்டுவரவில்லை. அதற்கு முன்பு இருந்த கொள்கையின் அடிப்படையில்தான் ஆ.ராசாவும் செயற்பட்டுள்ளார். அதை, நிதி அமைச்சகம் அனுமதித்துள்ளது. சட்ட அமைச்சகம் அனுமதித்துள்ளது. பிரதமர் அலுவலகம் அறிந்துள்ளது. பிறகு, இதில் ஆ.ராசாவை மட்டும் குற்றவாளியாக்குவதும் இதைக் குற்றம் என்று திரிப்பதற்கும் எந்த ஆதாரங்களையும் வாதங்களையும் சி.பி.ஐ.கொடுக்கவில்லை.

### நிறுவனங்களுக்கு எப்படித் தெரியும்?

'2ஜி அலைக்கற்றை விற்பனைக்கான விண்ணப்பிக்கும் திகதி பற்றி குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தது. அதனால்தான், ஸ்வான் டெலிகொம் உள்ளிட்ட குறிப்பிட்ட நிறுவனங்கள் ஆதாயம் அடைந்தன' என்று சொல்லப்படுகிறது. இதன் மூலம் சி.பி.ஐ. என்ன சொல்ல வருகிறது? அந்தக் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு ராசாதான் முன்கூட்டியே தகவல் சொன்னார் என்று சொல்ல வருகிறதா? அப்படி ஒரு கூட்டுச் சதி நடந்திருந்தால், அதற்கான ஆதாரம் எங்கே? தனியார் நிறுவனங்கள், தாங்கள் ஈடுபட்டுள்ள தொழில் பற்றிய விபரங்களை முன்கூட்டியே தெரிந்து கொண்டதற்கு ஆ.ராசாவை எப்படி குற்றவாளியாக்க முடியும்? ஒரு தொழிலில் இருக்கும் தனியார் நிறுவனப் பிரதிநிதிகள், அந்தத் தொழிலை நடத்தும் அரசுத் துறை அலுவலகங்களுக்கு அலுவல் வேலை காரணமாக அடிக்கடி போவதும், அதிகாரிகள் முதல் அந்தத் துறை ஊழியர்கள் வரை அனைவரிடமும் தொடர்ந்து நெருக்கமாக இருப்பதையும் குற்றமாகச் சொன்னால், அதில் யாரைத் தண்டிக்க முடியும்? அப்படித் தண்டனை வழங்குவதற்குத் தகுதியான வகையில், எந்தக் குற்றத்தை சி.பி.ஐ. நிரூபித்துள்ளது?

### கலைஞர் ரி.விக்கும் ராசாவுக்கும் என்ன தொடர்பு?

"ஆ.ராசாவும் கனிமொழியும் அடிக்கடி சந்தித்துக் கொள்வார்கள். கனிமொழி, கலைஞர் தொலைக்காட்சியில் முக்கிய பங்குதாரர். கலைஞர் தொலைக்காட்சிக்குலைசென்ஸ் பெறுவதற்கு ராசா உதவினார். அதனால், கலைஞர் தொலைக்காட்சிக்கும் ஆ.ராசாவுக்கும் தொடர்பு இருக்கிறது. 2ஜி-யில் ஆதாயம் அடைந்த நிறுவ னங்கள் கலைஞர் தொலைக்காட்சி யில் முதலீடு செய்ததன் மூலம், ராசாவுக்கு இலஞ்சம் கொடுத்தன. அந்த இலஞ்சம்தான் கலைஞர் தொலைக்காட்சிக்கு வந்த 200 கோடி ரூபாய் பணம்" என்று சி.பி.ஐ. வாதிட்டுள்ளது.

ஆ.ராசா, கனிமொழி இருவரும் ஒரே கட்சியைச் சேர்ந்த எம்.பிக்கள். ஒரு கட்சியின் எம்.பிக்களும் அமைச்சர்களும் சந்திப்பதும்பேசுவதும் இயல்பானது. ஆ.ராசா இதேபோல் கனிமொழியை மட்டும் சந்திக்கவில்லை. அவர் சார்ந்த கட்சியின் அமைச்சர்கள், எம்.பிக்கள், மாற்றுக் கட்சி எம்.பிக்கள் எனப் பலரையும் சந்தித்துள்ளார். மேலும், இந்த அடிப்படையில் ராசா, கலைஞர் தொலைக்காட்சியில் முதலீடு செய்தார் என்பதற்கோ, அவர் சொல்லித் தான் சினியூக், குஷேகான் நிறுவனங்கள் கலைஞர் தொலைக்காட்சியில் முதலீடு செய்தன என்பதற்கோ எந்த ஆதாரங்களையும் சி.பி.ஐ. சமர்ப்பிக்கவில்லை. கலைஞர் தொலைக்காட்சிக்கும், அந்த நிறுவனங்களுக்கும் நடைபெற்ற பணப் பரிவர்த்தனை தனி. அதில் ராசாவைக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கு ஆதாரங்கள் இல்லை.

### கோப்புகள்... ஆவணங்கள்!

தொலைத்தொடர்புக் கொள்கை பற்றிய முழுமையான, தெளிவான கோப்புகள் அரசாங்கத்திடமும் இல்லை. சி.பி.ஐ. வசமும் இல்லை. இந்த வழக்குத் தொடர்பாக ஒவ்வொரு அதிகாரியும், ஒவ்வொரு விதமான கருத்தைப் பதிவு செய்துள்ளனர். வழக்கை விடுங்கள்... அவர்களின் துறை பற்றிய தகவல்கள், தொழில்நுட்பங்கள் தொடர்பாகக்கூட, அந்த அதிகாரிகள் முழுமையாகத் தெரிந்து வைத்திருக்க வில்லை. அந்த அளவுக்கு அவை டெக்னிக்கலாக உள்ளன. இந்த நிலையில், சில அதிகாரிகளின் கருத்துக்களை வாக்குமூலங்களா கப் பதிவுசெய்து, அவற்றையே ஆதாரமாக நீதிமன்றத்தில் சி.பி.ஐ. சமர்ப்பித்துள்ளது.

இந்த விவகாரம் வெடித்த 2009 ஆம் ஆண்டு இது தொடர்பாக எஃப்.ஐ.ஆர். பதிவு செய்த சி.பி.ஐ. அதன்பிறகு ஒன்றுமே செய்யவில்லை. இந்த வழக்குக்குத் தேவையான ஆதாரங்களைத் திரட்ட சி.பி.ஐ. முனையவில்லை. 2010ஆம் ஆண்டு ஊடகங்களும் அரசியல் கட்சிகளும் இந்த விடயத்தைப் பூதாகரமாக்கின. அதன்பிறகு அவசர அவசரமாகச் செயற்பட்ட சி.பி.ஐ. தங்களுக்குத் தெரிந்த தகவல்களின் அடிப் படையில் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்துள்ளது. சி.பி.ஐக்கு இந்த விவகாரம் பற்றித் தெளிவாகத் தெரியவில்லை. ஊடகங்களில் வெளியான செய்திகள், குற்றச்சாட்டுகளைத் தெரிவித்தவர்கள் அளித்த விபரங்கள் ஆகியவற்றை மட்டுமே வைத்துக் குற்றப்பத்திரி கையை எழுதியுள்ளது. முழுக்க முழுக்க சில உதிரித் தகவல்களை வைத்து, அவற்றை இணைத்துத் திரித்துத் தயாரிக்கப்பட்ட குற்றப்பத்திரிகை இது.

'ஏலம் நடத்தவில்லை என்பதால் தான் நஷ்டம்' என்பதற்கும் 'அந்த முடிவை ராசாதான் எடுத்தார்' என்பதற்கும் எந்தவிதமான ஆதார மும் இல்லை. சி.பி.ஐ. மற்றும் அமுலாக்கத்துறை, சில விடயங்களைத் தேடியுள்ளன. ஆனால், அவை கிடைக்கவில்லை. அதனால் விவகாரத்தைத் தங்களுக்கு ஏற்ற வகையில் புரிந்துகொண்டு வழக்கை சித்திரித்துள்ளன. குற்றம் நடந்ததாகச் சொல்லும் சி.பி.ஐ. அதற்கு எந்த ஆதாரத்தையும் சமர்ப்பிக்கவில்லை. அதனால், அனைவரையும் விடுதலை செய்கிறேன்" என்றிருக்கிறார் சைனி.

நீதிபதி சைனி, சி.பி.ஐக்கு எதிராக எழுதியுள்ள இந்தக் குற்றப்பத்திரிகையிலிருந்து சி.பி.ஐ.எப்படித் தப்பிக்கப்போகிறது?

தீர்ப்பு செய்தியை கருணாநிதியிடம் சொல்லும் ஸ்டாலின். அருகில் அன்பழகன்.



ஜூனியர் விகடன்

# காளான் உற்பத்தியில் சாதிக்கும் கந்தசாமி

"ஒரு மனிதனுக்கு ஆரோக்கியமான உணவு கொடுக்கிறேன் என்ற ஆத்ம திருப்தியில் தொடங்கப்பட்ட உற்பத்தி தான் இது" என்கின்ற பெருமை பொங்க சைக்கிளை ஸ்டாண்டிலில் விட்ட படி எங்களை பார்த்து சிரிக்கின்றார் காளான் கந்தசாமி. பிரான்பற்று பண்டத் தரிப்பைச் சேர்ந்த காந்தீபராசா கந்தசாமி. இவர் வன்னி பகுதியில் வசித்து வந்த வேளையில் 1986/ 1987 ஆம் ஆண்டளவில் தொடங்கப்பட்டது. இந்த உற்பத்தி. அங்கிருக்கும் காலப் பகுதியில் காளான் பாண் , காளான் பிஸ்கட் போன்ற பொருட்கள் பெருமளவில் விற்கப்பட்டன. காளான் உற்பத்தியாளராகிய இவரது சிந்தனை காளானை உற்பத்தி செய்து காளானாகவே மக்களுக்கு கொடுக்கக்கூடாது அதன் மூலம் சத்தான உணவுப் பொருட்களை செய்து ஆரோக்கியமான வாழ்வை மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதே ஆகும் . இந்த சிறப்பான முயற்சியை செய்யும் காந்தீபராசா கந்தசாமி விருது ஒன்றிற்குப் பரிந்துரை செய்யப் பட்டுள்ளார். அவரு க்கு கிடைத்த இடைவெளியில் சிறு நேர்கா ணலை மேற்கொள்ளப் பிடித்துக் கொண்டோம் அவரை.

**வணக்கம் ! வாசகர்களுக்கு உங்களைப் பற்றிய சிறிய அறிமுகத்தை வழங்குங்கள்.**

வணக்கம் ! எனது பெயர் காந்தீபராசா கந்தசாமி. நான் யாழ்ப்பாணத்தில் இந்த காளான் உற்பத்தியை கடந்த 02 வருடங்களாக செய்து வருகின்றேன். ஏற்க னவே வன்னியில் இந்த உற்பத்தியில் எனக்கு அனுபவம் உள்ளது. அதனை மேற்கொண்டு இலாபமும் ஈட்டியுள்ளேன்.

**இந்த காளான் உற்பத்தியில் உங்களுக்கு எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?**

1986/1987 காலப்பகுதியில் விடுதலைப் புலிகளால் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. முதன் முதலில் அவர்களால்தான் இந்த முயற்சி ஆரம்பிக்கப்பட்டது என்று சொல்லலாம். அந்த வகையில் மக்களுக்கு ஆரோக்கியமாகவும் சத்தாகவும் செய்யப்படுகின்ற இந்த தொழிலில் ஒருவித ஆர்வம் தானாகவே ஏற்பட்டு விட்டது. இந்த தொழிலை நானும் மேற்கொள்ளலாமே என்ற ஆர்வத்தில் ஓர் உந்துதலில் தொடங்கப் பட்டது தான் இது. கச்சேரியின் கைத் தொழில் முயற்சி மற்றும் புனர்வாழ்வு அதிகார சபையினால் சுயதொழில் வாய் ப்பு தொடங்கிய போது நானும் இதற்கு விண்ணப்பித்திருந்தேன். அவர்களும் எனக்கு இதில் அங்கீகாரம் வழங்கி இருந்தார்கள்.

**இந்த காளானை நீங்கள் எப்படி பயிரிடுகிறீர்கள் ?**

ஆரம்பத்தில் வைக்கோல் மற்றும் கச்சான் கோது போன்றவற்றில் தான் இந்த காளான் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. பின்பு காளான் உற்பத்திக்காகவே அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றுதான் மரத்தூள் ஆகும். பலா மற்றும் மா மரத்தூள்தான் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு பால் மரங்களின் மரத்தூள்தான் அதிகம் தேவை. இந்த மரத்தூள் பை ஒன்றினுள் இடப்பட்டு தான் எங்களிடம் கையளிக்கப்படும். இந்த மரத்தூள் பைகளை ஒரு பெரிய பரலில் போட்டு இரண்டு மணி நேரம் அவிக்க வேண்டும். அப்போதுதான் அதில் இருக்கும் பங்கசு தொற்று கிருமிகள் எல்லாம் காணாமல் அழிந்து போகும். அவ்வாறு அவிக்கப்பட்ட மரத்தூளை 24 மணிநேரத்திற்கு நன்றாக காயவிட வேண்டும். பின்னர் காற்றுகூட புக முடியாத இருட்டு அறையினுள் வைத்து நுளம்பு உட்புகாமல் இரு வலைகள் அமைத்து குளிர்மையான இடத்தில் வைக்க வேண்டும். இப்படியாகக் கிட்டத் தட்ட நான்கு மாதங்களில் இந்த காளான் பெறப்படும். 200 பை மரத்தூள் போட்டால் 30 கிலோ கிராம் காளானைப் பெற்றுக் கொள்ளலாம். இதற்கு முக்கியமாக பாதுகாப்பும் பொறுமையும் தேவைப்படுகிறது.

**காளானில் என்ன வகை இருக்கின்றது? அதை எப்படி கண்டுபிடிப்பீர்கள்?**

ஆம், காளானில் சிப்பி காளான் (Oyster mushroom) , பால் காளான் (Milky mushroom ), அபலோன் காளான் (Abalone mushroom) என முக்கியமாக மூன்று வகைக் காளான் காணப்படுகின்றன. தற்போது ரிசி காளான் என்ற வகையும் உற்பத்தி செய்து வருகின்றேன். சிப்பி காளான் என்பது சிப்பி போன்ற வடிவில் வளரும். பால் காளான் என்பது தண்டு விட்டு மேலே தொப்பி போல வளரும். அபலோன் காளான் என்பது மண்ணிறத்தில் வளரும் தன்மை கொண்டதாகையால் கண்டுபிடிப்பது இலகுவானது. இதற்கு மரத்தூளில் அந்தந்த விதைகளினைப் போட்டு வளர வைக்க வேண்டும். இந்த விதைகள் திருநெல்வேலி பண்ணையில் அதிகம் கிடைக்கின்றன.

**காளானிலிருந்து என்னென்ன உணவுப் பொருட்கள் எப்படி தயாரிக் கின்றீர்கள் ?**

இந்த பயிரிட்ட காளான்களைப் பவுடர் ஆக்கி காய வைத்து பைக்கெற் செய்தும் விற்கின்றோம். அந்த தூளை வைத்து பயத்தம் பணியாரம் , சரக்குத்தூள் , தேநீர் , மூலிகை இரச பொடி , சம்பல் , இனிப்பு முறுக்கு , பொரியல் கலவை, இலைக்கஞ்சி போசாக்கு மா, லட்டு மல்லி தூள், மிளகாய் தூள் , உடனடிச் சத்துமா ஆகிய உற்பத்திப் பொருட்கள் மேற்கொள்கின் றோம். இது சத்து நிறைந்ததாகவும் ஆரோக்கியமானதாகவும் நோய்களைக் குணமாக்கக் கூடியதாகவும் இருக்கும்.

**காளான் உற்பத்தியில் உங்கள் பொருளாதார நிலை எவ்வாறு உள்ளது ?**

இந்த உற்பத்தியில் எனக்கு மாதம் கிட்டத்தட்ட ரூ. 40-50 ஆயிரம் வரையான வருமானம் கிடைக்கக் கூடியதாக உள்ளது. மேலும் என்னால் ஏனையவர்களுக்கும் காளான் பயிரிடுவது சம்பந்தமான பயிற்சிப் பட்டறைகளும் வழங்கப்பட்டு கொண்டு இருக்கிறன்றன. கொடிகாமம், சாவகச்சேரி, அல்லைப்பிட்டி, மன்னார், மட்டக்களப்பு போன்ற பகுதியில் இருந்தும் என்னிடம் பயிற்சி பெறுகிறார்கள். பிரதேச செயலகம் மற்றும் சமுர்த்தி அலுவலர்கள் எனக்கான வாய்ப்பை ஏற்படுத்தித்தந்துள்ளனர். இதற்காக எனக்கு கொடுப்பனவும் கிடைக்கப் பெறுகிறது. மேலும் பெண் தலைமைத்துவ குடும்பங்களும் "புனர்வாழ்வு அளிக்கப்பட்ட போராளிகளும் இது போன்ற பயிற்சியில் அதிகம் கலந்து கொள்கிறார்கள். என்னால் பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் காளான் பயிர் செய்து என்னிடமே விற்பனையும் செய்கிறார்கள்.



**இந்த சிறிய அளவில் செய்யப்படும் முயற்சியை நீங்கள் ஏன் பெரிய அளவில் செய்யக் கூடாது?**

பெரிய அளவில் செய்ய ஆர்வமாக தான் உள்ளேன் . ஆனாலும் சிக்கலாக இருப்பது பொருளாதார நிலைமைதான். இந்த வாடகை கடை போடப்பட்டு ஆறு மாதம் தான் ஆகிறது. ஆரம்பத்தில் நான் சைக்கிளில் கொண்டு சென்று தான் வியாபாரம் மேற்கொண்டேன். தற்போது தான் ஒரு கடையில் இருந்து வியாபாரத்தினை செய்து வருகின்றேன். அந்த நிலையில் இருந்து சற்று இந்த நிலைக்கு முன்னேறி வந்துள்ளேன் . இனியும் என்னால் உயரத்திற்கு வர முடியும். என்ன சற்று கால தாமதம் ஆகலாம். அவ்வளவுதான் 2000ஆம் ஆண்டளவில் இந்த காளான் முயற்சி வெற்றியளிக்காது என்ற கருத்துக்கள் தான் அதிகளவில் இருந்தன . அதனால் சவாலாகத் தான் இந்த தொழிலை ஆரம்பித் தேன். தற்போது வெற்றியும் கண்டுவிட்டேன்.

உங்களது இந்த தொழிலை உங்கள் அடுத்த தலைமுறை காவிச் செல்லுமா என்ற கேள்விக்கு புன்னகைத்துக் கொண்டே எனது வாரிசுகள் செய்யாவிட்டால் என்ன நான் தான் சிறந்த ஆட்களை உருவாக்கி வருகின்றேனே! அவர்களால் இந்த காளான் உற்பத்தி முன்னேறிச் செல்லும் என்கிறார் தன் நம்பிக்கையுடன், பேசிய படியே ஒரு காளான் பைக்க ற்றைப் பிரித்து தந்தார். எங்களிடம் நாங்களும் ஒன் த கோவை சுவைத்த உணர்வுடன் எம் பல்கலையின் வேலை இல்லாத பட்டதாரிகளை இந்தத் தொழிலில் ஈடுபடுத்தி விட்டால் என்ன என்கின்ற சிந்தனையுடன் விடை பெற்றுக் கிளம்பி னோம் அவரிடம் இருந்து.

தேவயசி வீரசிங்கம்
ஊடகக் கற்கைகள்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# இராமன் போட்ட பாலம்



இந்தியாவின் இணையற்ற பக்திக் காவியம் இராமாயணம். பல மொழிகளில் பலவகை இராமாயணங்கள் வழக்கத்திலிருந்து வந்தாலும், எல்லா இராமாயணங்களுக்கும் மூலமாக இருப்பது வால்மீகி முனிவர் எழுதிய இராமாயணமே. சம்ஸ்கிருத மொழியின் சாசுவதமான புகழுக்கு உரிய காவியம் இராமாயணம். வால்மீகி இராமாயணத்தில் யுத்த காண்டப்பகுதியில் அத்தியாயம் 22 இல் சேது பந்தனம் என்னும் பிரிவில் ஸ்ரீராமபிரானின் வானர சேனைகள் கூடி இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான பாலத்தைக் கட்டிய தகவல்கள் விபரிக்கப்பட்டுள்ளன. வானர சேனைகளின் உதவியுடன் 34 கி. மீ. தூரமுள்ள பாலத்தை, 103 சிறிய குன்றுகளை இணைத்து 5 நாட்களில் கட்டி முடித்தார் இராமபிரான் என்று கூறப்படுகிறது. ஏழாயிரம் ஆண்டுகளைத் தாண்டிய இந்தப்பாலம், உண்மையானது என்றும் இல்லை என்றும் இன்று வாதப்பிரதிவாதங்களைச் சந்தித்து வருகிறது. ஸ்ரீராமர் எப்படி பாலத்தினை கட்டினார். அதற்கு வானர சேனைகள் எப்படி உதவின என்பதைக் குறித்த சுவையான புராணக்கதை வால்மீகி இராமாயணத்தில் உள்ளது.

சீதையைக் கவர்ந்து சென்ற இராவணன், அவரை இலங்கையில் தான் சிறை வைத்திருக்கிறான் என்பதை ஹனுமான் மூலம் இராமர் அறிந்து கொண்டார். உடனே இந்தியாவின் இராமேஸ்வர முனையை அடைந்து இலங்கையை அடையும் வழியைப் பற்றி யோசித்தார். கடலின் மீது ஒரு பாலம் அமைத்தாலன்றி, இலங்கையை அடையமுடியாது என்பதால், கடலில் ஒரு பாலம் அமைக்க விரும்பினார். ஆனால் பொங்கி வரும் அலைகளின் மீது பாலம் கட்ட முடியாது என்பதால் கடல் அரசனை வணங்கி, அலைகளை ஓய்ந்திருக்கச் செய்யும் படி வேண்டினார். வருணம் சற்று தாமதிக்கவே கோபம் கொண்ட இராமபிரான் வில்லினை எடுத்து வருணனுடன் போர் செய்ய ஆயத்தமானார். உடனே வருண பகவான் நேரில் தோன்றி இராமபிரானிடம் தாமதத்துக்கு மன்னிப்பு கேட்டுக்கொண்டு கடல் அலைகளை ஓய்ந்திருக்கும்படி செய்தார்.

அலைகள் இல்லாத கடலின் மீது வானர சேனைகள் பாறைகளைக் கொண்டு வந்து போட்டு பாலம் கட்டத் தொடங்கின. இந்தப் பணிக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்றார் ஹனுமான். கடலில் போடும் பாறைகள் யாவும் நீரில் மூழ்கி மறைந்தன. இதனால் கடல் பாலம் கட்டும் பணி தாமதமானது.

அப்போது ஸ்ரீராமரின் ஆணைப்படி வானரங்கள் கொண்டு வரும் பாறைகள் இறுதியாக நளன் என்ற வானரத்தின் கைகளில் ஒப்படைக்கப்பட்டது. நளன் கடலில் வீசிய பாறைகள் மிதந்து அப்படியே நின்றன. இதனால் பாலம் கட்டும் பணி விரைவாகி வானர சேனைகள் உற்சாகமாகின.

ஹனுமான் வலக்கையில் கொண்டு வந்த பாறைகளை நளன் இடக்கையால் வாங்கி வீசுவதைக் கண்டு ஹனுமான் சினம் கொண்டார். இதனால் பாறைகளைத் தானே போடத் தொடங்கினார். ஆனால் அந்தப் பாறைகள் நீரில் மூழ்கின. ஹனுமனை நெருங்கிய ஸ்ரீராமர், "நல்ல காரியத்தில் ஈடுபடும் போது பெரியவர், சிறியவர் என்ற பாகுபாடு கூடாது" என்று அறிவுறுத்தி நளனிடமே பாறைகளைக் கொடுக்கச் சொன்னார். நளனோடு அதனுடைய நண்பரான நீலனும் இந்தப் பணியில் உற்சாகமாக ஈடுபட்டனர்.

இவ்விதம் பணிகள் நடந்து வந்தபோது, நளன் எறிந்த பாறைகள் மட்டுமே மிதப்பதைக் கண்ட இலட்சுமணர் அதன் காரணம் என்னவென்று ஸ்ரீராமரை ஆச்சரியத்தோடு கேட்டார்.

"மாதவேந்திரர் என்ற மகாஞானி ஒரு சூரியகிரகணத்தன்று நீரில் மூழ்கி கிரகண தோஷ நிவர்த்திக்காக நீராடிக்கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த நளன் என்ற இந்தக் குட்டி வானரம் மகிழ்ச்சி கொண்டது. பிறந்ததிலிருந்தே சேட்டைகள் செய்து பலரை அவதிக்குள்ளாக்கும் இயல்பு கொண்ட வானரம் நளன். நீராடிக் கொண்டிருந்த ஞானியைக் கண்டதும் அது உற்சாகமாகி, குளத்தின் கரையிலிருந்த கற்களை வீசி, அது மூழ்கும் போது உண்டான சத்தமும் சாரலும் கண்டு சிரித்தது. இதனால், முனிவரால் மந்திரங்களை முறையாக உச்சரிக்க முடியாமல் போனது. அந்த வானரத்தை விரட்டினார்.

பலமுறை விரட்டியும் நளன் போகவில்லை. ஞானிக்குக் கோபம் எழுந்தாலும் அதை அடக்கிக்கொண்டார். மந்திரம் சொல்லும்போது கோபம் கொண்டு சாபம் விட்டால் மந்திரசக்தி குறைந்து விடும் என்பது ஐதீகம். இதனால், "இனி நீ எறியும் கற்கள் தண்ணீருக்குள் மூழ்காமல் மிதந்து கிடக்கட்டும்" என்று சொல்லி மந்திரத்தைத் தொடர்ந்தார். அதன்படி நளன் எறிந்த கற்கள் மிதக்கத் தொடங்கின.

கல் மூழ்காமலும் சத்தம் வராமலும் போனதால் சுவாரசியம் குறைந்து நளன் அங்கிருந்து சென்றுவிட்டது. அன்று முதல் நளன் எறியும் எந்தக் கல்லும் மிதக்கும் என்பதாலேயே இந்தப் பாலத்தின் பணிகள் ஒழுங்காக நடைபெறுகின்றன" என்று ஸ்ரீராமர் விளக்கினார்.

இப்படி வானரசேனைகள் கூடி, கண்துஞ்சாது கடமை செய்து ஐந்து நாட்களில் சேதுபந்தனம் என்னும் இராமர் பாலத்தைக் கட்டி முடித்தன. மிதக்கும் அந்த அழகிய பாலத்தைக் கண்டு இராமபிரான் மகிழ்ந்து வருணபகவான் தனக்குப் பரிசளித்த நவரத்தின மாலையை நளனுக்கு அளித்தார் என்றும் வால்மீகி இராமாயணம் தெரிவிக்கிறது.

"

இராமேஸ்வரம் கடல் பகுதியில் இராமர் பாலம் இருந்ததற்கு ஏராளமான ஆதாரங்கள் இருப்பதாக இந்திய அறிவியல் ஆய்வு மையம் உறுதிப்படுத்தியுள்ளது.

இராமர் பாலம் குறித்து முழுமையாக ஆய்வு செய்த அந்த மையத்தின் இயக்குநர் ஹரி வால்மீகி இராமாயணத்தை முழுமையாக ஆய்வு செய்து பார்த்ததில் இராமேஸ்வரம் கடல்பகுதியில் இராமர் பாலம் கட்டியிருப்பது உண்மை என்று தெரியவருகிறது என்று கூறியுள்ளார்.

இந்தியா - இலங்கை இடையிலான கடல் பகுதியில் 103 குறுமலைகளை இணைத்து வானரப் படையின் உதவியுடன் 34 கி.மீ. தூரமுள்ள பாலத்தை இராமர் 5 நாட்களில் கட்டி முடித்தார் என்று வால்மீகி இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு வந்த பல வெளிநாட்டு ஆய்வறிஞர்கள் இதைப் பதிவு செய்துள்ளனர். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு, இராமர் கட்டிய பாலத்தின் வழியாக வியாபாரிகள் 1480 ஆம் ஆண்டுகளில் நடந்து சென்று வியாபாரம் செய்திருப்பதும் வரலாற்று புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

400 வருடங்களுக்கு முன்னர் இராமேஸ்வரம் கடல் பகுதியில் ஏற்பட்ட ஆழிப் பேரலையால் இராமர் பாலம் மூழ்கிவிட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

இதுகுறித்து தெளிவான ஆய்வுக்கு அனுமதி வழங்க வேண்டும். இராமர் பாலம் இருந்ததற்கான ஆதாரங்களை சேகரித்து சீக்கிரமாக வெளியிட்டுள்ளோம் என்றார் அவர்.

இந்த நிலையில் அமெரிக்காவின் சயின்ஸ் சேனல் வெளியிட்ட வீடியோவில், இராமர் பாலம் மனிதர்களால் தான் கட்டப்பட்டுள்ளது என்று உறுதிபடக் கூறப்பட்டுள்ளது.

"



# இறுதியில் தடுமாறுவது ஏன்?

இந்த ஆண்டு மட்டும் ஆறு தொடர்களின் இறுதிப் போட்டிகளுக்குள் நுழைந்தார் பி.வி.சிந்து. உலக சாம்பியன்ஷிப், டுபாய் உலக சுப்பர் சீரீஸ் போன்ற மிகப்பெரிய தொடர்களும் அவற்றுள் அடக்கம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக இரண்டிலுமே வெற்றியை மயிரிழையில் நழுவ விட்டார்சிந்து.



தோல்வி ஒருபோதும் அவரை வதைப்பதில்லை. துவண்டு விடாமல் ஒவ்வொரு தொடரிலும் அடுத்தகட்டத்தை எட்டிக் கொண்டே இருக்கிறார்.

சிந்துவின்கடினஉழைப்பை, ரியோ ஒலிம்பிக் முதலே பார்த்து வருகிறோம். இறுதிப்போட்டியில், ஸ்பெயின் வீராங்கனை கரோலினா மரினை எதிர்கொண்டு, 1 மணி நேரம் 23 நிமிடங்கள் போராடினார். அதைப்போல், ஓகஸ்ட் மாதம் நடந்த உலக சம்பியன்ஷிப் போட்டியில், ஜப்பானின் நசோமி ஒகுஹாராவை எதிர்த்து 1 மணி நேரம் 50 நிமிடம் போராடினார்.

உலக சுப்பர் சீரிஸ் இறுதியில் ஜப்பானின் அகானே யமாகுச்சியை எதிர்த்து 1 மணி நேரம் 34 நிமிடங்கள் விளை யாடினார். இந்த மூன்று போட்டி களிலும் ஓர் ஒற்றுமை உண்டு: மூன்று போட்டிகளிலும் வெள் ளிப்பதக்கத்தைத் தட்டிச்சென்றார் சிந்து!

யாரும் குறைகூற முடியாத உழைப்பை ஒவ்வொரு போட்டியிலும் செலுத்துகிறார். எந்த ஒரு இறுதிப்போட்டியிலும் அவர் மனதளவில் தனக்குத் தடையை ஏற்படுத்திக் கொண்டதில்லை. இருந்தும்கூட, தங்கப்பதக்கம் வாங்கவிடாமல் அப்படி என்னதான் அவரைத் தடுக்கிறது? ஒட்டுமொத்த நாடும் தன்னை உற்றுநோக்கும் அனுபவம் முதன்முதலில் சிந்துவுக்கு ரியோ ஒலிம்பிக்கில் தான் அமைந்தது.

அந்த அழுத்தத்துக்கு அப்போது அவர் புதிது. ஆனால், அவர் இந்த ஆண்டு நடந்த உலக சம்பியன்ஷிப் மற்றும் சுப்பர் சீரீஸ் இறுதிப்போட்டிகளில் இந்த அழுத்தத்துக்குத் தன்னை நன்றாகவே தயார் செய்து வைத்திருந்தார்.

கடந்த ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் சிந்துவுக்கு எதிராக ஆடிய மரின், இடதுகை ஆட்டக்காரர். சிந்துவை வீழ்த்துவதற்கான எல்லா கோணங்களையும் அலசி ஆராய்ந்து விளையாட, மிக எளிதாகவே இது அவருக்குப் பேருதவி புரிந்தது.

அப்போது சிந்துவுக்குக் கிடைத்திருந்த ஒலிம்பிக் அனுபவங்கள் மிக மிகக் குறைவு. அதைத் தொடர்ந்து அவர் ஆடிய உலக சம்பியன்ஷிப் மற்றும் சுப்பர் சீரிஸ் இறுதிப் போட்டிகளில் இரண்டு எதிராளிகளுமே ஜப்பானியர்கள் என்பதையும் அவ்வளவு எளிதில் உதாசீனப்படுத்திவிட முடியாது.

இயல்பாகவே நம் கண்ணில் தென்படும் விட யம், போட்டியின் பாதியிலேயே அவருடைய உடல் சோர்வடைந்துவிடுவதுதான். ஏன்? எதிராளிகள் எல்லாம் இந்த ஒன்றரை மணி நேரத்தில் சோர்வடைவது இல்லையா?" எனக் கேட்கலாம். உண்மைதான். அவர்களும் சோர்வடைகின் றார்கள். ஆனால், சிந்துவைப்போல பாதி நேரம் கடந்தவுடனேயே அவர்கள் சோர்வடைவதில்லை. சிந்துவின் திறமையைக் குறை சொல்வதற்காக இதை இங்கு பதிவுசெய்யவில்லை. சிந்துவின் விளையாட்டுப் பாணி, அவருடைய உடல் சோர்வுக்கு ஒரு காரணமாக அமைகிறது.



சிந்துவின் உயரம், அவருடைய மிகப்பெரிய பலம். ஆட்டக்களத்தில் பந்து எங்கு வீசப்பட்டாலும் அதை எளிதாக எதிராளியிடம் திருப்பிச் செலுத்துவது சிந்துவுக்குக் கைவந்தகலை.

அதுவே சிந்துவின் பலம் என்றுகூட சொல்லலாம். எதிரியின் பலவீனம்தானே நமக்கு பலம்? சிந்துவின் எதிராளிகள் அனைவருமே, அவரைப் பெரிதாக ஓடவிடுவதில்லை. மிக மிகக் குறுகலான கோணங்களில்தான் சிந்துவிடம் பந்து வருகிறது.

ஆதலால், அவர் தன்னுடைய களம் முழுக்க ஓடியாடி விளையாடுவதைவிட, குனிந்து நிமிர்ந்து ஆடுவதே அவசியமாகிறது. அவருடைய உயரம், இதற்கு அவ்வளவாக ஒத்துழைப்பதில்லை.

ஒலிம்பிக் முடிந்த பிறகே, சிந்துவுக்குத் தன்னுடைய உடல் வலிமையையும் ஒத்துழைக்கும் திறனையும் நன்றாக மேம்படுத்துவதன் அவசியம் புரிந்தது.

அன்றுமுதலே அவர் அதற்கான பயிற்சிகளையும் தீவிரமாக எடுத்துவருகிறார்.



அதை அவர் மேலும் மேம்படுத்தினால், சிக்கலான தருணங்களில் அது அவருக்குப் பெரிதும் கைகொடுக்கும். தாக்குதல் பாணி ஆட்டக்காரராகச் சிந்து இருப்பதால், அனைத்து ஷாட்களையும் அவர் மிகுந்த ஈடுபாட்டுடன் அணுகுகிறார். பாதி ஆட்டத்தில் அவருடைய உடல் சோர்ந்துபோவதற்கு இதுவும் ஒரு காரணம்.

வேர்ல்டு சுப்பர் சீரிஸ் இறுதியில் யமாகுச்சியுடன் நடந்த ஆட்டத்திலும் சரி, ஒகுஹாராவுடன் ஆகஸ்டில் நடந்த ஆட்டத்திலும் சரி, பயிற்சியாளர் கோபிசந்த், சிந்துவுக்குக் களத்தில் சொல்லிக்கொண்டே இருந்தது, "சக்தியை வீணாக்காதே... சரியான தருணங்களில் மட்டும் அடித்து ஆடு! என்பதுதான். ஆனால், மிக எளிதாகவே யமாகுச்சியுடன் நடந்த போட்டியில் சிந்து சோர்ந்து போய்விட்டார். யமாகுச்சி, ஆட்டநுணுக்கங்கள் அனைத்திலும் தேர்ந்தவர். அதைவிட அவருடைய பெரிய பலம், இக்கட்டான சூழ்நிலைகளும் சோர்ந்துபோகாத உடற்கட்டும், சக்தியும்தான். இந்த இரண்டு போட்டிகளிலுமே, அவர் தோற்கடிக்கப்பட்டதற்கான காரணம், அவர் கையை மீறிய தவறுகள் அனைத்தும் அவருடைய உடல் சோர்வினால் ஏற்பட்டவைதாம். சிந்துவுக்கு ஏற்கெனவே ஆட்ட நுணுக்கங்கள் அனைத் தும் விரல்நுனியில் உள்ளன. எனவே, ஒரு அத்லெட்டான அவர் தற்போது கவனிக்க வேண்டிய விடயம், உடல் சோர்வடையாமல் காப்பது மட்டுமே. அதற்கேற்ப பயிற்சிகளையும் உத்திகளையும் மாற்றி அமைத்தால், சிந்து சிங்கநடை போடுவார்! (ம)

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : பாசம்
இசை: விஷ்வநாதன் ராமமூர்த்தி
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்
பாடல் வரிகள்: கண்ணதாசன்




உலகம் பிறந்தது எனக்காக
ஓடும் நதிகளும் எனக்காக
மலர்கள் மலர்வது எனக்காக
அன்னை மடியை விரித்தாள் எனக்காக

காற்றில் மிதக்கும் ஒலிகளிலே
கடலில் தவழும் அலைகளிலே
இறைவன் இருப்பதை நான் அறிவேன்
என்னை அவனே தான் அறிவான்

தவழும் நிலவாம் தங்கரதம்
தாரகை பதித்த மணிமகுடம்
குயில்கள் பாடும் கலைக்கூடம்
கொண்டது எனது அரசாங்கம்

எல்லாம் எனக்குள் இருந்தாலும்
என்னை தனக்குள் வைத்திருக்கும்
அன்னை மனமே என் கோயில்
அவளே என்றும் என் தெய்வம்

# சர்வதேச விண்வெளி விஜயம் கைவிரிக்கும் அமெரிக்கா

பூமியின் கடற்பரப்பிலிருந்து 330-450 கிலோமீற்றர் உயரத்தில் அந்தரத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. சர்வதேச விண்வெளி நிலையம் (International Space Station-ISS). மனிதர்கள் வசிக்கத்தக்க வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கும் இந்தப் பெரிய செயற்கைக் கோள் பூமியின் கீழ் வட்டப் பாதையில் மணிக்கு 27,724 கிலோ மீற்றர் வேகத்தில் பயணம் செய்து ஒரே நாளில் 15.54 முறைகள் தன் நீள்வட்டப்பாதையை முழுவதும் சுற்றி வருகிறது. மற்றக் கோள்களைவிட பூமிக்கு மிக அருகிலேயே இருப்பதால், அவ்வப்போது இதை சாதாரண கண்கள் கொண்டே வானில் பார்க்கலாம். பல அழுத்தப் பட்டத் தொகுதிகள், வெளிப்புறத் தட்டுகள், சோலார் தகடுகள் கொண்டு கட்டப்பட்டிருக்கும். இது ரஷ்யாவின் புரோட்டோன் மற்றும் சோயுஸ் ரொக்கெட்டுகள் மற்றும் அமெரிக்காவின் ஸ்பேஸ் ஷட்டில்கள் கொண்டு விண்ணில் 1998 ஆம் ஆண்டு முதல் சிறிது சிறிதாக விண்ணில்ஏவப்பட்டது. 2000 ஆம்ஆண்டு முதல் தொடர்ந்து 17 ஆண்டுகளாக இங்கே ஆராய்ச்சியாளர்கள் இருந்து கொண்டேதான் இருக்கிறார்கள்.

இந்தச் சர்வதேச விண்வெளி நிலையம் உலகின் ஐந்து முன்னணி விண்வெளி நிறுவனங்களான அமெரிக்காவின் நாசா (NASA), ரஷ் யாவின் ராஸ்காஸ்மோஸ் (Roscosmos), ஜப்பானின் JAXA, ஐரோப்பாவின் ESA மற்றும் கனடாவின் CSA போன்றவற்றின் ஆராய்ச்சிகளை நடத்திக்கொள்ளப் பயன்பட்டு வருகிறது. இவ்வாறு பல நாடுகள் சர்வதேச விண்வெளி நிலையத்தைப் பயன்படுத்தி வந் தாலும், நாசாதான் அதிகளவில் அதன் பராமரிப்பிற்காக நிதி ஒதுக்கி வருகிறது. கடந்த 1985 முதல் 2015 ஆம் ஆண்டு வரை மட்டும் நாசா அமெரிக்கா அரசு மூலம் 58.7 மில்லியன் டொலர்களைச் சர்வதேச விண்வெளி நிலையத்திற்காகச் செலவு செய்துள்ளது. 2010 ஆம் ஆண்டின் போது இதன் மதிப்பு 72.4 பில்லியன் டொலர்களாக ஆகிப்போனது. ரஷ்யா 12 பில்லியன், ஐரோப்பா மற்றும் ஜப்பான் தலா 5 பில்லியன், கனடா 2 பில்லியன் என்று மற்ற நாடுகளின் டொலர் கணக்கு இருக்கிறது.



இந்த நிலையில், கடந்த 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அமெரிக்கா இன்னும் 10 ஆண்டு களில் அதாவது 2024 ஆம் ஆண் டுடன் சர்வதேச விண்வெளி நிலையத்திற்காகக் கொண்டு வரப்பட்ட நிதி ஒதுக்கும் ஒப்பந்தம் முடிவுக்கு வருவதாகத் தெரிவித்தது. அதன் பிறகு, நாசாவிற்கு எனப் பிரத்தியேகமாக ஒதுக்கப்படும் நிதி மட்டும் தொடரும் என்றாலும், சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு ஒதுக்கப்படும் நிதி குறித்து வாய் திறக்கவில்லை. சமீபத்தில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், நாசாவிற்கும் அதன் சந்திரன், செவ்வாய் மற்றும் அதைத் தாண்டிய ஆராய்ச்சிகளுக்கும் நிதி ஒதுக்குவதாக அறிவித்தார். அவரும் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு என்று எதையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஒருவேளை, நிதி எதுவும் கிடைக்காத பட்சத்தில், இந்த சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு மூடு விழாதான் நடத்த வேண்டியிருக்கும். ஏனென்றால், ஏனைய நாடுகள் அளிக்கும் நிதியை வைத்து அவ்வளவு பெரிய சர்வதேச விண்வெளி நிலையத்தை நிச்சயம் பராமரிக்க முடியாது.

ஒருவேளை, நாசா தனக்கு அரசு அளிக்கும் நிதியிலிருந்து ஒரு பெரிய தொகையை சர்வதேச விண் வெளி நிலையத்திற்குத் தியாகம் செய்தால், அதன் பணிகள் தொடரலாம். ஆனால், அப்படிச் செய்தால், நாசாவின் தற்போதைய கனவான செவ்வாய்க்கிரகம் தாண்டிய பயணம் நிஜமாகவே கனவாகிப் போய் விடும்.

எனவே, ஒப்பந்தம் முடிந்த பின்பு இதற்கு மூடுவிழா நடத்தாமல், எலான் மஸ்கின் தனியார் விண்வெளி நிறுவனமான ஸ்பேஸ் எக்ஸ் அல்லது விர்ஜின் கலாக்டிக் போன்ற நிறுவனங்களுக்குக் கொடுத்துவிட்டால், அவர்கள் அதைப் பராமரிக்கலாம். எப்படியிருப்பினும், தற்போது முடிவு எடுக்க வேண்டியது நாசாவும், காங்கிரஸும்தான்.

# முதிரா வித்துக்கள்



பாடசாலை என்பது பிள்ளைகள் சமூகமயப்படுத்தும் நிறுவனம். சமூகமயப்படுத்தல் என்பது மாணவர்களை சமூகத்திற்கு பொருத்தப்பாடுடையதாக மாற்றுவது. அவ்வாறே வித்துக்கள் கூட ஒரு குறித்த காலத்தில் சரியான முறையில் பதப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டு வைத்திருந்தால் மாத்திரமே அது பயனைக் கொடுக்கும் பாடசாலையும் பிள்ளைகளை பதப்படுத்தும் ஓர் உற்பத்தி நிறுவனமே. இங்கு வித்துக்கள் என்பது பிள்ளைகளை குறிக்கின்றது.

பிள்ளை ஒன்று குறித்த காலத்திற்குமுன் பாடசாலையை விட்டு வெளியே வரும் போது அது சமூகத்தின் தெருவில் விடப்படுகின்றது. வித்தும் உரிய காலத்திற்கு பிந்தியோ முந்தியோ விதைக்கப்படும் போது அது எதிர்பார்த்த விளைச்சலை தராமல் கருகி விடுகின்றது. அதனால் தான் இக்குறுந்திரைப் படத்திற்கு முதிரா வித்துக்கள் என பெயர் வைத்துள்ளார் இயக்குநர் விமல்ராஜ்.

இவருடைய முன்னைய படைப்பை போன்றே இக்குறுந்திரைப்படமும் சமூகத்திற்கு ஓர் மாற்றத்தை கொண்டு வருமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. பார்வையாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுவரும் இக்குறுந் திரைப்படம் உண்மைச் சம்பவத்தை மையமாக வைத்து தயாரிக்கப்பட்டுள்ளது.

தாய் தனக்கு பிறந்த இரண்டாவது பெண்குழந்தையைப் பராமரிப்பதற்காக பாடசாலையில் கல்வி கற்கும் மூத்த மகளான கலைவாணியை பாடசாலையைவிட்டு இடைவிலக்குகின்றார். தந்தையும் மதுபோதைக்கு அடிமையாகியவராய் அப்பிள்ளையை மலசல கூடத்திற்கு தண்ணீர் எடுத்து வா! என்பதும் காமத்து பசியில் மகளிடமே அம்மா எங்கையடி என்று கேட்டு அந்தப்பிள்ளையின் இடுப்பை தட்டிவிட்டு செல்வதும் பார்வையாளர் மத்தியில் கோபத்தையும் அருவருப்பையும் ஏற்படுத்தும் என்பதிலும் ஐயமில்லை. இவ்வாறு செய்கின்ற தந்தைமார் இக்குறுந்திரைப்படத்தை பார்த்தால் நிச்சயம் மனம் மாறவேண்டும். இல்லாவிட்டால் அவர்களை மனிதர்களுக்கு சமமானவராகக் கருத முடியாது. இப்பாத்திரத்தை ஏற்ற கிறிஸ்தோப்பர் மிகவும் அருமையாக நடித்துள்ளார்.

தாய் பணத்திலுள்ள மோகத்தால் பிள்ளையை கவனிக்காது வெளியில் செல்வதும் படிக்க ஆசைப்படும் கலைவாணியை ஒவ் வொரு வேலைகளைச் சொல்லி துன்புறுத்துவதும் காட்சிகளில் மிகவும் வேதனையாக அமைகின்றது.

நன்றாக படிக்கும் மாணவியாக பிரதான கதாப்பாத்திரம் ஏற்று நடித்திருக்கும் தமிழரசியின் (கலைவாணி) இயல்பான நடிப்பும் வீதியால் பாடசாலைச் சீருடையுடன் வரும் இவருடைய நண்பி அவரை பாடசாலைக்கு வருமாறு கூறும் போது அவளின் இயல்பான பேச்சும் எமது மொழியின் தனித்துவத்தை வெளிப்படுத்துகின்றது.



இயக்குநர் விமல்ராஜ்

# குறுந்திரைப்பட விமர்சனம்



ஒரு காட்சியில் பல அர்த்தங்களைக்கூறும் இக்குறும்படத்தின் திரைக்கதையை இயக்குநர் விமல்ராஜ் மிக அழகாக செதுக்கியுள்ளார். மது அருந்தி வெற்றிலை வாயுடன் வீட்டுக்குவரும் தந்தை மகளிடம் தண்ணீர் எடுத்து வா! எனக்கூறும்போது பார்வையாளர்கள் குடிக்கத்தானே என எண்ண முதல் மலசலகூடத்திற்கு மகள் தண்ணீர் எடுத்துச் செல்கின்றார். இடையில் சந்திக்கும் நண்பி எங்கையடி போறாய் எனக் கேட்கிறார். அப்போது 'அம்மாக்கு சீட்டுக்காசு கட்டப்' போறனென்று கூறுவதும் பெற்றோர் ர்கள் வறுமையால் பிள்ளைகளை பாடசாலையை விட்டு இடைவிலக்கவில்லை. தமது சுகத்திற்காகவே நிறுத்தியுள்ளனர் என்பதையும் ஒரு வார்த்தையில் விளக்கப்படுத்தியுள்ளார்.

இப்படத்தின் ஒளிப்பதிவு மிக அருமை. எமது நாட்டு சினிமாவை பாரக்கக் கூடியதாக இருக்கின்றது. படத்தொகுப்பிலும் ஒலிப்பதிவிலும் ஓரளவு கவனம் செலுத்த வேண்டும். தேவையான இடத்திற்கு பொருத்தமான இசையை த.ஸ்ரலின் மிக அருமையாக வழங்கியுள்ளார்.

மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும் இக்குறுந்திரைப்படத்தை அனைத்து பெற்றோர்களும் பார்த்து முதிரா வித்துக்களை முதிர்ந்த வித்துக்களாக மாற்றவேண்டும்.

கெனத்




தமிழ் சினிமாவில் ஒரு சில நடிகர்கள் படங்கள் வந்தாலே திரையரங்க உரிமையாளர் முதல் தியேட்டருக்கு வெளியே டீக்கடை போட்டு இருப்பவர் வரை திருப்திப்படுத்தும். அப்படி தொடர்ந்து 9 படங்கள் ஹிட் கொடுத்த சிவகார்த்திகேயன் 10ஆவது படமான வேலைக்காரனிலும் ஹிட் அடித்தாரா? பார்ப்போம்.

சென்னையில் உள்ள கொலைக்கார குப்பத்தில் வாழ்பவர் சிவகார்த்திகேயன். அந்த இடத்தில் எல்லோரும் பிரகாஷ் ராஜின் கண்ட்ரோலில் அடிதடி என வேலைப்பார்த்து வர. இது சிவகார்த்திகேயனுக்கு கோபத்தை ஏற்படுத்துகின்றது.

நம் கண்முன்னே ஒரு சமுதாயம் கெட்டு போவதை பார்க்கும் அவர். ஒரு ரேடியோ ஐடியா மூலம் ஒரு சில வேலைகளை பார்க்கின்றார். ஆனால், அது பிரகாஷ்ராஜுக்கு கோபத்தை ஏற்படுத்த அந்த ஐடியாவை இழுத்து மூடி ஒரு சேல்ஸ் வேலைக்கு செல்கின்றார்.

அந்த கம்பெனியில் சிவகார்த்திகேயன் வளர்ச்சிக்கு பஹுத் பாசில் பல விதங்களில் உதவுகின்றார். HardWork தேவையில்லை. ஸ்மார்ட் Work தான் முக்கியம் என்று சிவகார்த்திகேயன் புரிந்து வேலை செய்ய, ஒரு கட்டத்தில் தன்னால் இந்த சமுதாயம் எத்தனை பெரிய பிரச்சினையை சந்திக்கவிருக்கின்றது என்பதை உணர்கின்றார்.

அதைத் தொடர்ந்து ஒருவன் Hard Work, ஸ்மார்ட் Work என எதுவும் செய்ய தேவையில்லை. Good Work செய்தால் போதும் என்பதை சிவகார்த்திகேயன் பல முதலாளிகளுக்கு எடுத்துக்காட்டுவதே இந்த வேலைக்காரன்.

சிவகார்த்திகேயன் முதன் முதலாக தன் எல்லையை மீறி இறங்கி அடித்துள்ளார். தான் நினைத்தால் இரண்டு காமெடி. மூன்று பாட்டிற்கு டான்ஸ் ஆடி படத்தை ஓட்டி விடலாம் என்றில்லாமல், மக்களுக்கு தேவையான ஒரு கதைக் களத்தை எடுத்து கலக்கியுள்ளார். காமெடி என்றில்லாமல் சீரியஸ் காட்சிகளில் பல இடங்களில் அசத்தியுள்ளார். அதிலும் தன் வீட்டிலேயே பொருளை விற்க வரும் மார்க்கெட்டிங் பாய் அப்துலிடம் பேசும் காட்சிகள் எல்லாம் சுப்பர் சிவா.

பஹுத் பாசிலும் தமிழ் சினிமாவிற்கு நல்ல வரவேற்பு, கடைசி வரை சட்டை கூட அழுக்கு ஆகாமல் அலட்டிக்கொள்ளாமல் நடித்துள்ளார். இவர்களை தவிர படத்தில் மினி கோடம்பாக்கமே இருக்கின்றது. ஆனால், சார்லி. ரோகினி. விஜய் வசந்த் தவிர பெரிதும் யாரும் மனதில் பதியவில்லை.

படத்தின் கதைக்களம் இன்றைய மக்களின் அடிப்படை தேவைகள் அதிலும் ஒரு மிடில் க்ளாஸ் மக்களை எப்படி ஒரு மார்க்கெட்டிங் செய்து தங்கள் பொருட்களை பெரிய கம்பெனிகளை வாங்க வைக்கின்றார்கள் என்பதை க்ளாஸ் எடுத்துள்ளார் மோகன்ராஜா. அதிலும் பஹுத் பாசில் ஒரு காட்சியில் சுப்பர் மார்க்கெட்டில் எந்த பொருள் எங்கே இருக்க வேண்டும் என்பதை விளக்கும் காட்சி ஒரு நொடி புருவம் உயர்த்த வைக்கின்றது.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்கள், சாப்பிடும் திண்பண்டங்கள் என அனைத்திலும் இத்தனை அரசியல் உள்ளதா? என்பதை நம்மையே அச்சப்படுத்துகின்றது. அதற்கு படத்தின் வசனமும் மிகப்பெரிய பலம், அத்தனை பவர்புல்லாக இருக்கின்றது.

முன்பு நாம் தவறு என்று பயந்து செய்த விஷயத்தை இந்த தலைமுறை மிக சந்தோஷமாக கொண்டாடி செய்கின்றது.

அனிருத்தின் இசையில் கருத்தவெல்லாம் கலீஜா தாண்டி எதுவும் மனதில் நிற்கவில்லை. பின்னணியிலும் கொஞ்சம் தடுமாறியுள்ளார். ராம்ஜியின் ஒளிப்பதிவில் செட் போட்டு எடுத்து குப்பம் கூடரியலாக தெரிகின்றது.

படத்தின் கதைக்களம் மற்றும் வசனங்கள்.

சிவகார்த்திகேயன், பஹுத் பாசிலின் நடிப்பு, ராம்ஜி ஒளிப்பதிவு. ஆர்ட் Work பற்றி சொல்லியே ஆகவேண்டும், ஒரு இடத்தில் கூட செட் என்று தெரியவில்லை.

இத்தனை வலுவாக கதைக்களம், வசனம், நடிகர்கள் அமைந்தும் திரைக்கதையில் கொஞ்சம் விறுவிறுப்பு குறைவு.



வேலைக்காரன் என்னைக்கும் முதலாளியை நம்புகிறான். ஆனால், முதலாளி தான் நம்மை நம்பாமல் கேமரா வைத்து நம்மை நோட்டமிடுகின்றான் என்ற வசனம் எல்லாம் விசில் பறக்கின்றது. அதே சமயம் வசனத்திற்கு கொடுத்த முக்கியத்துவத்தை கொஞ்சம் தனி ஒருவன் போல் திரைக்கதையிலும் காட்டியிருக்கலாம்.

நயன்தாரா மற்றும் பல முன்னணி நடிகர்கள் படத்தில் எதற்காக இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

மொத்தத்தில் வேலைக்காரன் இனி ஒரு பொருள் வாங்கும் முன் ஒரு நொடி எல்லோரையும் யோசிக்க வைத்து விடுவான்.




இலங்கையின் "முன் மருத்துவமனை பராமரிப்பு" சேவையின் மாபெரும் புரட்சியில்

நீங்களும் பெருமையுடன் ஒன்று சேருங்கள்!

1990 සුව සැරිය
அவசர வேளையில்




1990 சுவ செரிய ஆம்புலன்ஸ் சேவையானது இலங்கையின் "முன் மருத்துவமனை பராமரிப்பு ஆம்புலன்ஸ்" சேவைகளின் முன்னோடியாக காணப்படுகிறது. இந்திய அரசின் அனுசரணையுடன் இலங்கையின் மேல் மற்றும் தென் மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்ட இச்சேவையானது 88 ஆம்புலன்ஸ் வண்டிகள் மற்றும் 500 இலங்கை ஊழியர்களுடன் சிறப்பாக தொழிற்பட்டுக்கொண்டிருக்கிறது.

தற்போது இலங்கை அரசானது இச்சேவையை நாட்டின் எல்லாபாகங்களுக்கும் விஸ்தரிக்கும் முகமாக "1990 சுவ செரிய அறக்கட்டளை" என்ற அமைப்பை நிறுவியுள்ளது. இந்திய அரசினால் மேலும் 209 ஆம்புலன்ஸ் வண்டிகள் இச்சேவைக்காக வழங்கப்பட்டுள்ளன.

இந்த மகத்தான சேவையில் நீங்களும் பங்குபெற விரும்பினால் கீழ கண்ட வெற்றிடங்களுக்கு விண்ணப்பியுங்கள்.

- பொருத்தமான விண்ணப்பதாரர் கீழ்வரும் தகுதிகள் மற்றும் பண்புகளை கொண்டிருக்க வேண்டும்

**அவசர மருத்துவ தொழில்நுட்பவியலாளர் (EMT)**

650 வெற்றிடங்கள்

- வயது 35 இற்கு குறைந்தவராக இருத்தல்
- க.பொ.த. உயர்தரத்தில் உயிரியல் விஞ்ஞானபிரிவில் சித்தி, அல்லது வேறு பாடபிரிவில் சித்தியுடன் தாதியர் அல்லது சுகாதாரம் சார்ந்த துறையில் சான்றிதழ் அல்லது டிப்ளோமா
- ஆங்கிலத்தில் சிறப்புத்தேர்ச்சி
- மாறுபட்ட நேரங்களில் பணியாற்ற விளைதல்
- குழுவாக தொழிற்படக்கூடிய நேர்மறை எண்ணங்களுடையவராயிருத்தல்
- அவசர மருத்துவ தொழில்நுட்பவியலாளராக முன் அனுபவம் பெற்றிருத்தல் சிறப்பு தகுதியாக கருதப்படும்

மேற்குறிப்பிட்ட அடிப்படை தகைமைகளை உடைய விண்ணப்பதாரர்கள் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் கீழ் உள்ள விலாசத்திற்கு விண்ணப்பங்களை தபாலில் அல்லது careers@1990.lk எனும் மின்னஞ்சலில் அனுப்பவும்

**அம்புலன்ஸ் வண்டி சாரதி (Pilot)**

650 வெற்றிடங்கள்

- வயது 35 இற்கு குறைந்தவராக இருத்தல்
- க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி
- கனரக வாகன அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல்
- இத்தொழிலில் குறைந்தது 2 வருட அனுபவம் பெற்றிருத்தல்
- மாறுபட்ட நேரங்களில் பணியாற்ற விளைதல்
- குழுவாக தொழிற்படக்கூடிய நேர்மறை எண்ணங்களுடையவராயிருத்தல்

விண்ணப்பிக்கும் போது கடித உறையின் இடது மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலில் subject line இல் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுங்கள்

மனிதவள மற்றும் முகாமைத்துவ மேலாளர், GVK EMRI LANKA இலக்கம் 415, கோட்டே வீதி, ராஜகிரிய

GVK EMRI LANKA

# நல்லிணக்க தகனம்!



நல்லாட்சி அரசு என்று சொல்லும் இந்த அரசு பொறுப் பேற்றது முதல் நல்லிணக்கம் பற்றி அதிகம் பேசிவருகிறது.

முரண்பட்ட இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த சில ஆக்கபூர்வ மான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இதனை நாட்டு மக்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

மக்களால் உருவாக்கப்பட்ட அரசு , மக்கள் சுதந்திரமாக, சமாதானத்துடன் வாழ வழி வகைகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

இலங்கையில் முப்பது ஆண்டுகள் நீடித்த உள்நாட் டுப் போர் சமாதானத்திற்கு பாரிய சவாலாக அமைந் திருந்தது.

மக்கள் சுதந்திரமாக நடமா டும் சூழ்நிலையை முற்றாக மறுத்திருந்தது. எங்கு பார்த்தாலும் இராணுவ முகாம்களும் வீதிச் சோதனைச் சாவடிகளும் துன் பத்தைக் கொடுத்தன.

மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளி யேறினர். பச்சிளம் குழந்தைகள் முதல் வகை தொகையின்றி கொன்றொழிக்கப்பட்டனர்.

நாடளாவிய ரீதியில் உயிர்ச்சேதம் ஏற்பட்ட போதும் இன அழிப்பிற்கு உள்ளானது தமிழினமே!

வடக்கை மையப்படுத்தி நடந்த இறுதிப் போரில் மட்டும் ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் உயிரிழந்தனர்.

இவ்வாறு சொல்லொனாத் துன்ப துயராங் களை அனுபவித்த தமிழ் மக்கள் மாற்றத்தை ஏற்படுத்த நினைத்து மைத்திரிக்கு வாக்க ளித்து மகிந்த ஆட்சிக்கு முடிவுகட்டினர்.

தமிழ் மக்களின் வாக்குப் பலத்தால் பெரும்பான்மை பெற்ற மைத்திரி ஜனாதிப தியாக பதவியேற்று மூன்றாண்டுகள் ஆகப் போகின்றது.

தமிழ் மக்களால் பெரும்பான்மைப் பலம் பெற்றவர் பெரும்பான்மை மக்களுக்கு மட்டுமே ஜனாதிபதியாக செயற்பட்டார் என்ற விமர்சனத்திற்கு அப்பாற்பட வில்லை.

இதேவேளை நல்லிணக்கம் என்பது நல்லாட்சி போன்று சொல்லில் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படு வதை நாட்டு மக்கள் நன்குணர்ந்துள்ளனர்.

போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மைத்திரி - ரணில் தலைமையிலான இந்த அரசு மீது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தி வருவது இதற்கு தக்க சான்று.

மகிந்த ஆட்சிக்காலத்தில் இன அழிப்புக் குள் ளான தமிழர்களுக்கு மைத்திரி ஆட்சியில் விமோசனம் கிடைக்கும் என்று நம்பினர். ஆனால், நம்பிக்கைத் துரோகத்தை எதிர் கொண்டு மேலும் நலிவுற்ற சமூகமாக மாற்றப்பட்டுள்ளனர். மகிந்த ஆட்சிக் காலத்தில் தமிழ் அரசியல் வாதிகளிடம் இருந்த ஒற்றுமையையும் இந்த ஆட்சிக் காலத்தில் இழந்து விட்டோம்.

தமிழ் அரசியல்வாதிகள் மக்கள் போராட்டங் களில் கலந்துகொண்டு காட்டிய ஆர்வத்தை இப்போது எங்கும் காணமுடியவில்லை.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை முற்றாகக் குலைக்கப்பட்டது தான் மைத்திரி - ரணில் ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்கள் அடைந்த பெரும் துன்பம் எனலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழ விடுத லைப் புலிகளால் உருவாக்கப்பட்டது. இதனை யாரும் மறுக்க முடியாது.

தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இதுவரை காலமும் வழங்கிவந்த ஆதரவுக்கும் விடுதலைப் புலிகளே வித்திட்டவர்கள்.

தமிழின் விடுதலைக்காக பாடுபட்டவர்கள் உருவாக்கியதால் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பிற்கு மக்கள் ஆதரவு கிடைத்தது என்பதை அக்கட்சியினர் ஏனோ மறந்து செயற்படுகின்றனர்.

தமிழ் மக்களின் வாக்குகளின் மூலம் பதவிக்கு வந்தவர்கள் அந்த மக்களின் நலனுக்காகக் குரல்கொடுக் கத் தயங்குவது பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பு அரசிற்கு ஆதரவளித்து செயற்படும் தமிழ்த் தலைமைகள் சிலர், தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடு களில் தீவிரம் காட்டுவதோடு , தமிழ் மக்களுக்குச் சார்பாக அவர்களின் உரிமைகளை வென்றெடுக்க குரல்கொடுப் பவர்களையும் அப்புறப்படுத்த வேண்டும் என்று அயராது பாடுபடுகின்றனர்.

மகிந்த ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்கள் பட்ட துன்பம் தற்போது இல்லை. அதற்கு தற்போது ஆட்சியில் உள்ளவர்கள்தான் காரணம் என்று சொல்ல முடியாது. அல்லது மைத்திரியை ஆட்சிக்கு கொண்டுவந்தது நாங்கள்தான் என்று உரிமைகோருபவர்களும் சொல்ல முடியாது.

தமிழர்கள் இந்த நாட்டில் நிம்மதியாக இருந் தால் தான் சிங்களவர்கள் நிம்மதியாக இருக்க முடியும் என்று ஆட்சியாளர்கள் நன்குணர்ந் துள்ளனர். அதற்காக சில நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றனர்.

அதேவேளை நல்லிணக்கத்தை குழப்புவதற்கு பெரும்பான்மைச் சமூகத்தினர் எடுத்துவரும் நடவடிக் கைகளைக் கண்டும் காணாமல் இருப்பது பாரிய சிக்கல்களை ஏற்படுத்தும்.

யாழ்ப்பாணம் நாகவிகாரையின் விகாராதி பதியாக



இருந்த யதுரே ஞானசார தேரரின் இறுதிச் சடங்கு (நேற்று முன் தினம் மாலை) யாழ். முற்றவெளிப் பகுதியில் இடம்பெற்றது இந்தச் சிக்கல்களுக்கு வித்திட்டுள்ளது.

இலங்கை அரசின் இன நல்லிணக்க முயற்சிகளைக் கேள்விக்குட்படுத்தியுள்ள தோடு இராணுவமும் பௌத்த துறவிகளும் நினைத்தால் எங்கு வேண்டுமென்றாலும் எதை வேண்டுமென்றாலும் செய்து முடிப்பார்கள். அதை யாரும் தடுக்க முடியாது என்பதை இந்த இறுதிச் சடங்கு இறுமாப்புடன் வெளிப்ப டுத்தியுள்ளது.

வடக்கு-கிழக்கு தமிழர் தாய கம் என்றும் இங்கு பௌத்த விகா ரைகளை அமைப்பதை நிறுத்த வேண்டும் என்றும் வலுக்கட்டாய மாக பௌத்தத்தை திணிப்பது இன நல்லிணக்கத்தைச் சீர் குலைக்கும் என்றும் தமிழ் மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

பௌத்த மதத்திணிப்பு நல்லி ணக்கத்திற்கு பெரும் தடையாக வுள்ளதை ஆட்சியாளர்கள் அறிந் திருந்தும் பௌத்த பிக்குவின் இறுதிச் சடங்கை தமிழ் மக்களின் மனங்கள் நோகும் படியாக படைத் தரப்பின் பலத்த பாதுகாப்புடன் நடத்த வேண்டிய தன் அவசியம் என்ன?

யாழ். நாகவிகாரையில் விகாராதிபதியாக இருந்த வர் என்பதால் யதுரே ஞானசார தேரரின் இறுதிக் கிரியைகளை யாழில் செய்ததாக நியாயப்படுத்த முற்படலாம். அதை ஏற்றாலும்கூட, முற்றவெளியில் இறுதிக் கிரியைகள் நடத்தியதை ஏற்கமுடியாது.

கொழும்பில் இந்துக் கோவில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், முஸ்லிம் பள்ளிவாசல்கள் உள்ளன.

உதாரணத்திற்கு இந்துக் கோவிலில் பல ஆண்டுகாலமாக பூசகராக இருந்தவர் என்ப தற்காக அவரின் இறுதிக் கிரியை மக்கள் நடமாடும் அல்லது பொது இடத்தில் நடத்த சட்டம் இடம்கொடுக்குமா? அல்லது ஆயுதப் படைகள், பௌத்த பிக்குகள் விடுவார்களா?

தமிழர்களை நாட்டைவிட்டே விரட்ட வேண்டும் என்று கொந்தளிப்பார்கள். இரத்த ஆறு ஓடும் என்று எச்சரிப்பார்கள். சொத்துக் களைச் சூறையாடுவார்கள், பெரும் கலவரங் களைத் தோற்றுவிப்பார்கள்.

என்ன செய்வது இது சிங்கள பௌத்த நாடு என்பதை தமிழ்த் தலைமைகளே வலியச் சென்று ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றனரே!

இப்படிப்பட்டவர்கள் தமிழ்த் தலைமை களாக இருந்தால், வாக்களிக்கும் இயந்திர மாக மட்டுமே தமிழர்கள் வாழமுடியும்.

உரிமைகள் பற்றியோ? உரிமைகளைப் பறிப்பதைப் பற்றியோ? பேச முடியாது. தமிழி னம் இன்னும் அழிவுப் பாதையை நோக்கியே பயணிக்க நேரிடும் என்பதே உண்மை.

**எஸ்.ஆர்.கரன்**

facebook®

# காவல்காரன்




பஞ்சமி நாட்டின் மன்னர் பஞ்சோபகேசன். இவர் புதிதாக அமைத்த அழகிய தென்னந் தோப்பைக் காவல் காக்க, பொறுப்பான ஆள் தேவை. அந்த வேலையை யாரிடம் ஒப்படைக்கலாம் என யோசனை செய்தார். அப்போது அவனுக்கு, விவேகன் நினைவு வந்தது. அரசவை கோமாளியான அவன் அங்கும், இங்கும் சுற்றி வருகிறான். எந்த வேலையும் செய்வது இல்லை. அவனுக்கு இந்த வேலையை கொடுப்பது என்று முடிவு செய்தார்.

இந்த நிலத்தில் தென்னங்கன்றுகள் நடப் போகிறோம். இவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பு உன்னுடையது. இந்தக் கன்றுகளை இரவிலும், பகலிலும் நன்றாக பார்த்துக் கொள்ள வேண்டும். கவனமாக நடந்து கொள்,என்றார்.

அரசே! நீங்கள் சொன்னது போலவே நடந்து கொள்வேன், என்றான் விவேகன்.

அங்கே தென்னங்கன்றுகள் நடப்பட்டன. அவற்றிற்கு காவல் இருக்கத் தொடங்கினான் விவேகன்.

பகல் வேளையில், அவற்றைப் பார்த்துக் கொள்வது அவனுக்கு எரிச்சலாக இருந்தது. இரவு வந்தது. வீடு செல்ல வேண்டும். தென்னங்கன்றுகளையும் பார்த்துக் கொள்ள வேண்டும். என்ன செய்வது என்று சிந்தித்தான். நல்ல வழி ஒன்று அவனுக்குத் தோன்றியது.

தென்னங்கன்றுகளை எல்லாம் பிடுங்கி, ஒன்றாகக் கட்டினான். அவற்றைத் தூக்கிக் கொண்டு, தன் வீட்டிற்கு வந்தான். தன் கண் பார்வையிலேயே அவற்றை வைத்திருந்தான்.

பொழுது விடிந்தது. அந்தக் கன்றுகளைத் தூக்கிக் கொண்டு நிலத்திற்கு வந்தான். முன்பு இருந்தது போலவே அவற்றை நட்டு வைத்தான். பொழுது சாய்ந்ததும் அவற்றைப் பிடுங்கி எடுத்துக் கொண்டு, தன் வீட்டிற்குச் சென்றான். இப்படியே தொடர்ந்து நடந்து வந்தது.

ஒரு வாரம் சென்றது-

தென்னங்கன்றுகள் எப்படி இருக்கிறது என்று பார்ப்பதற்காக அரசர் அங்கு வந்தார்.

தென்னங்கன்றுகள் அனைத்தும் வாடிக்கிடப்பதைப் பார்த்தார்.

கோபம் கொண்ட அவர், “நீ பொறுப்பாகத் தென்னந் தோப்பைக் காவல் காப்பாய் என்று உன் பொறுப்பில் விட்டேன். எல்லாக் கன்றுகளும் வாடிக் கிடக்கின்றன. என்ன செய்தாய்?” என்று கத்தினார்.

அரசே! நீங்கள்தான் இவற்றைப் பகலிலும், இரவிலும் நான் காவல் காக்க வேண்டும் என்றீர்கள். இரவில் நான் இவற்றை வீட்டிற்கு எடுத்துச் சென்று பாதுகாத்தேன். பகலில் மீண்டும் இவற்றை இங்கே நட்டேன். நீங்கள் சொன்னது போலவே நடந்து கொண்டேன். இவை ஏன் வாடி விட்டன! என்று எனக்கும் தெரியவில்லை,” என்றான்.

இதைக் கேட்ட அரசர், “இவனிடம் போய் இந்த வேலையை கொடுத்தோமே...“ என்று தலையில் அடித்துக் கொண்டார்.

அப்பாடா! தப்பித்தோம்!“ என, பெருமூச்சு விட்டான் விவேகன்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1286

### கவிமாறன் சிவா

லவ் பண்றவன கேட்டா... அரேஞ் மாரேஜ் நல்லதுங்குறான்...
அரேஞ் மாரேஜ் பண்ணவன கேட்டா லவ் மாரேஜ் நல்லதுங்கறான் .



ம்... பேசாம அதுல ஒண்ணு... இதுல ஒண்டு பண்ணிட வேண்டியதுதான்!

### மயூதரன்

இவ்வுலகில் நல்லவர்கள் என்று யாருமேயில்லை என்று கவலைப்பட்டேன்...



சற்று முன்னர் கண்ணாடியை பார்த்தேன் அந்தக் கவலை நீங்கியது...!

### லொலிப்பப் விதுசன்

அதெல்லாம் ஒரு காலம்! நானெல்லாம் சின்ன பையனா இருந்தப்ப 5 ரூபா வச்சிக்கிட்டு கடை தெருவ சுத்தி வந்தா கை நிறைய பொருளோடதான் வீட்டுக்கு வருவேன்



இப்பதான் எல்லாக் கடையிலயும் கமரா வச்சிட்டாங்க

### லதுசன் சச்சி

மகன்: கணக்குப் பாடம் சொல்லித்தாங்கப்பா
அப்பா: எனக்கு கணக்குத் தெரியாதுப்பா எங்கப்பா அம்மா என்னை படிக்க வைக்கல...



மகன்: உங்களுக்கு மட்டும் எவ்வளவு நல்ல அப்பா அம்மா கிடைச்சிருக்காங்க

### ஜனுசன்

சிலருக்கு மனைவி
"தேவயானி" போலவும்
சிலருக்கு மனைவி
"தேவையா...? நீ"
போலவும்
அமைந்து விடுகிறது

### ராகுலன்

மகன்: அப்பா இந்த சங்கு சக்கரம் பத்திக்கவே மாட்டேங்குது
அப்பா: டேய் மெதுவா பேசுடா.. அது சங்கு சக்கரம் இல்ல... உங்கம்மா செஞ்ச முறுக்கு
அம்மா:... (செத்தான்சேகரு)



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 114

## கர்ப்பிணிப் பெண்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டிய விடயங்கள்





### முதல் 3 மாதங்கள்

- போலிக் அசிட்டை மட்டும் தவறாமல் ஒவ்வொரு நாளும் எடுங்கள். (மூளைக் குறைபாடுடைய குழந்தைகள் பிறப்பதனைத் தடுப்பதற்கு இது மிகவும் அவசியமானதொன்றாகும்)
- எக்ஸ்றே எடுக்க வேண்டாம்.
- மருத்துவர்களின் ஆலோசனைகள் இல்லாமல் ஏனைய மருந்துகளை எடுக்க வேண்டாம்.
- வாந்தி எடுத்தல் சாதாரண நிகழ்வாக இருந்தாலும் தாங்க முடியாத வாந்தியாக இருப்பின் வைத்தியரை அணுகவும்.

### அடுத்த 3-6 மாதங்கள்

- அயன், விற்றமின் சி, கல்சியம் ஆகிய குளிசைகளை எடுப்பதுடன் போலிக்கசிற்றைத் தொடர்ந்து உட்கொள்ளவும்.
- 20 கிழமைக்கு முன்னர் scan பண்ண வேண்டும்.
- ஏற்புத் தடுப்பு மருந்து ஊசி குடும்பநல மாது/வைத்தியரின் ஆலோசனைகளுடன் போடப்படல் வேண்டும்.
- இறுதி 6-9 மாதங்கள்
- உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்ல நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய விடயங்களைக் கவனத்திற் கொள்ளவும்.

**கர்ப்பிணிக் காலத்தில் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய விடயங்கள்**

- தாங்க முடியாத வயிற்று வலி இருத்தல்.



- வயிற்றுவலி இருந்தாலோ இல்லாவிட்டாலோ யோனி வழியில் இருந்து இரத்தம் போதல்.
- யோனி வழியில் இருந்து நீர் போதல்
- தலையிடி, தலைச் சுற்று, கண்பார்வை மங்குதல், நெஞ்சுவலி, மூச்சு விடுவதில் சிக்கல், முகமும் கை காலும் வீங்குதல், வாந்தி எடுத்தல்.
- மருந்து எடுத்த பின்னரும் காய்ச்சல் மூன்று நாட்களை விடக் கூடுதலாக இருத்தல்.
- வயிற்றுக்குள் இருக்கும் குழந்தையின் துடிப்புக் குறைதல் அல்லது இல்லாதிருத்தல்

**தயவுசெய்து கீழே தரப்பட்ட விடயங்களை வாசித்து விளங்கிக்கொள்ள முயற்சிப்பது சாலச் சிறந்ததாகும்.**

- நீங்கள் கருத்தரித்திருப்பதை முதல் முறையாக அறிந்ததும் இதனை குடும்பநல மாதிடம் அறிவித்து பதிவுசெய்து கொள்ள வேண்டும்.
- உரிய திகதிகளில் கிளினிக்கிற்கு வருவதுடன் பதிவேடுகளையும் முதற் பிள்ளைகளின் பதிவேடுகளையும் மற்றும் தங்களுடைய ஏனைய மருத்துவக் குறிப்புப் புத்தகங்களையும் அவசியம் கொண்டு வரவும்.
- உரிய திகதிகளில் குறித்த நேரத்திற்கு நேரம் தவறாமல் வருவதற்கு முயற்சிக்கவும்
- உங்களுக்கு கடைசியாக வந்த மாதவிடாய்த் திகதியில் சந்தேகம் வந்தாலும் அல்லது ஒழுங்கில்லாத மாதவிடாய் வந்தாலும் இவற்றை குடும்பநல மாதிடமும் வைத்தியரிடமும் முதல் முறை செல்லும் கிளினிக்கில் அறிவிக்க வேண்டும்
- நீங்கள் கருத்தரித்திருப்பின் 07-12 வாரங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் முதற் தடவையாக Scan செய்து கொள்வது சிறந்ததாகும். எனினும் முதல் 20 வாரங்களுக்குள் ஒரு தடவையேனும் Scan செய்திருத்தல் அவசியமாகும்.
- கிளினிக்கில் கொடுக்கப்படும் திரிபோஷாவை பிரதான உணவாக பயன்படுத்த வேண்டாம். திரிபோஷாவை உப உணவாக ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் பயன்படுத்த வேண்டும்.
- நீங்கள் பிள்ளைப் பேற்றுக்குத் தேவையான உடைகளையும் பொருட்களையும் தயார் செய்து வைத்தால் அவசரமாகப் பிள்ளை பிறக்கும் போது பெரும் உதவியாக இருக்கும்.



- உங்களது குழந்தைக்கு பீ.சீ.ஜீ (B.C.G) வக்சின் ஏற்றியதா? இல்லையா? என்பதைப் பற்றி நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.
- தாயின் யோனி வழியில் உள்ள வெட்டு தைத்த பின்னர் உள்ள காயமும் குழந்தையின் தொப்புளை சுற்றியுள்ள காயமும் விரைவில் காய்ந்துவிடும். மருந்துகள் எவற்றையும் பூச வேண்டியதில்லை. அவற்றினைச் சுத்தமாகவும் நீரில் கழுவிய பின்னர் உலர்வாகவும் வைத்திருந்தாலே போதுமானதாகும்.
- சத்திர சிகிச்சையின் பின்னரான வெட்டுக்காயம் குணமாவதற்கு தரப்படும் குளிசைகளைப் பாவிப்பதுடன் காயத்தினைச் சுத்தமான நீரினால் கழுவிய பின்னர் உலர்வாக வைத்திருப்பது அவசியமாகும். ஆனால் காயத்தில் இருந்து சீழ்வடிவு இருப்பின் வைத்தியரை அணுகவும்.
- குழந்தை பிறந்த பின்னர் முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பாலை மட்டும் குழந்தைக்கு கொடுக்க வேண்டும். ஆறு மாதங்களுக்குப் பின்னர் தாய்ப்பாலுடன் மேலதிக சத்துணவுகளை கொடுக்க வேண்டும். ஒரு வருடத்தின் பின்னர் பெரியவர்கள் உண்ணும் உணவைச் சேர்க்க வேண்டும். தாய்ப்பாலை இரண்டு வருடங்கள் தொடர்ந்து கொடுக்கலாம்.
- விடுதியில் இருந்து வீடு செல்லும் போது குழந்தையின் பிறப்பு பதிவு செய்வதற்கான நடைமுறைகளை விடுதித் தாதியரிடம் அறிந்து கொள்ளவும்.
- குழந்தை பிறந்த பின்னர் எதிர்பார்க்க முடியாத கருத்தரிப்பைத் தடுப்பதற்கு குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளில் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அது தொடர்பான விளக்கங்களை குடும்பநல மாதுக்களிடம் அல்லது வைத்தியர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளத் தயங்க வேண்டாம்.
- உங்களுடைய கர்ப்பத்தின் பின்னரான காலங்களில் நீங்கள் பெற்றுக்கொண்ட மிகவும் சரியான விளக்கங்களை அல்லது அனுபவங்களை மட்டும் ஏனைய கர்ப்பிணித் தாய்மார்களிடம் பகிர்ந்து கொள்ளவும்.

மகப்பேற்று கிளினிக்
யாழ். போதனா வைத்தியசாலை

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்